190.

# ஐக்கிய அரசு

மலர்-1 இதழ்-2

பிப்ரவரி - 1934.

JL
VINM, N34Ik.
N34.1.2.
148726.

# ஐக்கிய அரசு

## (Co-operative Commonwealth) ١٣٥

MONTHLY ORGAN OF

THE YOUNG CO-OPERATORS LEAGUE

மலர் 1. பிப்ரவரி. இதழ் 2.

பொருளடக்கம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
7-APR 1934
MADRAS

| | | பக்கம். |
|---|---|---|
| 1. | புத்தகாலய இயக்கம் | 2 |
| 2 | கூட்டுறவு தர்மம் | 5 |
| 3. | ஐக்கிய டென்மார்க்கு | 13 |
| 4. | இந்தியாவில் ஐக்கிய ஆட்சி | 18 |
| 5. | நகர பாங்குகள் மகா நாடு | 23 |
| 6. | மாணவர்களே! புத்துயிர் அளிப்பீர்! | 26 |
| 7. | வெளவன கூட்டுறவாளர் சங்க விழா | 28 |
| 8. | மத்திய பாங்கு மகாஜன சபைக்கூட்டம் | 35 |
| 9 | நமது தபால் பெட்டி | 40 |
| 10. | இடி! இடி!! | 41 |

காரியாலயம்:

29, கீழ ஆண்டார் வீதி,

தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி.

1934.

# "ஐக்கிய அரசு"

## யௌவன கூட்டுறவாளர் சங்க சஞ்சிகை.

*போஷகர் :*

**டாக்டர் ஏ. மதுரம்.**

*சங்கத் தலைவர் :*

**P. B. K. ராஜா சிதம்பரம்.**

*காரியதரிசி :*

**என். எஸ். கோவிந்தசாமி.**

*கௌரவ ஆசிரியர் :*

**எஸ். ஜெ. ரெத்தினசாமி,** M.A., B.L.

### சந்தா விபரம்

| | |
|---|---|
| உள் நாடு வருடம் 1-க்கு | ரூ. 5—0—0 |
| வெளி நாடு ,, | ரூ. 6—0—0. |

முன் பணமின்றி பத்திரிகை அனுப்பப்பட மாட்டாது.

10 பத்திரிகைகளுக்கு சந்தாதார்களைச் சேர்த்து அனுப்புவோருக்கு ஓர் பத்திரிகை அனுப்பி வைப்படும்.

### விளம்பர விகிதம்.

| | |
|---|---|
| 4 வது பக்கம் அட்டை | ரூ. 30—0—0. |
| 3 வது பக்கம் அட்டை | ரூ. 25—0—0. |
| சாதாரண விளம்பரம் பக்கமொன்று | ரூ. 20—0—0. |

முன் பணமின்றி விளம்பரம் ஏற்கப்பட மாட்டாது. விளம்பரத்தை அங்கீகரிக்கவோ மறுக்கவோ மானேஜருக்கு உரிமையுண்டு.

# ஐக்கிய அரசு

(CO-OPERATIVE COMMONWEALTH)

STANDS FOR

BETTER FARMING, BETTER BUSINESS, BETTER LIVING.

1934 பிப்ரவரி


OFFICE OF THE REGISTRAR 7-APR 193 MADR

## புத்தகாலய இயக்கம்

யௌவன கூட்டுறவாளர் சங்கத்தார் கனம் பி டி ராஜன் அவர்களுக்கு அளித்துள்ள உபசாரப்பத்திரத்தைப் பிரிதோரிடத்தில் வெளியிட்டுள்ளோம். அதன் மூலம் யௌவன கூட்டுறவாளரின் வேலைத்திட்டம் இன்னதென்பதைப் பொது ஜனங்கள் ஓர் அளவு அறிந்து கொள்ளலாம். கிராமச் சீரமைப்பு வேலையை அவர்கள் பிரதானமாகக் கொண்டிருக்கின்றனர். கிராமவாசிகளின் ஒழுக்கம், செல்வம், அறிவு, ஆகியவற்றினை மேம்பாடடையச் செய்யும் வேலை யாவும் கிராமச்சீரமைப்பின் கீழ் வருகிறது. இது விஷயத்தில் யௌவன கூட்டுறவாளர் சங்கத்தார் முன்னிற்கும் வேலை தெளிவாகக் காணப்பட்டுள்ளது. "திருச்சியிலும், மற்றும் சில முக்கியமான இடங்களிலும், புத்தகாலயங்களும், சுமார் 12 கிராமங்களிலாவது வாசகசாலைகளும், ஆரம்பக்கல்லூரிகளும், நிறுவப்படவேண்டும்; அன்றேல் சங்கம் உருப்படியான வேலை செய்ததாக எண்ணவோ அல்லது உயிருடன் இருப்பதாகக் கருதவோ இடமில்லை" என யௌவன கூட்டுறவாளர் சங்கத்தார் கூறியுள்ளனர். எனவே, இன்று நாம் புத்தகாலய இயக்கத்தைப்பற்றி எழுதப்புகுந்தது சங்கத்தாரின் நோக்கத்தை யொட்டியே யாகும்.

கல்வி விருத்தியின் அவசியத்தையும், நல்வாழ்க்கையின் தேவையையும்பற்றி நாம் அதிகம் வற்புறுத்திக்கூற வேண்டியதில்லை. எத்துறையிலாயினும் சரி கிருஷிகள் முன்னேற வேண்டுமானால் அவர்களது மனப்பான்மையில் மாறுதல் ஏற்படவேண்டும். கிருஷிகளுக்குப் புதுமையில் விருப்பம் உண்டானாலொழிய, சிந்தனை சக்தி ஒளி பெற்றாலொழிய, ஊக்கமும், உணர்ச்சியும், முயர்ச்சியும் ஒருங்கே திரண்டு வீறிட்டெழுந்தாலொழிய கிராமச் சீரமைப்புக்கென வரையப்படும் திட்டங்கள் யாவும் பயனற்றனவாகும். புதுமையில் விருப்பத்தை உண்டுபண்ணவும், சிந்தனை சக்தியைப் பெருக்கவும், உணர்ச்சியை ஊட்டவும் வல்லது புத்தகங்களும், பத்திரிகைகளுமே யாகும். ஆகையால், கிராமங்கள்தோறும் கூட்டுறவுச்சங்கங்கள் வாசகசாலைகளையும், யூனியன்கள் யாவும் சுற்றனுப்புப் புத்தகாலயங்களையும் நிறுவவேண்டுமெனக்கூற விரும்புகிறோம்

இந்நாட்டில் கல்வி கற்கும் குழந்தைகள் பல பள்ளியைவிட்ட ஐந்து வருஷத்திற்கெல்லாம் தற்குறிகளாக மாறி விடுவதாகவும், அவர்களின் எண்ணிக்கை 100க்கு 39 ஆக இருப்பதாகவும் சர்க்கார் அறிக்கை மூலம் தெரிகிறது ஆனால், அவர்களின் கல்வி நிலை இன்னும் சில ஆண்டுகளுக்குப்பின் எத்தகையதாக இருக்கிறதென்பதற்குப் புள்ளி விபரம் எடுக்கப்படவில்லை. எனினும், சென்னை சர்வகலாசாலை புத்தகாலய நிர்வாகஸ்தர் திரு எஸ் ஆர்,

148724

ரெங்கநாதம் அவர்களின் அபிப்ராயம் கவனிக்கத்தக்கது. 100க்கு 50 பேர் தங்களது பிற்கால வாழ்க்கையில் எழுத்து வாசகமற்ற முத்தண்ணுக்களாகி விடுகிறார்களென திரு. ரெங்கநாதம் கூறுகிறார். இதனை ஆதாரமற்ற அபிப்ராயமென எவரும் துணிந்து சொல்லமுடியாது. சென்ற வருஷம் ஆரம்பக் கல்விக்கென இரண்டு கோடி ரூபாய் கல்வி இலாக்காவிற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. எனினும் பயனென்ன? பொது மராமத்து இலாக்காவிலிருந்து நாம் ஓர் நற்பாடம் கற்றுக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். பொது மராமத்து இலாக்காவிற்குப் புதிய கட்டிடம் கட்டுவதற்குப் பணம் ஒதுக்கப்படுவதுடன், பழைய கட்டிடங்களைப் பழுது பார்ப்பதற்கென ஓர் அளவு பணம் தள்ளிவைக்கப்படுகிறது. இம்முறையைக் கல்வி இலாக்காவில் கையாண்டாலென்ன? ஆரம்பக் கல்விக்காக அளிக்கப்படும் இரண்டு கோடி ரூபாயில், புத்தகாலயங்களுக்காக இரண்டு லெட்ச ரூபாய் செலவு செய்யப்படுமானால் கல்வி விருத்திக்கு எத்துணை தூரம் அனுகூலமாக இருக்கு மென்பதைக் கூறவும வேண்டுமோ? ஆரம்பக் கல்விக்கென ஒதுக்கப்படும் பணம் புத்தகாலயங்கள் நிறுவும் பொருட்டு செலவு செய்யக்கூடாதென சிலர் கூறலாம் அவ்விதம் கூறுவதானதுஉள்ள பணத்தைக் கொண்டு சுவர் எழுப்பலாமேயன்றி அதனைக் கெடாமல் பாதுகாக்க கூறைபோட ஒரு ரூபாய் கூட செலவு செய்யக் கூடாதென்பதை ஒக்கும். எனவே, ஆரம்பக் கலாசாலைகள் யாவும் வெறும் போதன சாலைகளாக இருப்பதுடன் புத்தகாலயங்களாகவும, வாசகசாலைகளாகவும் மாற வேண்டுமென்போம்

புத்தகாலயங்களும், வாசக சாலைகளும் மக்களின் ஓய்வு நேரத்திற்கு உற்ற நண்பர்கள். நம்நாட்டினரை வெளி நாட்டினருடன் ஒப்பிட்டுப்பார்க்குமிடத்து என்னதான் பொருளாதாரத் துறையில் பின்னணியில் நிற்பினும் போதிய ஓய்வு காலத்தையுடைய புண்ணியவான்களாக விளங்குகிறார்கள். ஓய்வு காலத்தைத் தாங்களாக வேண்டாது கிடைக்கப்பெறும்பாக்கியத்தை இந்நாட்டினர் பெற்றிருக்கின்றனர். எனவே. புத்தகாலயங்களும், வாசகசாலைகளும் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக நிறுவப்படுகின்றனவோ அவ்வளவும் விரும்பத்தக்கனவே. கிராமவாசிகளிடையே புதிய எழுச்சியை உண்டு பண்ண தூண்டு கோலாகவும், கல்வி விருத்திக்கும், புத்தி விசாலத்திற்கும், நல்லுணர்ச்சிக்கும், உறைவிடமாகவும், ஓய்வு காலத்தால் ஏற்படும் பொருளாதார நஷ்டத்தை அறிவு விருத்தியின் மூலம் லாபகரமானதாகச் செய்யக்கூடிய மகத்தான ஸ்தாபனங்களாகவும், புத்தகாலயங்களும், வாசகசாலைகளும் விளங்குமென்பதில் ஐயமில்லை.

## ஜனநாயக ஆட்சி

திருச்சி ஜில்லா மத்திய கூட்டுறவு பாங்கின் மகாஜன சபைக்கூட்டம் பிப்ரவரி மீ 17உ பிற்பகல் 2 மணிக்கு பிஷப் ஹீபர் கல்லூரி மண்டபத்தில் திரு. எல் என். பரமசிவம் பிள்ளை அவர்களின் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. கூட்ட நடவடிக்கையின் விபரத்தைப் பிரிதோரிடத்தில் காண்க. இக்கூட்டத்திற்கு விஜயஞ் செய்திருந்தோர் ஜனநாயக ஆட்சி எத்தகையதாக இருக்கக்கூடும் என்பதை ஓர் அளவு எளிதில் அறிந்து கொண்டிருக்கலாம் என்பதில் ஐயமில்லை. இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் மூன்று. அவற்றுள் முதன்மையானது கிராமச்சங்கங்களுக்குக் கொடுக்கப்படும் பணத்தின் வட்டி விகிதத்தைக் குறைப்பது சம்பந்தமான தீர்மானமாகும். கூட்டத்தின் ஆரம்பத்திலேயே இத்தீர்மானத்தை நிறைவேற்றுகிற விஷயத்தில் கிராமச் சங்கங்களிலிருந்து வந்திருந்த பிரதிநிதிகள் காட்டியுள்ள அக்கறையிலிருந்து வட்டி விகிதம் குறைக்கவேண்டிய



அவசியம் நன்கு புலப்படுவதுடன், கிராமச்சங்கங்களின் பிரதிநிதிகள் நகரவாசிகளைக்காட்டிலும், காரியவாதிகளெனத் தெரிகிறது. வட்டியானது தற்காலீகமாக ஒரு வருஷத்திற்குக் குறைக்கப்பட்டிருக்கிறதேயன்றி நிரந்தரமாகவோ நீண்டகாலத்திற்கோ குறைக்கப்படாதது வருந்தத்தக்கதாகும். அடுத்த மகாஜன சபைக்கூட்டத்தில் தற்காலீகமானதாகக் குறைக்கப்பட்ட வட்டி விகிதம் நிரந்தரமானதாகச் செய்யப்படுமென எதிர்பார்க்கிறோம்.

இரண்டாவது தீர்மானம் பிஷப் ஹீபர் கல்லூரி கட்டிடத்தை மத்திய பாங்கின் காரியாலயத்திற்கென வாங்குவது பற்றியாகும். கட்டிடத்தை வாங்கலாமா? வாங்கக்கூடாதா? என்பதுபற்றி நாம் அபிப்பிராயமெதுவும் கூற விரும்பவில்லை. கட்டிடம் வாங்கவேண்டியதின் அவசியத்தைப்பற்றி இதுவரை எடுத்துக் காட்டியுள்ள காரணங்களைக்காட்டிலும் அதிகமாக தீர்மானத்தை ஆதரிக்க விருப்பமுடையவர்கள் எவரும் இனி கூற இடமில்லை. அதே அளவில் கட்டிடம் வாஙகக்கூடாது என்பதற்காக சொல்லப்பட்டுள்ள காரணங்களும் கொஞ்சநஞ்சமல்ல. இதைவிட இன்னும் எதுவும் எதிர்ப்புக் கோஷ்டியினர் அதிகமாக கூறுதற்கில்லை. இந்நிலையில் இரு சாராரும் பெரும்பாலோரின் அபிப்பிராயத்தை ஏற்கக் கடமைப்பட்டிருக்கின்றனர். இரு சாராரின் சம்மதத்தின்பேரில் தீர்மானம் ஓட்டுக்கு விடப்பட்டதும் தீர்மானத்தை எதிர்த்தவர்கள் வெற்றி பெற்றனர். தீர்மானத்தைக் கொண்டு வந்தோர் தோல்வியடைந்தனர். இது சமயம், வெற்றி என்பதும் தோல்வி என்பதும் ஒரு தனி நபரைச் சார்ந்ததன்று. ஓர் குறிப்பிட்ட காரியம் தோல்வியடைந்ததேயாகும். வெர்றியைக் குறித்து எவரும் மகிழ்ச்சி கொள்வதற்கோ தோல்வியைக் குறித்து எவரும் உள்ளம் சைவதற்கோ, உரிய இடம் கூட்டுறவு பாங்கின் மகாஜன சபைக்கூட்டம் அல்லவென்பதை கூட்டுறவாளர்கள் மறக்கக் கூடாது.

மூன்றாவது தீர்மானம் மத்திய பாங்கிற்குச் சொந்தமான தென்னூரிலுள்ள நிலத்தை மின்சாரக் கார்ப்பரேஷனுக்கு ரூ. 8385—3—0க்கு விற்பது குறித்ததாகும். இரண்டாவது தீர்மானத்தைப்போல் இத்தீர்மானம் பலத்த விவாதத்தை எழுப்பியது கவனிக்கத்தக்கது. ரூ. 8385—3—0க்கு நிலத்தை விற்பது சரியென்று கூறவோ அல்லது டெண்டர்கள் மூலயமாக விற்பதால் ரூ. 8385—3—0க்கு மேல் நிலம் விலை போகக்கூடுமென்று அபிப்ராயங் கூறவோ நாம் தயாராக இல்லை. ஆனால் ஒன்று மாத்திரம் கூறத்தயங்கோம். அதாவது தனிப்பட்ட நபர்களுக்குச் சொந்தமல்லாத பொது ஸ்தாபனங்களுக்குரிய சொத்தை ஏல மூலமாகவோ, டெண்டர்கள் மூலமாகவோ விற்பனை செய்வதுதான் வீண் அபவாதத்திற்கும், அபாண்டமான வசை புராணங்களுக்கும் நிர்வாகஸ்தர்கள் ஆளாகாதிருக்கத் தகுந்ததோர் மார்க்கமென்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம்.

இது சமயம் ஆழ்ந்து கவனிக்கத்தக்கதொன்றுண்டு. டெண்டர்கள் பெறவும், ரூ. 8385-3-0க்கு மேல் நிலத்தை விற்கவும், திருவாளர்கள் எல். என். பரமசிவம் பிள்ளை, எம். எம். கிருஷ்ணசாமி பிள்ளை, கோ. வடமலைக்கோனார் ஆகியோர் அடங்கிய கமிட்டி யொன்று நியமிக்கப்பட்டிருக்கிறது இக்கமிட்டியின் அங்கத்தினர்கள் போட்டியின்றி நியமனம் பெற்றதிலிருந்தே அவர்கள் மகாஜன சபையின் பூரண ஆதரவைப் பெற்றிருக்கிறார்களென்று தெரிகிறது. கூட்டத்தின் நடவடிக்கையைக் கவனித்தோர் நில விற்பனை சம்பந்தமாக இக்கமிட்டியாருக்கு பூர்ண அதிகாரமளிக்கப்பட்டிருப்பதாகவே கருதக் கூடும் ஆனால், அடுத்த மகாஜன சபைக்கூட்டத்தில் இவர்கள் வரக்கூடிய முடிவுக்கு எதிர்ப்பு ஏற்படக்கூடுமோ என நாம் எதிர் பார்க்கிறோம். ஏனெனில், பிஷப் ஹீபர் கல்லூரி கட்டிடத்தை வாங்கவேண்டுமென்ற தீர்மானத்தை ஆதரித்துப் பேசிய பிரமுகர்கள் கூறியுள்ள வார்த்தைகளை ஈண்டு குறிப்பிட விரும்புகிறோம். அதாவது:— "கட்டிடம் வாங்குவது குறித்து ஓர் முடிவுக்கு வருமாறு நமது தலைவருக்கும், மற்றும் சிலருக்கும் அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. அங்ஙனமிருக்க அவர்கள் செய்துள்ள வேலைகளை ஏற்காது புறக்கணிப்பது நம்மையே நாம் அவமதித்துக்கொள்வதாகும்." இம்மாதிரியான கமிட்டிக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரத்தைப்பற்றி கமிட்டியின் அங்கத்தினர்களில் ஒருவரான திரு. வடமலைக்கோனார் அவர்கள்

கமிட்டியின் அபிப்ராயத்தை பொர்சாகக்கொள்ளலாமேயன்றி அதனை முடிவானதாகக்கொண்டு ஏற்கவேண்டுமென்ற கட்டாயமில்லை என்பதாகக் கூறிய போது அவரது வியாக்கியானம் ஒப்புக்கொள்ளப்படவில்லை. கமிட்டியாருக்குப் பூர்ண அதிகாரம் அளிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. அத்தகைய சம்பூர்ண அதிகாரம் பெற்ற கமிட்டியார் வந்துள்ள முடிவை தீர்மான ரூபமாகக் கொண்டு வந்த நபர்கள் மகாஜன சபைக்கூட்டத்தில் தோல்வியடைந்தார்களென்றால் அடுத்த கூட்டத்தில் புதியதாக நியமிக்கப்பட்ட கமிட்டியாரின் முடிவை முழுமனதுடன் அவர்கள் ஆதரிப்பார்களென எதிர்பார்க்க முடியுமா? மேலும், மௌனமாக இருப்பார்களெனக் கூற முடியுமா? எனவே, புதிய கமிட்டியார் தாங்கள் ஓர் முடிவுக்கு வருமுன் தங்கள் அதிகாரத்தின் எல்லையை நன்கறிந்து கொள்ளுமாறு எச்சரிக்கை செய்ய விரும்புகிறோம்.

இறுதியாகக் கூறுமிடத்து, இக்கூட்டம் போற்றத்தக்க முறையில் பரந்த மனப்பான்மையுடன் தலைவரால் நடத்தப்பட்டதென்றே கூறுவோம். மேலும், நகர வாசிகளின் இனிய வசனங்களைக்காட்டிலும் கிராமவாசிகளின் காரமான வார்த்தைகள் சாரமுள்ளதாகவும், அர்த்த புஷ்டி நிறைந்ததாகவும், இருக்கின்றதென்பதற்கு இக்கூட்டம் போதிய அத்தாட்சியாகும்.

## செலவைத் தொழிலாளர் மகாநாடு

சென்னை மாகாண செலவைத் தொழிலாளர் மகாநாடு பிப்ரவரி 22௳ மந்திரி கனம் பி. டி. ராஜன் அவர்களால் திறக்கப்பட்டு, திரு. என். சிவராஜ் பி.ஏ., பி.எல்., எம். எல் ஸி. தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. இம்மகாநாட்டில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவற்றுள் முக்கியமானது செலவைத் தொழிலாளருக்கென கூட்டுறவு பாங்குகள் நிறுவுவதாகும். இத்தீர்மானம் பொன்னே போல் போற்றத்தக்கது. செலவைத் தொழிலாளரின் முன்னேற்றத்திற்குக் கூட்டுறவு பாங்குகள் மிக அவசியமென்பதை நாம் அதிகம் கூறத் தேவை இல்லை. நம்நாட்டில் தொழிலாளர் மகாநாடுகள் பல நடந்துள்ளன. ஆனால் இது வரையில் இதுபோன்ற தீர்மானம் அம்மகாநாடுகளில் நிறைவேற்றப்படவில்லை. செலவைத் தொழிலாளர் மகாநாடு ஏனைய தொழிலாளர்களுக்கு ஓர் வழி காட்டியதாக விளங்குகிறது. நிறைவேற்றப்பட்ட தீர்மானம் விரைவில் அமுலுக்குக் கொண்டுவரப்படுமென எதிர் பார்க்கிறோம். இதுபோன்ற மகாநாடுகள் நகரங்கள் தோறும், கிராமங்கள் தோறும் நடக்கவேண்டுமென விரும்புகிறோம்.

## ஜப்பான் அரிசி

சென்னை துறைமுகத்தில் ஜப்பான் அரிசி இறக்குமதி செய்யப்படுவதாக அறிகிறோம். இதனால் சென்னை மாகாண வாசிகளிடையே பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. இம்மாகாணத்தின் விளைபொருள்களில் பஞ்சு நெல் கடலை மூன்றும் பிரதானமானது. நெல் விலையோ குறைந்து விட்டது. நில வரியைக்கட்டவும் இயலாது கிருஷிகள் கஷ்டப்படுகின்றனர். கடலையையே கேழ்ப்பாரில்லை. பஞ்சின் நிலையோ சொல்லவேண்டியதில்லை. இந்நாட்டின் பஞ்சு வெளி நாட்டிற்கு ஏற்றுமதி இல்லாத நிலையில் லங்காஸ்ஷயர், ஜப்பான் துணிகள் இறக்குமதியில் மாத்திரம் குறையாதிருந்து வருகிறது. இவ்வனமிருக்க ஜப்பானிலிருந்து அரிசி இறக்குமதி யாகுமானால் கிருஷிகள் கதி என்னவது இன்னும் சில நாட்களில் அரிசியைச் சோராகச் சமைத்துக்கூட ஜப்பானியர் அனுப்பி வைக்கலாம். அரிசியை வாங்கிச்சமைப்பதால் ஏற்படும் செலவைக்காட்டிலும் சோராக வாங்குவது நயமெனப் பலர் ஜப்பானியர் அனுப்பும் சோற்றை வாங்கலாம். ஆனால் இந்நாட்டு விவசாயிகள் உய்யும்வழி என்ன? என்று கேட்கிறோம். நிலவரியைக் குறைப்பதில் பிடிவாதம் காட்டும் சர்க்கார் ஜப்பான் அரிசி இறக்குமதி விஷயத்தில் பாராமுகமாக இருப்பதேனோ?



# கூட்டுறவு தர்மம்

எச். கால்வர்ட், ஐ.ஸி.எஸ்., மாஜி கூட்டுறவு ரிஜிஸ்தரார்.

கூட்டுறவு இயக்க ஆரம்ப காலத்தில் சாமான்களைமொத்தமாய் வாங்கிப் பங்கிட்டுக் கொள்ளும் சங்கங்கள் மிகவும் திறமையாய் இங்கிலாந்தில் வேலை செய்து வந்திருக்கின்றன. இன்னும் சில தேசங்களில் கூட்டுறவு விவசாயத்துறைகளில் மேன்மையடைந்திருந்தது. இம்மாதிரி கூட்டுறவானது பற்பல இடங்களில் பற்பல மாதிரி மேன்மையடைந்திருந்தமையால் 'கூட்டுறவு' என்பதை பல அபிவிருத்திகளுக்கு ஒத்தவாறு குறிக்கவேண்டி ஏற்படுகிறது. இதனால் கூட்டுறவென்பது பொதுப்படையாய் விவரிக்கப்படுகிறது. கூட்டுறவென்பதற்கு நூலாசிரியர்கள் பலர் பல்வேறுமுறையில் வியாக்கியானஞ் செய்திருக்கின்றனர். ஆயினும் அவர்களில் எவரும் குறிப்பாயும் தெளிவாகவும் விளங்கும்படி எழுத எடுத்துக் கொண்ட பிரயத்தனத்தில் வெற்றியடைந்தார்களில்லை.

ஏதாவதொரு காரியத்தைத் தம்மிச்சையாய் ஒரு மனப்பட்டு சகலரும் நியாயமான பொறுப்பையும் ஆதிக்கத்தையும் வகித்துச் செய்வது கூட்டுறவாகும் என ஹோலியோக் என்ற பெரியார் விவரித்துள்ளார். தொழிற்சாலைகள் யாவும் செல்வந்தர்கள் வசமிருந்தமையாலும், அச்செல்வந்தர்கள் வகித்து வந்த ஆதிக்கத்தாலும் தொழிலாளர்கள் பல இன்னல்களுக்கும் ஆளாகி இருந்தனர். இத்தீமைகளை ஹோலியோக்கும் அவரைப்போன்ற பலரும் நன்குணர்ந்திருந்தனர். சர்வசாதாரணமான சில்லரை வேலைகளுங்கூட பெரிய தொழிற்சாலைகளில் நடைபெறலாயின. தொழிற்சாலைகளை நடத்த அதிக முதல் தேவையாகும். அதனால் கம்பெனிகள் பதிவு செய்யப்பட்டன. அக்கம்பெனிகளில் பலரும் பங்காளர்களாகச் சேர்ந்து பணத்தைப் போட்டு தொழில் நடத்தலாயினர். அக்காலத்தில் கம்பெனிகளின் பொறுப்பு வரையறுக்கப்படவில்லை. ஆகவே, பணம் போட்டவர்கள் கம்பெனியில் அதிகாரஞ் செலுத்தவும், அதிகலாபமடையவும், பெற்றுள்ள உரிமையை எவரும் ஆட்சேபனை செய்வதற்கில்லாதிருந்தது. இதனால் தொழிலாளர்கள் பாதிக்கபட்டனர். தொழிலாளர்களின் நலத்தைக் கருதி தொழிற்சாலை முதலாளிகளின் அதிகாரங்களைக் குறைப்பதற்கான சட்டங்கள் அவசியமென அக்காலத்தில் தென்படவில்லை. தொழிலாளர்கள் இயந்திரங்கள் போல் நடத்தப்பட்டனர். முதலாளிகளைத் தொழிலாளர்கள் வெறுக்கலாயினர். இவ்வெறுப்பு நாளுக்கு நாள் அதிகரிக்கலாயிற்று. ஆனால் முதலாளிகள் பணத்தைப் பிரதானமாகவும், தொழிலாளரின் உழைப்பை சாதாரணமாகவும் எண்ணி, மனித சக்தியை அலட்சியம் செய்துவந்தனர்.

முதலாளிகளின் கொடுமைகளினின்று ஏழைத்தொழிலாளர்களை விடுவிக்க அநேக விதமான முயற்சிகள் செய்யப்பட்டன. அவைகளில் தொழிலாளரை அடிமைத்தனத்திலிருந்து மீட்பதற்குச் சிறந்த மார்க்கம் கூட்டுறவு ஒன்றே என்பதுகண்டறியப்பட்டது. மேற்கண்டபடி வறுமையால் பீடிக்கப்பட்டு துன்பமடைந்து வந்த தொழிலாளர்கள் தாங்கள் செய்யும் வேலைக்குத் தக்கபடி கூலியும், தாங்கள் முன்னேற்றமடைய சரியான வசதிகளும், தங்களிஷ்டம் போல் சுதந்தரமாய் வாழ்நாட்களைக் கழிக்கவழிகளும் தேவை என்பதைப் பற்றி முதலாளிகளிடம் போராடி வந்தார்கள். இக்குறைகளையும், இது போன்றவற்றையும் நீக்க வல்லது கூட்டுறவு முறை என ஹோலியோக் அபிப்ராயப்படுகிறார். கூட்டுறவுச் சங்கம் கூட்டாக வியாபாரஞ் செய்யும் பொருட்டு எளியவர்களால் ஆரம்பிக்கப்பட்டு சுய நலம் பாராட்டாது நடத்தப்படுமானால், அங்கத்தினர்கள் எந்த அளவிற்குத் தங்கள் கடமையை உணர்ந்து நடந்து அச்சங்கத்தை உபயோககரமாகச் செய்து கொள்ளுகிறார்களோ அந்த அளவிற்கு அதனாலுண்டாகும் பிரதிபலனை அடையலாம் என்று பே என்பவர் கூறியுள்ளார். கூட்டுறவுச் சங்கமானது அநேக நபர்கள் சேர்ந்த ஒரு சங்கமென்

றும், அதில் இத்தனை அங்கத்தினர்கள் தான் இருக்கவேண்டுமென்றே எல்லை கிடையாதென்றும், அதில் சேருபவர்கள் எல்லோரும் சமமென்றும், அவர்கள் தங்கள் செல்வ அபிவிருத்தியை அனுசரித்துக் கூட்டாய் வேலை செய்து எத்தொழிலிலும் தங்கள் சுய உதவியாலோ அல்லது அரசாங்கத்தார் உதவியைக் கொண்டோ தன் முயற்சியுடன் தங்கள் நிலைமையை மேம்படுத்திக் கொள்ள வேலை செய்கிறார்களென்றும் அதனாலுண்டாகும் லாபத்தை அவரவர் கொடுத்திருக்கும் முதலை அனுசரித்துப் பங்கிடாமல் அவரவர் செய்திருக்கும் வேலையையும் வியாபாரத்தையும் அனுசரித்துப் பங்கிட்டுக் கொள்வதென்றும் ஓர் நூலாசிரியர் கூறியுள்ளார். இதே அபிப்ராயத்தை ஹெரிக் என்ற பெரியார் தெளிவுபடுத்தியுள்ளார். ஒருவருக்கொருவர் யதேச்சையாய் ஒன்று சேர்ந்து தங்கள் செல்வம் புத்தி இரண்டையுமாவது அல்லது அவற்றுள் ஒன்றையாவது கொண்டு ஒருவருக்கொருவர் உதவி புரிந்து பரஸ்பர லாபநஷ்டத்திற்குச் சமமாய் பாத்தியப்படுவதென இவர் விவரித்துள்ளார். ஒவ்வொருவரும் தங்களிஷ்டப்படி ஒன்று கூடி செல்வ அபிவிருந்திக்கு முகாந்திரமாயுள்ள உற்பத்தி, பண்ட மாற்றல், சரக்குகளை மொத்தமாய் வாங்குதல், விற்றல் போன்றவைகளை தங்களுக்குச் சொந்தமாக்கிக்கொண்டு தாங்களே பராமரித்து தங்களுடைய செல்வத்தையும் அந்தஸ்தையும் மேம்பாடடையச்செய்யும் மார்க்கம் கூட்டுறவென மற்றும் ஓர் நூலாசிரியர் எழுதியுள்ளார்.

கூட்டுறவு பற்றி ஏற்படுத்தப்பட்டுள்ள சட்டங்கள் கூட்டுறவுக்குக் கூறும் வியாக்யானங்கள் பற்பல விதமாக இருக்கிறது. அங்கத்தினர்கள் பலர் ஒன்று சேர்ந்து தங்களுடைய கூட்டுறவாலும், நாணயத்தாலும், கைத்தொழிலையோ அல்லது வியாபாரத்தையோ அபிவிருத்தி செய்வதை லட்சியமாகக் கொண்டு ஒரு சங்கத்தை ஏற்படுத்துவார்களானால் அச்சங்கத்தைக் கூட்டுறவுச் சங்கமென்று சொல்லலாமென ஆஸ்திரியா தேசத்துச் சட்டத்தில் காணப்படுகிறது. சொற்பவருமானமுள்ள அங்கத்தினர்களால் சட்ட ரீதியாக ஓர் சங்கம் ஏற்படுத்தப்பட்டு ஒருவருக்கொருவர் சகாயஞ்செய்யும் தன்மையினால் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் தொழிலைத் திறமையாய்ச் செய்து செல்வ அபிவிருத்தியை உண்டாக்கிக் கொள்வதைக் கூட்டுறவு சங்கமென 1921௵த்ய ஜப்பான் தேசச் சட்ட மூலம் தெரிகிறது. ஒரு சங்கமானது கூட்டுறவு தத்துவத்தை அனுசரித்து அதனுடைய சட்ட திட்டங்களையும், உபவிதிகளையும் ஏற்படுத்திக் கொண்டு சரக்குகளை உற்பத்தி செய்யும் எல்லா விவசாயிகளையும் அங்கத்தினர்களாய் சேர்த்துக்கொண்டு அவர்களால் உற்பத்தி செய்து கொடுக்கும் சரக்குகளின் அளவை அனுசரித்து நிகர லாபத்தில் கையிருப்பு சரக்கின் விலையின் பேரில் ரூ 100க்கு வருஷம் ஒன்றுக்கு 6 விகிதம் லாபம்பிரித்துக் கொடுத்தது போக எஞ்சியதை அங்கத்தினர்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்கும்படியான ஏற்பாட்டின் கீழ் ஏற்படுத்தப்பட்டிருந்தால் அது கூட்டறவு சங்கமாக எண்ணப்படும் என 1911 வது வருஷத்திய பிரிட்டிஷ் கொலம்பியாவின் விவசாயச் சங்க சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஏதோ கொஞ்சம் பங்குத் தொகையை ஏற்படுத்தி அதில் இத்தனை பேர்கள் தான் சேரலா மென்ற நிர்பந்த மில்லாமல் விரும்பினால் எத்தனை பேர் வேண்டுமானாலும் சேரவும், விரும்பாவிட்டால் நீங்கவும் சுதந்திரமுள்ளதும், ஒரு திட்டமான ஏற்பாட்டின் கீழ் கூட்டாய் வேலை செய்து பொதுவாக அங்கத்தினர்களின் பொருளாதார நிலையையும் குறிப்பாக அந்தஸ்தையும் மேம்பாடடையும் படி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளதுமான சங்கமே கூட்டுறவுச் சங்க மெனப்படும் என ரொமேனியாவின் சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அங்கத்தினர்கள் பலர் ஒன்று சேர்ந்து பங்குப்பணம் இவ்வளவென நிர்ணயிக்காமல் ஒரு சங்கம் ஏற்படுத்திக் கொண்டு கூட்டு முயற்சியால் அங்கத்தினர்களின் செல்வத்தை அதிகரிக்கும்படி செய்து கொள்வதே கூட்டுறவு சங்கமென ஸ்விஜர்லாந்தில் கருதப்படுகிறது. இந்தியா சட்டத்தின் 4 வது பிரிவில் அங்கத்தினர்களுடைய பொருளாதார நிலையை அபிவிருத்தி செய்ய உத்தேசித்துக் கூட்டுறவு தத்துவதின்படி ஏற்படுத்தப்படும் சங்கங்கள் கூட்டுறவு சங்கங்களென சொல்லப்படுகிறது. ஆனால் எவ்வெவை கூட்டுறவின் கொள்கையாகுமென்பதை ரிஜிஸ்திராரே நிர்ணயிக்கும்படி விடப்பட்டிருக்கிறது.

மேலே சொல்லியிருக்கும் விவரங்களிலிருந்து கூட்டுறவென்பது இன்னதென்று தெளிவாய்



ஏற்படக்கூடும். ஆரம்பத்தில் இந்த இயக்கத்திற்கு அந்தந்த தேசத்தில் ஏற்பட்டிருந்த வறுமையே காரணமாகும். ஏழ்மைத்தனத்தினால் ஏற்பட்டிருக்கும் கஷ்டங்களிலிருந்தும் பரிதபிக்கக் கூடிய நிலைமையிலிருந்தும் எப்படி விடுவித்துக் கொள்ளக்கூடுமென்று தாங்களே பேராவாவுடன் செய்த பிரயத்தனத்தால் கண்டு பிடிக்கப்பட்ட வழியே இந்த இயக்கமாகும்.

பொதுவாய் ஜனங்களுக்குள் ஏற்பட்டிருந்த பொருளின்மையாலும் அதனால் ஜீவிப்பதற்கே நெருக்கடியான நிலைமை ஏற்பட்டதின் காரணமாகவும் தங்கள் ஜீவனோபாயத்தின் பொருட்டு செல்வ அபிவிருத்தி செய்ய தக்க வழியைக்கண்டு பிடிக்கும்படி அவர்கள் ஒருங்குகூடி ஆலோசிக்கலானார்கள். முதல் முதல் இந்த யோசனை யந்திரத் தொழிற்சாலை தொழிலாளர்களுக்குள்ளும் பின்னிட்டு விவசாயம் செய்பவர்களுக்குள்ளும் ஏற்பட்டது. இவர்களெல்லோரும் போதுமான பணமில்லாதவர்களாகவே இருந்தார்கள். ஆகவே பணமே இந்த இயக்கத்திற்கு அடிப்படையாக இருக்கமுடியவில்லை. மனிதர்களே இந்தஇயக்கத்திற்கு ஆதாரம். அதாவது அவர்களின் உழைப்பும் தொழிலுமேயாகும். கூட்டுறவுச் சங்க அங்கத்தினர்கள் தாஙகள் போடும் பணம் காரணமாக அங்கத்தினர்களன்று; அவர்களது மானிட சக்தியே அவர்களை அங்கத்தினர்களாகச் செய்கிறது. இந்த மூல காரணத்திலிருந்து மற்றுமொரு உண்மை புலப்படுகிறது. அது என்னவென்றால் தங்களுக்கு ஏற்படும் தேவையைத் திருப்தி செய்து கொள்ளும் பொருட்டு அநேகர் ஒன்று கூடினால் அவர்கள் பூர்ணமாய் திருப்தி அடையவேண்டுமேயொழிய அவர்கள் தஙகளுக்குள் வித்தியாசம் பாராட்டக்கூடாதென்பதாகும். இதனால் சங்கத்தில் சேருவோர் யாவரும் தாங்கள் யாவரும் சமமென்னும் நோக்கத்துடன் சேர நேரிடுகிறது. கீழே கூறப்படும் மூன்றாவது நீதியும் கூட்டுறவு இயக்கத்திற்கு நூதனமானதல்ல. அது என்னவெனில், இச்சங்கத்தில் சேருபவர்கள் நிர்பந்திக்கப்பட்டு சேருவதில்லை. எல்லோரும் யதேச்சையாய்ச் சேர்ந்து நடத்தப்படும் சங்கமே கூட்டுறவுச் சங்கமாகும். இந்த அம்சத்தை கூட்டுறவின் பராமரிப்பில் மிகவும் முக்கியமாய் பாராட்டவேண்டும். இறுதியாகக் கூறுமிடத்து, அங்கத்தினர்கள் சங்கத்தில் சேரும் பொழுது தங்களுடைய அபிவிருத்தியையும், நன்மையையும் கருதி சேருகிறார்களேயொழிய அயலாருடைய நன்மையை நாடிச் சேருவதில்லை.

கூட்டுறவு இயக்கமானது சமூகக்கட்டுப்பாடுகளில் ஒன்றாகும். ஏழைகளுக்குத் தகுந்த சுயேச்சையாய் சேருவதற்கான கட்டுப்பாடு இது ஒன்றே என்பது அனுபவமூலியமாய் தெரிகிறது. தங்களுடைய செல்வ விருத்தியின் பொருட்டு சுய அதிகாரத்துடன் மானிடர்களாக சுயேச்சையாக ஒன்று சேர்ந்து கொள்ளும் கட்டுப் பாட்டிற்கே ஐக்கிய முறை என்று பெயர்.

உலகத்தில் ஏழைமக்கள் தங்கள் வாழ்க்கையைத் தாங்களே மேன்மைப் படுத்திக்கொள்வது மிகவும கடினமான காரியம், ஐக்கிய பண்டகசாலைகளை ஏற்படுத்தின ராக்டேல் வகுத்த வழியைப்பின்பற்றிய கூட்டுறவாளர்கள் தங்களுடைய முயற்சியால் இப்பெரிய காரியத்தை ஜெயிக்கத் தொடங்கியதை யாவரும் கண்டு வியப்படையாதிருக்க முடியாது. அவர்கள் அக்காலத்தில் அடைந்தவெற்றியே இன்னும் அவர்களது மாறாப் புகழுக்குக் காரணமாக இருக்கிறது. அந்த ஏழை நெசவாளிகள் தங்கள் பந்துக்களிடத்திலிருந்தும் சுற்றத்தாரிடத்திலிருந்தும் அதிக அவமதிப்பை அடைந்தார்கள். வறுமைப் பிணியினால் பீடிக்கப்பட்டு தத்தளித்தார்கள். அத்தகைய நிலைமையிலிருந்து விடுவித்துக் கொள்ளவேண்டுமென்னும் நோக்கத்தினாலேயே துணிவு கொண்டார்கள். அது போலவே ஜெர்மானிய விவசாயிகள் தஙகளுடைய முன்னேற்றத்திற்கு வேறு யாதொரு வழியுமில்லாமல் தத்தளித்துக் கொண்டிருந்தார்கள். கடைசியாய் கடைத்தேறும் மார்க்கமறியாதிருந்த அவர்கள் ரயிபீன்சனுடைய புத்திமதியைக் கேட்டு நடக்கலாயினர்.

ஐரோப்பாவில் அமெரிக்கன் கமிஷனர்கள் விஜயம்செய்து விசாரணை நடத்தி ஆராய்ச்சி செய்ததில் ஐரோப்பிய விவசாயிகளுக்கு ஜீவனோபாயத்திற்குப் போதுமானவரவில்லை என்றும் அவர்களது நிலைமை மிக நெருக்கடியாக இருக்கிறதென்றும், அதனால் அவர்கள் வெளி நாடுகளில் குடியேறக்கூடுமென்றும் கமிஷனர்கள் அபிப்ராயப்பட்டனர். அதன் பிறகு அவர்களைக் காக்க

வேண்டுமென்னும் அக்கறை அரசாங்கத்தாருக்கு உண்டாயிற்று. அப்படிப்பட்ட நெருக்கடியான நிலைமை ஏற்பட்டிராவிட்டால் விவசாயிகளுக்குள் ஊக்கமும் உணர்ச்சியும் உண்டாயிருக்க மாட்டாது. ஆனால் இவ்வியக்கம் விருத்தியடையத் தலைப்பட்டதும் நாளடைவில் வறுமையானது கூட்டுறவு அபிவிருத்திக்கு இன்றியமையாததாக ஏற்படவில்லை. ஆனால் கேவலம் ஏழ்மைத்தனத்திலிருப்பவர்கள் நல்ல நிலைமைக்கு வருவதற்கு கூட்டுறவு முறையைக் கைகொள்ளுமாறு செய்ய வறுமை ஓர் தூண்டுகோலாக இருந்தது. உண்மையில் கூட்டுறவு இயக்கத்தில் ஆழ்ந்து ஈடுபட்டு உழைத்துவருபவர்களில் அநேகர், ஆயிரக்கணக்கான ஏழை ஜனங்கள் கூட்டுறவு சங்கங்களில் சேர்ந்து அதன் பலனை அடையவில்லையே என்பது பற்றி மிகவும் விசனப்படுகிறார்கள். ஏதாவது ஒரு லாபத்தையோ அல்லது பலனையோ அடையவேண்டுமென்கிற அவசியமான நெருக்கடி ஒன்று நேர்ந்தாலொழிய கூட்டுறவானது நீடித்து நிலைத்திருக்கமுடியாது. நிரந்தமான நன்மை உண்டாக வேண்டுமென்றால் எல்லோரும் விரும்பும்படியான யாதாவதொரு தேவை ஏற்படவேண்டும். கூட்டுறவை ஸ்தாபிக்க முயற்சி செய்வதற்கு மட்டும் இம்மாதிரியான சந்தர்ப்பம் தேவையேயொழிய, இச்சங்கம் நன்றாய் நிலைத்திருப்பதற்கு தீவிரமான பொதுத் தேவைகள் மட்டும் போதாது.

எல்லோரும் ஒன்றுகூடி வேலைசெய்யும்போது ஒருவருக்கொருவர் சகாயஞ் செய்ய வேண்டுமென்கிற உணர்ச்சியும், ஊக்கமும் ஏற்பட்டால் தான் இவ்வியக்கம் நன்றாய் நிலைத்து நிற்கும். அமெரிக்கக்கமிஷனர்கள் கூறுகிறபடி விவசாயம் விருத்தியடைந்து நலமுண்டாக வேண்டுமானால் மேலே விவரித்துள்ள கூட்டுறவு உணர்ச்சியை ஜனங்களுக்குள் வேரூன்றும்படி பரவச் செய்ய வேண்டும்.

பொது நன்மையை நாடி கூட்டுறவில் வேலை செய்பவர்களுக்குள் சில விஷயங்களில் அபிப்பிராயபேதமும், கருத்து வேற்றுமையும் ஏற்படுவது சகஜம். எனினும் அவர்கள் அவைகளை எல்லாம் பாராட்டாமல் நிராகரித்து ஒத்துழைத்தால் தான் இந்த இயக்கம் அபிவிருத்தியடையும். இம்மாதிரியான மார்க்கத்தில் ஒத்துழைத்து வேலை செய்து அபிவிருத்தி அடைந்து வந்தால் பரஸ்பர விஸ்வாசமும் தேசாபிமானமும் உண்டாவதல்லாமல் அவசியமானபோது அப்படிப்பட்டவர்கள் எந்தவிதமான தியாகம் செய்யவும் தயாராகிவிடுவார்கள். மேல் நாட்டில் கூட்டுறவிற்கு வேண்டிய ஐக்கிய உணர்ச்சியும், குணாதிசயங்களும் உண்மையாய் வியாபித்திருக்கின்றன. அம்மாதிரி இல்லாவிட்டால் கூட்டுறவென்பது வெகுகாலம் நிலைத்திருக்கமாட்டாது.

ஏதாவதொரு இடத்தில் எல்லா ஜனங்களும் பொதுவாய் அடையவிரும்பும்படியான தேவையொன்று ஏற்பட்டு அதைத்தனியாக ஒருவரால் செய்யப்படும் பிரயத்தனத்தால் அடையமுடியுமென்று தெரிந்துகொண்டால் அம்மாதிரி அடைவதற்கு வசதியாயிருப்பதுதான் கூட்டுறவு இயக்கம்.

கூட்டுறவு ஒரு கட்டுப்பாடு; ஓர் தொழிலை செய்வதற்கானமுறை. அது ஒரு உருவமேயாகும். அதன் சக்தியானது நமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள நாம் எடுக்கும் முயற்சியைப் பொருத்துள்ளது. அநேகர், கூட்டுறவுமுறையை தொழில் முறையாகமட்டும் கருதவில்லை ஏனெனில் அதன்வெற்றிக்கு பரஸ்பர சகாயம் வேண்டும். பொதுநல உணர்ச்சிவேண்டும். இதனால் சமூக நன்மையில் ஊக்கம் ஏற்படுகிறது. ஆகவே, தொழிலை பெருக்குவதுடன் கூட்டுறவு சீலத்தையும் பெருக்குகிறது. இதனால் இவர்கள் இந்தக் கூட்டுறவு சித்தாந்தத்தை ஒரு மதமாகக் கொண்டாடுகிறார்கள். ஆனபோதிலும் இக்கூட்டுறவு இயக்கமானது நன்றாய் நடைபெறும் ஒழுங்கான ஒரு வியாபாரமே தவிரவேறல்ல. ஆனால் சுயநலம் பாராட்டாமல் பொது நன்மையை நாடி உழைத்து வந்தால் மற்றவர்களுக்கு மாத்திரமல்லாமல் தங்களுக்கும் அதிக லாபத்தைக் கொடுக்கும்படியான ஒருஆச்சரியமான மகிமை இந்த கூட்டுறவு சித்தாந்தத்தை அனுஷ்டிப்பவர்களுக்கு உண்டு. அதை உள்ளபடி விவரிப்பதனால் நாணயமும் நன் நடக்கையும் உள்ளவர்களுக்கு பிரதிப்பலனாக லாபத்தை உண்டு பண்ணுகிறது. தன் காரியத்தை மட்டும் கவனிக்க விரும்பாமல், அதில் சேரும் ஒவ்வொருவரும் தான் மற்றவர்களுக்கு உதவி புரிந்தால் தனக்கும் முறையே



அந்த அங்கத்தினர்கள் உதவி புரிவார்களென்றும் அதனால் தங்களுடைய தேவையையும் சீக்கிரமாய் அடைய முடியுமென்றும் நினைக்க வேண்டும்.

பொது நலத்திற்கு வேலை செய்ய வேண்டுவதை சங்க ஆரம்பத்தில் வற்புறுத்திக் கூற வேண்டிய அவசியமில்லை. தன்னுடைய செல்வத்திற்கு சங்கம் காரணமாயிருப்பதை அங்கத்தினர்கள் அறிய அறிய பரஸ்பர சகாயம் சமூக ஒற்றுமை, பொது நலம் இக்குணங்களைத் தாங்களே அடைவார்கள்.

ஒவ்வொரு அங்கத்தினரும் ஒரே மாதிரியான அந்தஸ்தையும், அதிகாரத்தையும் சங்கத்தில் வகித்திருக்க வேண்டுமென்று வற்புறுத்துவதற்குக் காரணம் என்ன என்றால் முதன் முதல் பணக்காரர்களென்றும், ஏழைகளென்றும் ஏற்றத்தாழ்வு அதிகமாய் ஏற்பட்டிருந்ததேயாகும்.

ஆனால் எதற்காக இவர்கள் ஒன்று சேருகிறார்கள்? தங்களுக்கில்லாத சாமான்களை சுலபமாய் பெறுவதற்கல்லவா? ஆகவே, யாருக்கு சங்கத்தின் பிரயோஜனம் அதிகம் வேண்டுமோ அவர்களுக்கு அதிகமான செல்வாக்கு சங்கத்தில் இருக்க வேண்டும். சங்கத்திற்கு வெளியில் அவர்களுடைய அந்தஸ்து எவ்வாறு இருந்தாலும் அவர்கள் எல்லாரும் அவர்களுக்குள்ள குறையில் ஒன்றுதான். அந்தக்குறையை பூர்த்தி செய்யவே ஒன்று சேருகிறார்கள். அங்கத்தினர்களுக்குள் வித்தியாசமான அதிகாரங்கள் கொடுக்கப்பட்டால் அதிகத் தேவையுள்ளவர்களுக்கே அதிக அதிகாரம் கொடுக்க வேண்டும். அஙகத்தினர்கள் எவ்வளவுக்கு சங்கத்துடன் வியாபாரம் செய்கிறார்களோ அதை அனுசரித்து ஓட்டுரிமையைக் கொடுக்கலாம். இப்படி இல்லாவிடில் யாவருக்கும், ஓட்டுரிமை சமமேயாகும். அங்கத்தினர்கள் போடும் பணத்தைச் சார்ந்து எக்காலத்தும் ஓட்டுரிமை ஏற்படக் கூடாது.

கூட்டுறவு முறையின் சாராம்சமாவது ஒவ்வொருவரும் எல்லாருக்காகவும், எல்லாரும் ஒவ்வொருவருக்காகவும் தங்களுக்குப் பொதுவான வேலைகளைப் பூர்த்திசெய்யும் பொருட்டு வேலை செய்யவேண்டும். ஒருவர் பிறருக்கு சகாயமாயிருக்கும்பொழுது அவர்களும் அவ்வாறே தங்களுக்கிருக்கவேண்டுமென்று நிச்சயத்தைக் கோருவது நியாயமே. அம்மாதிரி செய்வதற்கு அங்கத்தினர்களுக்குள் ஒருவிதமான உடன்படிக்கை ஏற்பட்டிருக்கவேண்டும். கூட்டுறவு இயக்கமானது ஒரு வியாபாரம். வியாபாரத்தில் சேருபவர்கள் வியாபாரத்திற்குறிய நிபந்தனைகளும் சட்டதிட்டங்களும் சரிவர ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அந்த சங்கமானது சாதாரணமாய் ஒரு வகையான ஏற்பாட்டின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவேண்டும். அம்மாதிரியான சங்கங்களின் வெற்றியானது சங்கத்தில் சேர்ந்திருக்கும் அங்கத்தினர்கள் ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் செய்யும் வேலையைப்பொறுத்திருக்கிறது. ஆகவே, யாருடன் சேரலாமென்பதற்கும், சேர்ந்தவர்களைத்தள்ளுவதற்கும், தாம் விலகிக்கொள்வதற்கும் சுவாதீனம் இருக்க வேண்டும். ஒவ்வொரு அங்கத்தினரும் மற்றொரு அங்கத்தினரைச் சேர்த்துக் கொள்வதில் தாராளமாய்த் தன்னுடைய அபிப்பிராயத்தை வெளியிட்டு இஷ்டமிருந்தால் சேர்த்துக்கொள்ளவும், இல்லாவிட்டால் தள்ளிவிடவும் அவர்களுக்கு அதிகாரம் ஏற்பட்டிருப்பதால் ஒருவர் சேர வேண்டுமென்றால் மற்றெல்லா அங்கத்தினர்களும் சாதகமாய் அபிப்பிராயங்கொடுத்தால் தான் முடியும். பின்னிட்டு அபிப்பிராயம் மாறினால், ஒரு அங்கத்தினரை தள்ளவேண்டுமென்ற அவசியமேற்பட்டால் தள்ளவும் அங்கத்தினர்களுக்கு சுதந்திரம் ஏற்பட்டிருக்கவேண்டும். ஒரு அங்கத்தினர் மற்ற அங்கத்தினர்களுடன் கலந்து சங்கத்தின் க்ஷேமத்தை நாடி வேலை செய்ய முடியவில்லை என்று எண்ணி நீங்கிவிட விரும்பினால் நீங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்க வேண்டும். மேலே சொன்ன விதிகளில்லாமல் வேறு எந்த விதத்திலும் ஒவ்வொரு அங்கத்தினரும் மற்றெல்லா அங்கத்தினர்களின் பொருட்டும் மற்றெல்லா அங்கத்தினர்களும் ஒவ்வொரு அங்கத்தினரின் க்ஷேமத்தை நாடியும் ஒத்துழைப்பதென்னும் தத்துவத்தை அனுஷ்டிக்கமுடியாது.

சேரவும், விலகவும் யதேச்சையுள்ள இந்த கூட்டுறவு முறையில் சில கட்டாய விதிகள் அனுஷ்டானத்தில் ஏற்படுகின்றன. பர்மா தேசத்தின் ஒரு பாகத்தில் ஏதாவது ஒரு கிராமத்தில் யாரா

வது ஒருவர் ஒரு கூட்டுறவு நாணய சங்கத்தில் அங்கத்தினராக வேண்டுமென்றால் கால் நடை அபாய சம்ரக்ஷணை கூட்டுறவு சங்கத்தில் அங்கத்தினராகச் சேர்ந்தால் தான் நாணயச் சங்கத்தில் சேர்த்துக் கொள்வதென்று ஒரு விதி ஏற்படுத்தப்பட்டிருந்தது. இம்மாதிரி செய்ததானது பின்னிட்டு திடீரென்று நஷ்டம் ஏற்படாமல் தடுக்க முன் ஜாக்கிரதையாய் இருக்கவேண்டியதைப் பற்றி செய்து கொள்ளும் ஒரு விவேகமான ஏற்பாடாகுமேயொழிய கட்டாயப்படுத்துவதாகமாட்டாது. இது மாடுகள் வாங்க கொடுக்கப்பட்ட கடனைத்திருப்பி வசூல் செய்யும் பொருட்டு ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஒரு வழியாகும். பெல்ஜியத்திலுள்ள சில ராஜதானிகளில் கால் நடைகளை இன்ஷியோரன்ஸ் செய்ய வேண்டுமென்று மாகாண அரசாங்கத்தாரால் கட்டாயப்படுத்தப்பட்டிருப்பதாக ஸ்டிரிக்பெண்டு எடுத்துக் காட்டி இருக்கிறார். இன்னும் சில உதாரணங்களும் குறிப்பிடத்தக்கவை. அவைகள் கூட்டுறவு சித்தாந்தத்தை நிராகரிப்பனவல்ல. ஆனால் எளிய ஜனங்களுள் இருக்கும் குணபாகத்தைக் குறித்து மெச்சிக் காட்டும் பொருட்டு எடுத்துக் காட்டப்பட்டன.

டியூன்ஸ் தேசத்தில் எல்லா விவசாயிகளும் சிக்கன சங்கத்தில் சேரவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. பல்கேரியாவில் முக்கியமான பட்டணங்களில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் பாங்குகளில் விவசாயிகள் அங்கத்தினர்களாய்ச் சேரவேண்டுமென்று சட்டம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அம்மாதிரி சேர்ந்தால் அவர்களால் சங்கத்திற்கு வசூலாக வேண்டிய தொகையை சர்க்கார் கிஸ்தியைப் போல் பாக்கியிட்டு வசூல் செய்வது வழக்கம்.

1924 வது வருஷத்தில் தென் ஆப்ரிக்கா கூட்டுறவு சட்டத்தில் அடியில் கண்ட ஒரு பிரிவை சேர்க்கப்பட்டது. விவசாயத் துறையில் எந்த தானியத்தை உற்பத்தி செய்பவர்களாக இருந்த போதிலும் அவர்களில் 100 க்கு 75 பேர் யாதாவதொரு ஜில்லா அல்லது மகாணத்தில் அப்படி உற்பத்தி செய்யப்படும் தானியத்தில் 100 க்கு 75 விகிதம் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கும் ஒரு கூட்டுறவு சங்கத்தின் மூலமாய் விற்கும்படி ஒப்புக்கொண்டிருந்தால் அப்படிப்பட்ட இடங்களில் தான்யத்தை உற்பத்தி செய்யும் ஒவ்வொரு நபரும் தான் அங்கத்தினராயிருந்தாலும் இல்லா விட்டாலும் இந்த சங்கத்தின் மூலமாய்த்தான் விற்கவேண்டுமென்று நாளடைவில் சட்டப்படி கட்டுப்படுத்தப்படுவான். 1919-1923 வரையில் ருஷ்யாவில் கட்டாயப்படுத்தும் வழியைக் கைப்பற்றி வந்தார்கள். இப்பொழுது அதை மாற்றி இருப்பதாகத் தெரிகிறது. அமெரிக்கா தேசத்தில் கால் நடை பராமரிப்புச் சங்கங்களில் சேரும்படி கட்டாயப் படுத்தவேண்டுமென்னும் அபிப்ராயம் பரவிவருகிறது. பனிக்கட்டியால் பயிர்கள் சேதமாவதால், அதற்காக பயிர்களின் நஷ்ட ஈடு பெறுவதற்குக் கட்டப்படும் ஈவுத் தொகையை இந்த கால் நடை சங்கத்தாரே வசூல் செய்யவேண்டுமென்று கட்டாயமாகலாம். இம்மாதிரியான ஏற்பாடுகளை கூட்டுறவாக எண்ணுவதை விட ஜனங்களுக்குள் ஏற்படுத்திக் கொள்ளப்படும் சமூகக் கட்டுப்பாடென்றே எண்ணலாம். அதிக முன்னேற்றம் அடைந்திராத ஜாதியாருக்குள் கூட்டுறவு சித்தாந்தத்தை கட்டாயப்படுத்தி போதிப்பதானது கட்டாயப் படிப்பிற்கு எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியம் இருக்கிறதாக எண்ணப்படுகிறது. சங்கத்தால் ஏற்படும் நன்மை அதிகமாயிருப்பதால் சங்கத்தில் ஜனங்களை கட்டாயமாக அங்கத்தினர்களாகச் சேர்ப்பதைப் பொருட்படுத்த வேண்டியதில்லை.

நன்றாய் நடத்தப்படும் கட்டாயத் தொழில் கூட்டுறவு வியாபார முறைகள் வயதானவர்களுக்குக் கட்டாயக்கல்வியாகும். சுயேச்சைக் கூட்டுறவினால் ஏற்படும் பலன்போல இம்முறையால் அவ்வளவு அதிகபலனை எதிர் பார்க்கமுடியாது. எவராலும் நிர்பந்திக்கப்படாமல் தாங்களே அங்கத்தினராய்ச் சேருவதானது அவரவர்களுக்கு இருக்கும் பொறுப்பை நன்குணரச் செய்கிறது. இச்சங்கங்களுக்கும் அரசாங்கத்தாரால் பொது ஜன நன்மையை நாடி ஏற்படுத்தப்பட்ட சங்கங்களுக்கும் பல அம்சங்களில் பேதமுண்டென்பது வேலை நடப்பிலிருந்து தெரியவரும்.

நாம் முன்னம் கூறியதுபோல் பொதுவாய் ஒன்றை அடைய வேண்டுமென்று ஏற்படும் விருப்பமானது ஜனங்களை ஒன்றாய்ச் சேர்க்கிறது. அவர்கள் யாதாவது ஒன்றை அடையவேண்டுமென்றே ஒன்றாய்ச் சேருகிறார்கள். அதை அடையும்படி செய்வது தான் கூட்டுறவுச் சங்கத்தின் நோக்கமாகும். அச்சங்கமானது அதில் சேரும் அங்கத்தினர்களுக்காகவே ஏற்பட்டதல்லாது ஏனையவர்களுக்கன்று. ஆகையினாலே கூட்டுறவுச் சட்டத்தில் அநேகமாய் சங்கத்தின் அங்கத்தினர்களுக்காகவே என்பதை வற்புறுத்தி எழுதப்பட்டிருக்கிறது. எதாவது ஒரு வியாபாரமானது அதில் சேர்ந்திருக்கும் அங்கத்தினர்களின் பொருட்டுமாத்திரமல்லாமல் மற்ற அங்கத்தினரல்லாதாருக்கும் இருக்கும் பக்ஷத்தில் அது ஒரு சரியான கூட்டுறவு ஸ்காபணமாகாது. பலர் ஒன்றாகச் சேருவதானது அவரவர்களின் அனுகூலத்தை நாடியே. ஏனையவர்களின் நன்மையை உத்தேசித்தல்லவென்பது ஞாபகத்தில் வைக்கவேண்டும். ஆனால் இதில் சுயநலம் பாராட்டல் ஆகாதென்று சொல்ல இன்னொரு தத்துவமிருக்கிறது. அது யாதெனில் கூட்டுறவு ஸ்தாபனங்களில் எவரும் அங்கத்தினராகச் சேருவது சர்வசாத்தியமான காரியமாகும். அதில் இத்தனை அங்கத்தினர்கள் தான் சேரக்கூடுமென்று ஒரு நிர்ணயம் ஏற்படுத்தப்படவில்லை. ஆகையால் இதில் சேருபவர்கள் எல்லோரும் பொதுவாய் ஒன்றை அடைய வேண்டுமென்று விரும்புவதால் ஒன்றாய் சேருகிறார்கள். அவ்விதம் சேருவதால் தங்களுக்கு மட்டுமல்லாது ஏனைய அங்கத்தினர்களுக்கும் நன்மை உண்டாவதனால் சுயநலம் என்ற சாத்தானுக்கு இடமேற்படுவதற்கில்லை. ஏனெனில் அதில் சேர்ந்திருக்கும் அங்கத்தினர்கள் யாவருக்கும் நன்மையை உண்டாக்கி தாங்களும் நன்மை அடைவதால் அநேகமாக பொது நன்மையை அடையும் பொருட்டு சேருவதாக எண்ணப்படுகிறது. அவர்கள் பொதுவாய் அந்த நன்மையை அடைய விரும்பி சட்ட திட்டங்களுக்கிணங்கி சேர இஷ்டப்படும் எல்லோரையும் சேர்த்துக் கொள்ளத் தயாராயிருக்க வேண்டும்.

அங்கத்தினர்களாய் சேருபவர்கள் ஏதோ ஒன்றைப் பொதுவாய் ஒவ்வொருவரும் அடைய விரும்பி சேருவதால் ஒவ்வொருவரும் நன்மையை அடையமுடியும். ஆனால் அதில் ஒரு அங்கத்தினர் அடைய விரும்பும் பலனுக்கும் மற்றொரு அங்கத்தினர் அடைய விரும்பும் பலனுக்கும் ஏற்றத்தாழ்வு இருக்கலாம். அதற்குத் தக்கபடி பலனை அடையும்படி நேரிடும். அதனால் சொற்ப பலனடைய ஏற்பட்ட அங்கத்தினர் அதிக பலனடையும் அங்கத்தினருடன் கணக்கிட்டுப் பார்த்து ஏற்றத்தாழ்வை சரிபடுத்த வேண்டுமென்று சொல்லமுடியாது. அம்மாதிரி செய்வதானது மற்றவர்கள் ஒருவரைவிட அதிக நன்மையை அடையவேண்டிய அவசியம் ஏற்பட்டிருப்பதற்குத் தக்கபடி அடையக்கூடாதென்று சொல்வதாகும். அது சரியாகாது, இதில் முக்கியமான அபாயம் ஒன்றுண்டு. அது சற்றேறக்குறைய எல்லா இடங்களிலும் பொதுவாய் உள்ளதேயாகும். இதைத்தான் தவிர்க்க வேண்டும். அதாவது அதிகக் கடன் தேவையுள்ளவன் வாங்கும் அதிகக்கடனால் ஏற்படும் லாபத்தை அதிக முதல் போட்டவனுக்குக் கொடுக்கக்கூடாது.

அசலுக்கு பொதுவாய் நியாயமான வட்டி கொடுக்கவேண்டு மென்பது கூட்டுறவு தத்துவமாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால் வட்டியைத்தவிர மற்றெந்த விதமான சுதந்திரமும் முதல் போட்டதற்காக முதலாளிக்குக் கொடுக்கக்கூடாதென்பது கவனிக்கத்தக்கது. வியாபாரத்தை நடத்துவதில் அதை அடக்கியாளும்படியான அதிகாரத்தை முதல் போட்டவனுக்குக் கொஞ்சமேனும் கொடுக்கக்கூடாது. சங்கத்தின் லேவாதேவியினால் பங்கிடும்படியான மிச்ச லாபமேற்பட்டால் அதை அங்கத்தினர்களின் வியாபாரத்தை யொட்டி பங்கிட வேண்டுமே யொழிய முதலை அனுசரித்து பங்கிடக்கூடாது. சாதாரணமாய் வியாபார ஒழுங்கை உத்தேசித்து ஒரு சமயம் தற்செயலாய் நேரிடக்கூடிய கஷ்டத்தை அனுசரித்து முன் எச்சரிக்கையான ஏற்பாடு செய்துவைப்பதுண்டு. அப்படி நஷ்டம் ஏற்படாமல் இருந்தாலும் இருக்கலாம். சரக்குகளை விற்கும்பொழுது வாங்கும் விலையைவிட அதிக விலைக்கு விற்பதுண்டு. கடன் கொடுப்பதில் செலவுகளை ஈடடைப்பதற்காக வாங்கும் கடனின் வட்டி விகிதத்தைவிட கொடுக்கும் கடன்வட்டி அதிகமிருக்கலாம். உற்பத்தி செய்பவனுக்கு தன் சரக்கின் மதிப்பைவிட விலை குறைவாகவும் கொடுப்பதுண்டு. மேலே

சொன்ன எல்லாவகைகளிலும் மிச்சம் ஏற்படும் மிகுதித்தொகையானது லாபமென்று மற்ற வகைகளில் நினைக்கப்படுவதுபோல் நினைக்கப்படாமல் அங்கத்தினர்களிடமிருந்து முன் ஜாக்கிரதையின் பொருட்டு அதிகமாய் வாங்கப்பட்டதன் பலனாக ஏற்பட்டிருக்கும் தொகையாகையால் அது எவரெவர்களிடமிருந்து வசூலிக்கப்பட்டதோ அவர்களுக்கே அது சேரவேண்டும்.

இக்காலத்தில் ஜனங்கள் ஏராளமாய் முதல் வைத்து வியாபாரம் செய்துவரும் வகையில் அதிகமாய் பழகியும் பார்த்தும் வருகிறபடியால் அதிலுள்ள தத்துவங்களைக் கூட்டுறவிலும் கொண்டுவந்து விடாமலிருப்பதென்றால் கஷ்டப்படுகிறார்கள். கூட்டுறவானது முதலாளிகள் முதல் வைத்து நடத்தும் வியாபாரத்தின் திரிபாகாது. ஆனால் கூட்டுறவானது முதலாளிகளால் நடத்தப்படும் வியாபாரத்திலுள்ள தீமைகளை ஒழிக்க ஓர் முறையாகும்.

லாபத்தை பரிசீலனை செய்வது, அடக்கியாள்வது, தேர்ந்தெடுக்கும் அதிகாரம், பாத்தியதையை மாற்றிக்கொள்ளல், அங்கத்தினர்களின் சுதந்திரம், அங்கத்தினர்களல்லாதவர்களுடன் நடந்துகொள்ளவேண்டிய முறை ஆகிய அநேக வகைகளில் கூட்டுறவு சங்கங்களுக்கும் முதலாளிகளின் இணைக்கப்பட்ட வியாபார ஸ்தாபனங்களுக்கும் பெருமித வித்தியாசங்களுண்டு. கூட்டுறவு சங்கங்களானது சொற்பமான ஒரு வியாபாரத்தில் ஏழைகள் துணிந்து செய்ய ஓர் உத்தமமான மார்க்கமாகும். விவசாயிகள் அனுஷ்டிக்கக்கூடிய சிறந்த மார்க்கம் கூட்டுறவேயாகும். ஏனென்றால் அநேக விவசாயிகள் சொற்ப வருமானமுடையவர்களே. அவர்களுடைய தொழிலை அனுசரித்து யோசித்துப்பார்த்தால் தொழிற்சாலைகளில் உள்ளதுபோல் இதில் ஒன்று சேர்ந்து செய்யமுடியாது. எந்த வியாபாரத்திலும் ஜெயம் பெற்று லாபகரமாயும், அனுகூலமாயும் நடந்துவர வேண்டுமென்றால் சட்டதிட்டங்களுடன் ஒரு அமைப்பு இருந்தால்தான் முடியும். அந்த அமைப்பு ஒன்றே ஜெயம்பெற சிறந்த மார்க்கம். முக்கியமாய் விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்கு அப்படிப்பட்ட கூட்டுறவு ஸ்தாபனமொன்று இன்றியமையாததாகும். ஆகையால் நாகரீகமுள்ள தேசங்களிலெல்லாம் அரசாங்கத்தார் கூட்டுறவின் தத்துவத்தைப் போதித்து அதனை வியாபிக்கச்செய்து வருகிறார்கள். இங்கிலாந்து தவிர மற்ற இடங்களில் விவசாயமானது இன்றியமையாததாக மாத்திரமல்லாமல் முதன்மையானதும் மிகப்பெரியதுமான தொழிலாக இருந்து வருகிறது. ஒவ்வொரு நாட்டினுக்கும் விவசாயமானது ஜீவாதார நாடி என்பதை கடந்த மாகாயுத்தம் சகலரும் உணரச் செய்துவிட்டது. ஆகையால் எந்த தேசத்திலும் விவசாயிகள் தங்கள் நிலத்திலிருந்து எவ்வளவு அதிகமாய் உற்பத்திசெய்யக் கூடுமோ, அவ்வளவு உற்பத்திசெய்ய வேண்டுமென்றால், அனுஷ்டிக்கப்படவேண்டிய மார்க்கம் கூட்டுறவன்றி மற்றொன்றல்லவென்று சொல்வது மிகைபடக் கூறுவதாகாது. கிராமவாசிகளைப் பிடிக்கும் வறுமைப் பிணிக்கெல்லாம் கூட்டுறவு இயக்கந்தான் சஞ்சீவி போன்ற மருந்தென்றெண்ணி நாகரீகமுள்ள தேசங்களின் எல்லா அரசாங்கத்தார்களும் ஏராளமான திரவியம் செலவிட்டு இந்த இயக்கத்தை மும்முரமாய் வியாபிக்கச் செய்துவருகிறார்கள்.

கூட்டுறவு இயக்கத்திற்கும் கூட்டு முதலாளிகளின் இயக்கத்திற்கும் வித்தியாசமுண்டு. கூட்டுறவு சமாதானத்தையும் கூட்டுமுதல் வியாபாரம் மனஸ்தாபத்தையும் உண்டாக்குகிறது. கூட்டுறவு சுயநலம்பாராட்டாமையையும், கூட்டு முதல் வியாபாரம் சுயநலத்தையும் உண்டாக்குகிறது. ஆனால் இரண்டு ஸ்தாபனங்களும் செல்வ அபிவிருத்தியை உத்தேசித்து ஏற்படுத்தப்பட்டவைகளே. ஐரோப்பிய கூட்டுறவாளர்களில் பலரும், அதிலும் சில முக்கியஸ்தர்களும், கூட்டுறவானது ஒரு குடியானவனை அதிக பணம் அடையச் செய்வதுடன், மிச்சம் பிடிக்க உதவுவதுடன், அவனைக் காப்பாற்றத்தக்க ஓர் ஸ்தாபனமாக இருக்கிறது என அபிப்பிராயப்படுகிறார்கள். மற்றும் சில கூட்டுறவாளர்கள் பொதுவாய் கூட்டுறவானது ஜனங்களின் செல்வ விருத்தியை மாத்திரமல்லாமல் சர்வ ஜனங்களும் வலிஞர்களென்றும், தனவந்தர்களென்றும் வித்தியாசமில்லாமல் சமத்துவத்தை அடைய சிறந்த மார்க்கமென்றெண்ணி இக்கூட்டுறவை ஓர் மதமாக அனுஷ்டித்து வருகிறார்கள். கூட்டுறவு செல்வ அபிவிருத்தியைமட்டு

(13-ம் பக்கம் பார்க்க)



# ஐக்கிய டென்மார்க்கு

எப். ஸி. ஹோவ், அமெரிக்கா.

## II

டேனிய விவசாயிகள் முட்டைகளைச் சேர்க்கவும், சிப்பங்கட்டவும், கப்பலேற்றவும், விற்கவும் ஐக்கிய சங்கங்கள் நிறுவி இருக்கின்றனர். முட்டைகளனைத்தும் அநேகமாய் லண்டன் நகரிலேயே செலவாகின்றன. அவைகள் புதிதாகவும், எல்லாம் ஒரே தரமாகவும் இருக்கிறபடியால் வாங்குகிறவர்கள் அதைப் பிரியப்பட்டு வாங்குகிறார்கள். முட்டைகளை ஏற்றுமதி செய்வதற்காகவுள்ள ஐக்கிய சங்கங்களால் இவையாவும் ஒழுங்காக நடந்துவருகிறது. டென்மார்க்கில் நடைபெறும் கூட்டுறவு முறைகளிலெல்லாம் இது வெகு விசேஷமானது. அதிலிருந்து டேனிய விவசாயியானவன் தனக்கும் தன் சரக்குக்கும் கெட்ட பேர் ஏற்படாமல் பாதுகாப்பதில் எவ்வளவு தூரம் விடா முயற்சியோடும், பரம ஜாக்கிரதையோடும் உழைக்கிறான் என்பது தெரியவரும். தற்போது முட்டை ஏற்றுமதி செய்யும் சபைகள் மொத்தம் 550 உள்ளன. அவற்றில் 45,000 அங்கத்தினர்கள் உளர்.

1880ஆம் வருஷத்திற்கு முன் டென்மார்க்கில் கோழிகளையும், முட்டைகளையும் பற்றிய வியாபாரம் ஐக்கிய அமெரிக்காவிலுள்ளதுபோல் தரகர்கள் கையில் அகப்பட்டிருந்தது. அவர்கள் நாட்டுப்புறங்களில் சென்று ஒரு குறித்த விலைக்கு முட்டைகளை வாங்கிவரும்படி ஆள் அனுப்புவார்கள். இவ்வாறு சேகரித்து இங்கிலாந்தில் விற்பனைக்கு முட்டைகளை அனுப்பப்படும். இத்தரகர்கள் முட்டைகளைச் சேகரித்து குளிர் காலத்தில் விற்றால் அதிக விலைக்குப்போகுமென்றெண்ணி அவ்வாறு செய்தார்கள். வாங்கினவர்கள் இவைகள் பழைய முட்டைகளென்று கண்டதும் டேனியர்களுடைய பேர் கெட ஆரம்பித்தது. இதையுணர்ந்த டேனிய விவசாயிகள் சுத்தமான புது முட்டைகளையே விற்பனை செய்யுமாறு தாமே ஏற்பாடு செய்ய முன் வந்தனர். மழை காலத்தில் அதிக விலைக்கு விற்கலாமென்றிருந்த தரகர்கள் இவர்களது பிரயத்தனத்திற்கு இடையூராக நின்றனர். வெண்ணை, பன்றி மாமிசம் இவ்விரு தொழில்களிலும் தரகர்களை எப்படி ஒழிக்கலாயிற்றோ அப்படியே முட்டைகளின் வியாபார சம்பந்தமாகவும் செய்தனர். முட்டைகளைச் சேகரிக்கவும், பத்திரமாய் வைக்கவும், விற்பனை செய்யவும் தாமே தொடங்கினர். பாற்சாலைகள் ஏற்படுத்தியபோது, எப்படிச் சிறுகக்கட்டி பெருக வாழ்க என்னும்படியாக அற்ப ஆரம்பத்திலிருந்து விருத்தியடைந்தனரோ அப்படியே இதிலும் தொடங்கினர். ஒவ்வொரு குடியானவனும் ஐக்கிய சங்கத்தில் சேரும்போது பழைய முட்டைகளைக் கொடுப்பானேயாகில் அபராதத்திற்குட்படுவதாக ஒப்புக்கொண்டான். ஒவ்வொரு முட்டையும் எந்தத் தேதியில், எந்த ஜில்லாவிலிருந்து, எந்தக் குடியானவனிடமிருந்து வந்ததென்று தெரியும்படி சில குறிகள் அதன்மேல் போடுகின்றனர். இதன் முதல் சங்கம் 1895ல் ஏற்பட்டது. இதன் ஒவ்வொரு கிளைச்சங்கத்திற்கும் ஒரு நம்பர் கொடுக்கப்படும். இதன் ஒவ்வொரு அங்கத்தினருக்கும் ஒரு தனி நம்பரும் கொடுக்கப்படும். இவ்விரண்டு நம்பர்களும் முட்டையின் மேல்

---

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

மல்லாது ஜனங்களுக்குச் சன்மார்க்கத்தைப் புகட்டி அவர்களுடைய கௌரவத்தையும் நன்மதிப்பையும் அதிகரிக்கச் செய்யவும் கூடிய ஒரு சாதனமென்று அவர்கள் நினைக்கிறார்கள். இந்தக் கூட்டுறவின் தத்துவத்தை அனுஷ்டித்த மக்கள் நிறைந்த இடங்களில், இவ்வியக்கம் வேரூன்றி இருக்கும் பாகங்களில், ஜனங்களுக்கு ஏற்பட்டிருக்கும் அனுகூலங்களைப் பார்க்குமிடத்து எவரும் இந்த இயக்கத்திற்கு உதவி புரிய தாங்களாகவே முன்வருவார்களென்பதில் ஐயமில்லை.

முத்திரையிடப்படும். இவைகளால் பழைய முட்டைகள் யாரிடமிருந்து வந்தனவென்று பார்த்து அந்தப் பேர்வழிக்கு அபராதம் போடப்படும். முட்டைகளை சேகரிப்பதற்கு இந்த ஐக்கிய சங்கத்தார் ஒவ்வொரு ஜில்லாவிற்கும் தன் ஆள் ஒருவரை அனுப்பி முட்டைகளை வாங்கி வருகின்றனர்.

முட்டை ஏற்றுமதியின் அபிவிருத்தி :— முட்டை ஏற்றுமதி ஐக்கிய சங்கமானது மூவாயிரம் அங்கத்தினர்களை உடையதாயிற்று. அச்சங்கம் 24 கிளைச்சங்கங்களாக வகுக்கப்பட்டது. இப்போது 45,000 அங்கத்தினர்கள் உளர். கிளைச்சங்கங்கள் 550 ஆக அதிகரித்திருக்கின்றன. முதல் வருஷத்தில் போட்டுப்புரட்டின முதல் 1,95,000 டாலர். 1915 ல் 2,130,000 டாலராக அதிகரித்திருக்கிறது.

பணம் சம்பாதிப்பதில் நோக்கமுடைய மற்றவர்கள் ஒவ்வொரு வகையிலும் ஐக்கிய முயற்சிக்கு எதிராய் நின்றனர். ஆனால் ஐக்கிய சங்கத்தில் புது முட்டைகளையே விற்று வந்து தாங்கள் விற்கும் முட்டைகளுக்கு ஜவாப்தாரியாக நின்றபடியால் மிக சமீபத்தில் ஐக்கிய சங்கத்தாருக்கு தனி வியாபாரிகளை விட உயர்ந்த விலை கிடைக்கலாயிற்று. இதனால் தனி வியாபாரிகளும் தம் சரக்கை உயர்ந்த விலைசாகவே வாங்க வேண்டி வந்தது. அவர்களும் பழைய முட்டைகளை வாங்க மறுப்பது கண்டு தனித்திருந்த விவசாயிகளும் ஐக்கிய சங்கத்தில் சேரத்தொடங்கினர். டேனியர்களுடைய முட்டை சிலாக்கியமாகவே இருக்குமென்ற பேர் எளிதில் பரவியது. மூன்று வருஷத்திற்குள் இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்ட முட்டை ஏற்றுமதி எழுமடங்கு அபிவிருத்தியாயிற்று. நல்ல சரக்கு அனுப்பியதற்குத்தக்கபடி நல்ல விலையும் கிடைத்தது. பாற்சாலையும் பன்றி மாமிசத் தொழிற்சாலையும் ஐக்கிய முறையில் அபிவிருத்தியாயிருக்கிற மாதிரி முட்டைத்தொழிலும் அபிவிருத்தி அடையத்தலைப்பட்டது. 1909ல் விவசாயிகளில் ஐந்துக்கு ஒருவர் ஐக்கிய சங்கத்தில் சேர்ந்திருந்தனர். ஐக்கிய இயக்கத்தின் பயனாக டேனியர் முட்டையின் தரத்தைத் திட்டம் செய்ய முடிந்தது. அதனால் குடியானவர்களுக்கு அதிக விலை கிடைக்கலாயிற்று. மேலும், வியாபார முழுதும் இடை நடுவிலுள்ள தரகர் வசப்பட்டுப்போகாமல் குடியானவர்களுக்கு லாபகரமாய்ச் செய்யப்பட்டது. வெண்ணெயும் பன்றி மாமிசமும் ஐக்கிய முயற்சியால் எவ்வாறு மென்மேலும் அதிகம் செய்யப்பட்டனவோ அவ்வாறே ஐக்கிய முறையில் முட்டை ஏற்றுமதி செய்யப்பட்டமையால் தேசத்தில் கோழிகள் 1893 ல் 5,900,000 த்திலிருந்து 1914 ல் 15,100,000 ஆக விருத்தி அடைந்தன.

முட்டை ஏற்றுமதி செய்யும் ஐக்கிய சங்கமானது 500 கிளைச்சங்கங்களை உடைய ஓர் பெரு முயற்சியாக நடக்கிறது. மேற்படி சங்கத்தின் சட்டப் பிரகாரம் அங்கத்தினர்கள் தம் முட்டைகள் எல்லாவற்றையும் ஐக்கிய சங்கத்திற்கே விற்றல் வேண்டும். குடியானவர்கள் தினந்தோறும் கூடுகளிலிருந்து முட்டைகளைச் சேகரித்து வாரந்தோறும் ஐக்கிய சங்கத்துக்காக அவற்றை வாங்கிக்கொண்டு போக வரும் மனிதன் வசம் கொடுப்பார்கள். வருஷக்கடைசியில் வரும் மொத்தலாபத்தின்பேர் பாதி அங்கத்தினருக்குப் பிரித்துக் கொடுக்கப்படும். மற்றொரு பாதி மூலநிதியாக வைத்துக் கொள்ளப்படும். முட்டை ஏற்றுமதி ஐக்கிய சங்கமானது 1908ஞு 50,000 டாலர்கள் ரிசர்வ் பண்டு சேகரித்தது அங்கத்தினர்க்கு அவர்கள் பாத்தியதையாய் நின்று எழுதிக்கொடுத்த பத்திரங்களை திருப்பிக் கொடுத்து கடன்கள் தீர்க்கப்பட்டன.

டேனியர்களுடைய வெண்ணெய்க்கும் பன்றி மாமிசத்திற்கும் எவ்வளவு உயர்ந்த விலை கிடைத்ததோ அவ்வளவு உயர்ந்த விலை முட்டைக்கும் இங்கிலாந்தில் கிடைக்கிறது. கோபன் ஹேகன் நகரில் முட்டைகளின் பெரிய ஐக்கிய வர்த்தக சாலை உள்ளது. இங்கே முட்டைகளைச் சுத்தஞ்செய்து ஏற்றுமதிக்குத் தரம் பிரித்து வைக்கப்படும். செட்ட முட்டைகளைத் தள்ளுபடி செய்து விடுவார்கள். நல்ல முட்டைகளின் மேல் குறியிட்டு ஏற்றுமதி செய்வார்கள். கெட்ட முட்டைகளை எந்தக் குடியானவன் அனுப்புவானோ அவனிடமே திருப்பி விட்டு அவன் கணக்கில் கழித்து விடுவார்கள். அவனுக்கு எச்சரிக்கை செய்து அபராதம் போடப்படும். பழையபடியும் அதே குற்றத்தைச் செய்வானாயின் சங்கத்தினின்றும் நீக்கப்படுவான்.



டேனிய விவசாயி தான் வாங்கும் சாமான்களை மொத்த விலைக்கு வாங்குகிறான். விவசாயிகளுக்குத் தம் ஆடு மாடு முதலியனவற்றிற்கு வேண்டிய தீனியும், விவசாயத்திற்குறிய யந்திர சாதனங்களும் மற்றும் அவசியமான வீட்டுச் சாமான்களும், ஐக்கிய முறையில் மொத்த விலைக்கு வாங்கிச் சில்லரைப் பண்டசாலைகளின் மூலமாய் பிரித்து விற்கப் படுவதில் சரசமான விலைக்குக் கிடைக்கிறது. ஒவ்வொரு கிராமத்திலும் ஓர் ஐக்கிய பண்டசாலையுள்ளது. இத்தகைய அநேக உள்ளூர் பண்டசாலைகள் சேர்ந்து தம் பிரதிநிதிகளை நியமித்து அவர்களிடத்தில் பணத்தைப் பொறுப்புக் கட்டி மொத்த விலைக்கு சாமான்களை வாங்குகின்றனர்.

## ஐக்கியப் பண்டசாலை

ஐக்கிய பண்டசாலைகளைப்பற்றி 1919ல் டென்மார்க்கில் எடுத்த கணக்கின்படி 1691 பண்டசாலைகளும் அவற்றைச் சேர்ந்த அங்கத்தினர் 3,17,000 பேர்களும் இருந்ததாகத் தெரிய வந்தது. அதாவது அத்தேசத்தின் ஜனத்தொகையில் பத்துக்கொருவர் ஐக்கியப் பண்டசாலையில் சேர்ந்தவராவர். இங்கிலாந்தில் 15 பேருக்கொருவரும், ஜெர்மனியில் 20 பேருக்கொருவரும், ஐக்கிய சங்கத்தில் சேர்ந்தவர்களாயிருக்கின்றனர். இவைகளில் 1613 நாட்டுப்புறங்களிலும், 17 கோபென்ஹேகென் நகரிலும், 77 சிறு பட்டணங்களிலும் அமைக்கப்பெற்றிருந்தன. 1910 ம் வருஷத்தில் மொத்த விலையில் வியாபாரம் செய்யும் ஐக்கிய சங்கங்களைப்பற்றி விசாரணை செய்ததில் அங்கத்தினர்களில் 100க்கு 32 பேர்கள் குடியானவர்கள் ; 41 பேர்கள் சொற்பமான நிலங்களையுடையவர்கள் ; 27 பேர் தொழிலாளர்கள்.

1896 ம்ஞு த்தில் மொத்த வியாபாரத்திற்காக ஐக்கிய சங்கம் ஏற்பட்டது. கோபென்ஹேகெனில் தலைமை ஆபீஸ்களும் கிடங்குகளும் உள்ளவை தவிர 12 சிறு பட்டணங்களிலும் கிளைச் சங்கங்களும் கிடங்குகளும் உள்ளன. காப்பிக் கொட்டை வறுப்பதற்கும், சாகொலேட் முதலிய தின்பண்டங்கள், புகையிலைச் சுருட்டுகள் செய்வதற்கும் ஐக்கியத் தொழிற்சாலைகள் ஏற்பட்டுள்ளன. ரசாயன பதார்த்தங்கள் செய்ய ஒரு யந்திரசாலையும், மசால் சரக்குகளை அரைக்க ஒரு யந்திரசாலையும், ஸ்டாக்கிங் முதலியன செய்யும் தொழிற்சாலை யொன்றும், புருஷர்களுடைய சொக்காய் துணிகள் தைத்து விற்பதற்கு ஓர் தொழிற்சாலையும் உள்ளது. தேவையான தேயிலை இறக்குமதி வியாபாரம் நடக்கிறது. ஜோடுகள் செய்யப்படும் தொழிற்சாலையில் பங்குகள் மொத்த வியாபாரத்திற்காக ஏற்பட்டுள்ள ஐக்கிய சங்கத்தார் எடுத்திருக்கின்றனர். இப்பெரிய ஐக்கிய வர்த்தக சங்கத்தில் ஐக்கியப் பண்டசாலைகள்தான் அங்கத்தினர்களாகச் சேரலாம். அவர்கள்தான் இம்முறையில் ஏற்பாடு செய்து முதல் போட்டு நடத்துகின்றனர். 1916 ல் 2,40,000 அங்கத்தினர்களை மொத்தத்தில் உடைய 1537 உள்ளூர் ஐக்கிய சங்கங்கள் ஐக்கியப் பெருவர்த்தக சங்கத்தில் அங்கத்தினர்களாகச் சேர்ந்தனர். 23,500,000 டாலர் ஐக்கியப் பெருவர்த்தக சங்கத்தார் போட்டுப் புரட்டியதில் 1,965,000 டாலர் லாபம் கிடைத்துள்ளது. வெவ்வேறு தொழில்களின் மொத்தக்கொள் முதல் 50,00,000 டாலர்; சேமநிதி 15,75,000. டாலர்; கட்டிடங்களின் மதிப்பு 14,00,000. டாலர்.

1888 ஞு த்தில் மொத்த லாபம் 100-க்கு 2½ விகிதம் கிடைத்தது. இப்போது 100-க்கு 7½ விகிதம் கிடைத்திருக்கிறது. மீதி லாபமும் அதே விகிதத்தில் அதிகரித்திருக்கிறது. அதாவது 100-க்கு ரூ 7½ லாபம் கிடைத்ததென்றால் இப்போது தொழிலாளருக்கு அதிகக் கூலி கொடுத்தும் 100-க்கு ரூ 5 ஆக மீதி லாபம் அதிகரித்திருக்கிறது

மொத்த ஐக்கிய வியாபார சங்கங்களையும் அதன் கிளைச் சங்கங்களையும் தவிர 15 ஐக்கிய சங்கங்கள் சில சிறியதும், சில பெரியதுமாக உள்ளன. 3,20,000. க்ரோனர் முதல் போட்டுப் புரட்டி தானியம், உணவு பொருள்கள், விதைகள், எரு இவைகளை வியாபாரம் செய்து வருகின்றனர். 1900 ஞு த்தில் 5,40,000க்ரோனர்தான் போட்டுப் புரட்டியிருக்கின்றனர். அதே காலத்திற்குள் அங்கத்தினர்களின் சங்கியை 20,000 த்தினின்று 70,000-க்கு அதிகரித்திருக்கிறது. இம்மாதிரி தனிக் கூட்டுறவுச் சங்

கங்கள் வருஷத்திற்கு வருஷம் வித்தியாசப்படும். சிறு சங்கங்கள் பெரியவைகளின் கிளைகளாகச் சேர்ந்து கொள்வதுண்டு. இம்மாதிரி சங்கத்தில் மிகப்பெரியது ஜட்லாந்திலுள்ள ஐக்கிய உணவுப்பொருள் சங்கமாம். அதன் அங்கத்தினர் 30,000 பேர்கள் ; வருஷ வியாபாரம் 5,00,00,000 டாலர் ஆகிறது.

## கால்நடை அபிவிருத்திச் சங்கம்.

விவசாயிகளின் விளைபொருள்களை விற்கவும், தேவையான சரக்குகளை வாங்கவும் மட்டுமே ஐக்கிய சங்கங்கள் உபயோகமாக இல்லை. இத்துடன் மற்றும் பல பிரவர்த்திகளிலும் ஐக்கிய சங்கங்கள் வேலைசெய்து வருகின்றன. பசுக்கள், பன்றிகள் முதலியன வளர்த்து விருத்தி செய்ய சங்கங்கள் உள்ளன. விதைகளைப் பரிசோதிக்கும்படியான சங்கங்கள் உண்டு. இவ்வாறு விவசாயிகளுக்கு அவசியமான ஒவ்வொன்றுக்கும் ஒரு ஐக்கிய சங்கம் உள்ளது. எதிர் பாராத சம்பவங்கள் நேரிட்டால் உண்டாகும் நஷ்டங்களுக்கு ஈடு செய்யவும், ஆலங்கட்டி, மழை, புயற்காற்று முதலியனவற்றால் உண்டாகும் நஷ்டங்களுக்கு ஈடு செய்யவும் ஐக்கிய இன்ஷியோரன்ஸ் சங்கங்கள் உள்ளன. கால்நடைப் பிராணிகளுக்கு க்ஷயரோகம்வாராமல் தடுக்கவும், வெவ்வேறு தரமான பசுமாடுகள் எவ்வளவு தீனி தின்கின்றன வென்றும், பால் எவ்வளவு கொடுக்கின்றன வென்றும் கணக்குப்பார்த்து நிச்சயிக்கும் நிபுணர்களடங்கிய சபை ஐக்கிய முறையில் நடைபெறுகிறது. விவசாயிகளுக்கு அவசியமான எந்த விதமான காரியமும் ஐக்கிய முயற்சியால் நடத்திக்கொள்ளுகின்றனர். அவசியம் நேரும்போதெல்லாம் சாதாரணமாய் விவசாயி ஒருவன் குறைந்தது பத்துப்பன்னிரண்டு ஐக்கிய சங்கங்களில் சேர்ந்திருப்பான். ஆடு, மாடுகள், குதிரைகள், பன்றிகள் முதலிய கால் நடைப் பிராணிகளை விருத்தி செய்து உயர்ந்த தரமாக்கி வளர்க்க ஐக்கிய சங்கம் உள்ளன. இப்பிரதான ஐக்கிய சபைகளுக்கு சர்க்காருடைய பணவுதவி உண்டு. இவ்விதமாக 1884 சபைகள் 1909-ம் ஆண்டில் இருந்தன.

ஒரு பசு எவ்வளவு பால் கொடுக்கிறது? எவ்வளவு தீனி தின்கிறது? பாலில் எவ்வளவு வெண்ணெய்ப்பசை உண்டு? ஒரு பசுவைப்பாதுகாக்க எவ்வளவு பணம் செலவாகிறது? இத்தகைய விவரங்களை பிரதான ஐக்கிய சங்கங்கள் கவனிக்கின்றன. இப்படி கவனிக்கப்படுவதால் இன்னின்ன பசுக்கள் உத்தம ஜாதிப்பசுக்களென்பது தெரியவருகின்றது. 1895-௵த்தில் முதலாவது பிரதான ஐக்கிய சங்கங்கள் ஸ்தாபிக்கப்பெற்றது. 1913-ம் ௵த்தில் அப்படிப்பட்ட பிரதான ஐக்கிய சங்கங்கள் 592 உள்ளன. இச்சங்கங்களுக்கெல்லாம் சர்க்கார் சிறிது திரவிய சகாயஞ் செய்கின்றனர். சங்கத்தைச் சேர்ந்த விவசாயி ஒவ்வொருவரையும் பரிசோதகர் ஒருவர் 18 நாளைக்கு ஒரு முறை பார்த்து வருகிறார். சங்கத்தின் பார்வையிலிருக்கும் பசுக்கள் தனிப்பட்ட பசுக்கள் பொதுவாய் கொடுக்கும் பாலை விட அதிகமாகவே பால்கொடுப்பதாக வருஷாந்திரக் கணக்கிலிருந்து தெரியவருகிறது. வித்தியாசமானது சராசரி முறையே 3080 கலோவும், 2260 கலோவுமாகிறது.

## ஐக்கிய பாங்கு

டென்மார்க்கில் விவசாயிகள் பாங்குகளை நடத்துகிறார்கள். அத்தேசத்தில் ஐக்கிய முறையில் நடைபெறும் பாங்குகள் 521. 1911 ௵த்தில் அவர்கள் கட்டியிருந்த பணம் 216,000,000 டாலர். டிபாசிட்டு கட்டியிருந்தவர்களின் சங்கியை 1,352,000. அதாவது மொத்த ஜனத்தொகையில் அரைவாசிப் பேர்களாகிறார்கள். சராசரி ஒவ்வொருவருடைய டிபாசிட்டும் 160 டாலர் ஆகின்றது. ஐக்கிய பாங்குகளின் டைரக்டர்கள் விவசாயிகளே. அவர்கள் இனாமாக உழைக்கின்றனர். தம்மைச்சேர்ந்த அண்டையிலிருப்போருக்குக் கடன் வேண்டுமாயின் கடன் விண்ணப்பங்களை ஏற்று தேவையைப்பூர்த்தி செய்வார்கள். சபைத்தலைவர் மட்டும் சொற்பமான சம்பளம் வாங்கிக்கொள்வார். மாதம் இருமுறை கடன் கொடுக்கவும், புஸ்தகங்களையும் கணக்குகளையும் பரிசோதிக்கவும் டைரக்டர்கள் மாதம் இருமுறை கூடுவார்கள். இந்த பாங்கிகளைப் பற்றிய விசேஷம் என்னவெனில் இதன் லாபம் பங்காளிகளுக்குச் சேராது. ஆனால் ஜனசமூகத்தின் பொதுச் செலவிற்கும், கல்விக்குமே சேரும்.

ஐக்கிய சங்கங்களே முதல் போட்டு ஏற்பாடு செய்து நடத்திவரும் ஐக்கிய பாங்கு 1914 ௵த்



தில் கோகன் ஹேகன் நகரில் நிறுவப்பட்டது. இந்த பாங்கிற்கு 96 ஜில்லாக்களிலும், பட்டணங்களிலும் கிளைக்காரியாலயங்கள் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த பாங்கு பொதுவாக கொடுக்கல் வாங்கல் செய்வதற்கு அதிகாரப் பத்திரம் பெற்றிருக்கிறது. இந்த பாங்கிற்கான முதல் வருஷந்தோறும் ஐக்கிய சங்கத்தார் போட்டுப் புரட்டும் தொகைக்குத் தக்கபடி ஓர் விகிதம் ஒவ்வொரு ஐக்கிய சங்கத்தினின்றும் சில பங்குகள் போடப்படும். மற்ற பாங்குகளைப்போல இவ்வாறு கிடைத்த முதலை வைத்துக்கொண்டு இப்பாங்கு தனது உத்திரவாதத்தை நிறைவேற்றுகிறது.

இந்த பாங்கியில் ஐக்கிய சங்கங்கள் மட்டுமே சேருவதற்குரியன. ஐக்கிய நாணயச் சங்கங்கள் பணம் மிகுத்துவைக்கும் ஐக்கியச் சங்கங்கள், சேவிங்ஸ் பாங்குகள், ஐந்து பேர்களுக்கு மேற்பட்ட நபர்கள் சேர்ந்து நடத்தும் லேவாதேவிச் சங்கங்கள், அல்லது நகரசபைகள், இவை போன்ற சங்கங்களே பாங்கியில் பங்காளராக எடுத்துக்கொள்ளப்படும். தனி நபர்களாவது, லாபம் சம்பாதிக்கக்கருதி ஒன்று சேர்ந்திருக்கும் சங்கங்களாவது பங்காளிகளாக ஒப்புக்கொள்ளப்பட மாட்டார்கள். ஜில்லா வாரியாக பங்காளிகளாகவுள்ள சங்கம் ஒவ்வொன்றுக்கும் ஓர் பிரதிநிதி விகிதம் தேர்ந்தெடுக்கப்பட்டு இவர்களனைவரும் ஓர் பொதுச் சபையின் ஆளுகைக்குட்பட்டே பாங்கியானது நடைபெறுகிறது. ஒரு ஜில்லாவுக்குள்ளேயே 50,000 க்ரோனர் பங்கு போட்டிருக்குமானால் அதற்கு ஓர் பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்கும் பாத்தியதை உண்டு. இதைத் தவிர மேற்படி பொதுச்சபையார் தமக்குள்ளிருந்து 25 பேர்களுக்குமேல் போகாமல் தேர்ந்தெடுத்து அவர்களைக்கொண்டு பாங்கியை மேற்பார்த்து வருகின்றனர்.

பாங்கியின் அபிவிருத்தி விசேஷமாயிருக்கிறது. 1715-ம்௵ போட்டுப் புரட்டின முதல் 25,00,00,000 டாலர் ; 1916-ல் 1,00,00,00,000 டாலர் ; 1919ல் 1,60,00,00,000 டாலர். 1919க்குள்ளாக 1700 சங்கங்கள் 1,10,00,000 க்ரோனர் மொத்தத்தில் பங்குகள் பாங்கியின் முதலின் பொருட்டு கொடுத்திருக்கின்றனர். 1919ல் பாங்கியின் லாபமானது 17,05, 942 க்ரோனர். மத்தியில் கிளை பாங்குகள் சிலவற்றால் நஷ்டம் உண்டாயிற்று. வெளிநாட்டு நாணயமாற்று விகிதத்தால் சிறிது நஷ்டம் ஏற்பட்டது. எனினும் மொத்தத்தில் லாபமே. இந்த பாங்கியானது கோபன் ஹேகன் நகரில் ஓர் பெரிய கட்டிடத்தைக்கட்டி இருக்கிறது. அக்கட்டிடம் சர்வ தேசத்திலுமுள்ள வர்த்தகர் கட்டிடங்களிலும் மிகப்பெரியவற்றுள் ஒன்றென்று சொல்லப்படுகிறது.

## சர்க்கார் சகாயம்.

இம்மாதிரியாக டென்மார்க்கில் ஐக்கிய இயக்கம் ஜனங்களுடைய முயற்சியாலேயே நடக்கிறது. சர்க்காரிலிருந்து அநேகமாய் பண உதவி பெருவதில்லை. எத்தகை சட்டத்திற்கும் கட்டுப்படுத்தப்படுவதுமில்லை. ஐக்கிய சங்கங்கள் யாவும் தேவையை அனுசரித்து விவசாயிகளின் நன் முயற்சியால் நிறுவப்படுகின்றன. சர்க்கார் கூடுமானவரையில் விவசாயிகளுக்குச் சகாயஞ் செய்கின்றனர். விவசாயிகளின் சாமான்களை அனுப்புவதானால் ரயில் சார்ஜ் வெகு சொற்பமாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. உண்மையில் இதில் சர்க்கார் லாபம் பெற இடமில்லை. இங்கிலாந்துக்குப்போகும் மெயில் கப்பல்களுக்கு பண உதவி செய்து விவசாயிகளின் சரக்கை இலகுவாய் ஏற்றுமதி செய்யும்படியாக சர்க்கார் ஏற்பாடு செய்திருக்கின்றனர். இங்கிலாந்திலேயே விசேஷமாய் டேனியர்களின் சரக்கு வியாபாரமாகின்றது.

## கூட்டுறவால் விளைந்த நன்மைகள்

டென்மார்க்கின் ஜனநாயக ஆட்சியில் ஐக்கிய இயக்கமானது ஒற்றுமைக்குரியதோர் பெரிய சாதனமாயுள்ளது. விவசாயிகள் யாவரையும் நானாவிதமான பிரவர்த்திகளில் ஒன்று சேரச் செய்திருக்கிறது. ஐக்கியப் பண்டசாலைகளாலும், ஐக்கியத் தொழிற்சாலைகளாலும், உள்ளூர் பொதுக்கூட்டங்களாலும், தேசப் பொதுக்கூட்டங்களாலும், வர்த்தமானப் பத்திரிகைகளாலும், விவசாய முறைகளையும், தொழில் முறைகளையும், கிருஷிகள் நன்கு தெரிந்துகொண்டிருக்கின்றனர். ஐக்கிய இயக்கத்தால் விவசாயி தன் அதிகாரம் இவ்வளவு உள்ளது என்பதை உணர்ந்திருக்கிறான். ஐக்கிய இயக்கத்தால் விவசாயி

# இந்தியாவில் ஐக்கிய ஆட்சி

## விசேஷ கூட்டுறவுச் சங்கங்கள்

### II

விசேஷ கூட்டுறவுச் சங்கங்களில், கைத்தொழில் சங்கங்கள், கண்டிராக்ட் எடுக்கும் சங்கங்கள், வீடுகட்ட உதவும் சங்கங்கள், மேம்படு வாழ்க்கை நடத்தும் சங்கங்கள் மேம்பட்ட விவசாய விருத்திச் சங்கங்கள், கிராமச்சிரமைப்புச் சங்கங்கள், செய்துவரும் வேலைகள் ஆராய்ச்சி செய்யத்தக்கனவாகும்.

## கைத்தொழில் சங்கங்கள்

நகரங்களிலோ அல்லது கிராமங்களிலோ வசிக்கக்கூடிய கைத்தொழிலாளர்கள் வறுமையினால் பீடிக்கப்பட்டு மிகவும் பரிதாபகரமான நிலைமையில் இருந்துவருகின்றனர். மேலும், கடன் சுமையினால் அவர்கள் தத்தளிக்கின்றனர். அவர்களது, விமோசனத்திற்கு வழிகாண்பது அவசியமென்பதை யாவரும் உணருகின்றனர். இத்தொழிலாளர்கள் உய்யும் மார்க்கம் கூட்டுறவு முறையை பின்பற்றுவதே யாகும். எனினும் சென்ற இருபது வருடத்திய அனுபவத்திலிருந்து கைத்தொழிலாளர்கள் கூட்டுறவு முறையைப்பின்பற்றி எதிர்பார்த்த அளவுக்குப் பலனடைந்தார்களெனச் சொல்வதற்கில்லை. இதற்குக் காரணம் கைத்தொழிலாளரின் அறியாமையும், நாட்டின் நிலையை அறிந்து சாமான்களை உற்பத்திசெய்ய இயலாமையும், வியாபார நிலையறிந்து நிர்வாகம் செய்யும் திறமை போதாமை

(17 பக்கத் தொடர்ச்சி)

கள் அனைவரும் தாம் ஒரு தொழிலைச் சேர்ந்தவர்களென்று உணர்ந்திருக்கின்றனர். இவ்விதம் ஒன்று சேர்ந்திருப்பதால் ராஜீயப்பிரவர்த்தியிலும் அவர்கள் ஒன்றாய் நிற்கக் கற்றுக்கொண்டனர். டேனியக் கல்வி முறையானது விசேஷமாக ஐக்கிய இயக்கத்துடன் சேர்ந்ததாகவே உள்ளது. கூட்டுறவு இயக்கம் அனாவசியமான அமிதச் செலவுகளை ஒழித்ததோடு நாட்டின் ஜன சமுதாய அமைப்பையே மாற்றி இருக்கிறது. பணச்செருக்கு ஒழிந்தது. அநேக வகைத் தொழில்களில் தனி முதலாளிகளின் ஆதிக்யம் அறவே ஒழிந்தது. கூட்டுறவு முறையும், கல்வி விருத்தியும் பெரும்பாலான ஜனங்கள் சொற்ப நிலங்களையுடையவர்களாக இருந்தாலும் சம அந்தஸ்தை ஏற்படுத்தி செல்வப் பெருக்கும் அரசியல் அதிகாரமும் கைகூடச்செய்தது. அரசியல் அதிகாரத்தால் விவசாயிகளின் பலம் அதிகரித்தது. பெரிய தனவந்தர்களுக்கும், வர்த்தகக் கூட்டத்தாருக்கும் பிரபல்யம் குறைந்தது. டென்மார்க்கின் அனுபவத்திலிருந்து ஒரு நாட்டின் ஜனங்கள் சுதந்திரத்துடனிருக்க அரசாங்கம் பல பொருள்களைப் படைத்தும் பல வேலைகளைச் செய்துமாக வேண்டுமென்பது தெரிகிறது. சில வியாபாரங்களைத் தனி நபர்களின் கையிலிருந்து எடுத்தால் தான் மற்ற வியாபாரங்கள் ஓங்கக் கூடும். கைத்தொழிலைக் காப்பாற்ற அரசாங்கத்தார் மேற் பார்வை இருக்கவேண்டி இருக்கிறது. கூட்டுறவு முறையில் பலர் சேருவதாலும், அரசாங்க ஏற்பாட்டினாலுமே, உற்பத்தி செய்வோர் தங்களிடமிருந்து கொள்ளை அடிப்போரிடமிருந்துத் தங்களைக்காப்பாற்றிக் கொள்ளமுடியும்.

அரசாங்கத்தைப் பொது ஜனங்கள் தங்கள் நன்மைக்கு எவ்வளவுதூரம் உபயோகித்துக் கொள்ளலாமென்பதற்கு டென்மார்க்கு ஓர் உதாரணமாக விளங்குகிறது. கலை வளர்ச்சியும், கல்விவிருத்தியும், வீடும், பண்ணையும், பலரும் படைக்கவும், நியாயமாகப் பலரும் வாழவும் செய்ய அரசாங்கம் ஓர் அமைப்பாக்கப்பட்டிருக்கிறது. "பிரத்தியேக உரிமை" யின் பேரில் ஏற்படும் பல அநீதிகள் ஒழிக்கப்பட்டிருக்கின்றன. "பிரத்தியேக உரிமை" போனதும் ஜனங்களுக்குத் தங்கள் உண்மை நிலைகிடைத்து விட்டது. குடியரசு முறையிலேயே பெருளாதார நியாயம் செம்மையாய் வழங்கப்படுகிறது.



யும், தேவையான அளவிற்குப் போதிய நிதி கிடைக்காமையுமாகும். மேலும், இந்நாட்டில் யந்திர விருத்தி நாளுக்குநாள் சிறுகச்சிறுக விருத்தியடைந்து வருவதும், யந்திர விருத்தி உற்பத்தித்துறையில் ஓர் புரட்சியை உண்டுபண்ணி வருவதும் சகலரும் அறிந்ததே. குடிசைத்தொழில் விருத்திக்கு யந்திரப்போட்டி சாவு மணி அடிப்பதாக இருக்கிறது. ஆனால் பொதுஜனங்கள் கைவேலைப் பொருளுக்கு ஆதரவளிக்கும் வரையில் குடிசைத் தொழிலை யந்திர உலகம் அடியோடு நசுக்க இயலாதென்பது உண்மை. ஆகையால் இன்றுள்ள கைத்தொழிலாளர்கள் கூட்டுறவு முறையைப் பின்பற்றினால் பலனடையலாமென்பதில் சந்தேகமில்லை.

## மைசூர்

கைத்தொழிலாளர்களுக்கு கூட்டுறவு சங்கங்கள் அமைத்ததில் மைசூர் சமஸ்தானம் முதன்மையானது. பதனிடப்படாத பொருளை மொத்தமாக வாங்கித் தொழிலாளருக்குப் பிரித்துக்கொடுக்கவும், உற்பத்திப்பொருளை விற்பனை செய்ய உதவவும் இந்த சமஸ்தானத்தில் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. 1929—30-ல் 71 நெசவுத் தொழிலாளர் சங்கங்கள் வேலைசெய்தன. மைசூர் கூட்டுறவுக்கமிட்டியார் நெசவுத் தொழிலாளர் சங்கங்கள் பெருக வேண்டுமென்றும், சாமான்கள் விலை ஓர் முறையில் திட்டஞ்செய்யப்படவேண்டுமென்றும், மத்திய விற்பனைச் சங்கமொன்று ஸ்தாபிக்கப்படவேண்டுமென்றும், அதில் நெசவுத் தொழிலாளர் சங்கங்கள் யாவும் இணைக்கப்பட வேண்டுமென்றும் சிபார்சு செய்திருக்கின்றனர். இரண்டு சந்தணக்கட்டை வேலை தொழிலாளர் சங்கங்களும், 22 சிற்பத் தொழிலாளர் சங்கங்களும் நன்றாய் வேலை செய்கின்றன. நெல் குத்துவதற்கும், சர்க்கரை உற்பத்தி செய்வதற்கும் ஏற்படுத்தப்பட்ட சங்கங்கள் அவ்வளவு நன்றாக நடைபெறவில்லை. மைசூர் சமஸ்தானம் பொருளுதவி மூலமும், நிபுணர்களைக்கொண்டு ஆலோசனை கூறுவதின் மூலமும் கைத்தொழில் சங்கவிருத்திக்கு உதவி புரிகின்றது.

## பாஞ்சாலம்

பாஞ்சாலத்தில் 320 கைத்தொழிலாளர் சங்கங்கள் இருக்கின்றன. அவற்றுள் 197 சங்கங்கள் நெசவுத் தொழிலாளருக்கும், 57 சங்கங்கள் தோல் வேலைத் தொழில்ாளருக்கும் உள்ளது. இரு கூட்டுறவு அச்சுக்கூடங்கள் திருப்திகரமாக நடக்கின்றன. 1929—30-ல் கைத்தொழிலாளர் சங்கங்கள் நெய்வோருக்கு ரூ. 1,22,000 பெறுமான பதனிடாத சாமான்களை வாங்கித்தந்திருக்கின்றன. ரூ. 1,18,000 பெறுமான உற்பத்திப் பொருளை விற்பனை செய்திருக்கின்றன. நெசவுத்தொழிலாளி தனக்கு வேண்டிய சாமானைக் குறைந்த விலைக்கு வாங்கவேண்டியது அவசியமாகும். தனிப்பட்ட முறையில் அவன் வாங்குவானாகில் இடையிலுள்ள தரகன் கொள்ளை காரணமாக சாமானின் விலை 100-க்கு 15 முதல் 20 வரை அதிகரிக்கிறது. இம்மாதிரி சாமானை அதிக விலை கொடுத்து வாங்கும் பக்ஷத்தில் ஒரு நெசவாளி என்னதான் திறமை சாலியாக இருந்தாலும் தன் குடும்பத்தார் யாவரும் சேர்ந்து பாடு பட்டாலும் நாளொன்றுக்கு 5 அல்லது 6 அணாவுக்கு மேல் சம்பாதிப்பது அசாத்தியமாக இருக்கிறது. இதனால் அவன் வயிறாரக் கஞ்சி குடிப்பதற்கு வழி இல்லாமல் போகிறது. இக்கஷ்டத்திலிருந்து நெசவாளியை கூட்டுறவுச் சங்கம் விடுவிக்கிறது. நெசவுப்பொருளை விற்பனை செய்ய 1929-ல் லாகூரில் ஓர் சங்கம் அமைக்கப்பட்டது. 1929—30-ல் அதன் விற்பனை ரூ. 1,700-லிருந்து ரூ. 22,413-க்கு அதிகரித்திருக்கிறது. இத்துறையில் போதிய அளவு அபிவிருத்தி ஏற்படாமைக்குக் காரணம் சர்க்கார் அளிக்கக்கூடிய பொருளுதவி போதாமையும், சங்கங்களின் செல்வ நிலை இடர்தராமையுமென்று ரிஜிஸ்திரார் அபிப்பிராயப்படுகிறார்.

## பம்பாய்

கைத்தொழில் சங்கங்கள் பம்பாயில் நன்றாய் வேலை செய்யவில்லை. கூட்டுறவு எஃகு வார்ப்படசாலை யொன்று மூடப்பட்டுவிட்டது. கூட்டுறவு அச்சுக்கூடமொன்று தள்ளாடிக்கொண்டிருக்கிறது. மணிலாக் கொட்டை உடைத்து விற்பனை செய்யும் சங்கமொன்று நன்றாய் வேலை செய்கிறது. நிற்க, 55 நெசவுத் தொழிலாளர் சங்கங்கள் இங்கு உள்ளன. நவீன முறையில் நெய்யவும், சாயம் கொடுக்கவும் சங்கத்தின் அங்கத்தினர்களுக்குப் போதிக்குமாறு சர்க்கார் இரு நிபுணர்களை நியமித்திருக்கின்றனர். 1929–30ல்

உற்பத்திப்பொருளை மொத்தமாக வாங்கவும் விற்கவும் நிறுவப்பட்ட சங்கம் பூனாவில் கிளை காரியாலயம் ஒன்றைத்திறந்திருக்கிறது.

## வங்காளம்

வங்காளத்தில் நானாவகைப்பட்டகைத் தொழில் சங்கங்கள் நிறுவப்பட்டிருக்கின்றன. நெசவுத் தொழிலாளர் சங்கங்கள், சங்கு வேலை, அரக்கு வேலை, எண்ணை உற்பத்தி, பித்தளை வேலை, மணி வேலை, பசை வேலை, பொம்மை வேலை, கயிறுதிரிக்கும் வேலை முதலிய தொழில்களுக்கெல்லாம் சங்கங்கள் இருக்கின்றன. இவற்றில் சில சங்கங்கள் பொருளின்மையாலும், சில அங்கத்தினர்களிடம் ஊக்கமின்மையாலும், சில தேவையான சாமான்கள் வேண்டும்போது கிடைக்காமையாலும் சரியாக நடைபெறவில்லை எனத்தெரிகிறது. இச்சங்கங்களின் முன்னேற்றத்திற்கு சர்க்கார் பண சகாயம் இன்றியமையாதென வங்க பாங்கு விசாரணைக்கமிட்டியார் அபிப்பிராயப்படுகின்றனர். மேலும், இச்சங்கங்கள் தேர்ச்சி பெற்ற நிபுணர்களைக்கொண்டு கண்காணிக்கப் படவேண்டுமென்றும், இச்சங்கங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசாங்கக் கைத்தொழில் இலாக்கா அக்கரைகாட்டவேண்டுமென்றும் கூறுகின்றனர்.

## ஐக்கிய மாகாணம்

இங்கு நெசவுத் தொழிலாளர் சங்கத்தைக்காட்டிலும் தோல் வேலைத் தொழிலாளர் சங்கம் அதிகமாக இருக்கிறது. 1929—30-ல் தோல் வேலைத்தொழிலாளர் சங்கம் 47-ம், நெசவுத் தொழிலாளர் சங்கம் 43-ம் இருந்தன. பசை வேலைக்காரர்கள் சங்கம் நன்கு நடைபெறுகிறது. ஆனால் கண்ணாடி, வெண்கலம் போன்ற உலக வேலைத்தொழிலாளர் சங்கங்கள் விருத்தியடையவில்லை.

## சென்னை

சென்னையில் நெசவுத் தொழிலாளருக்கென 1909-ம் வருடத்திலேயே சங்கமொன்று நிறுவப்பட்டது. பதனிடாத பொருளை வாங்கவும், உற்பத்திப்பொருளை விற்கவும், புதிய முறையில் உற்பத்தியை விருத்தி செய்யவும், இச்சங்கம் வேலைசெய்து வந்தது. இச்சங்கத்திற்கு போதிய உதவி அக்காலத்தில் அளிக்கப்படவில்லை. மத்திய கூட்டுறவு நெசவுத் தொழிலாளர் சங்கமொன்று புதிய முறையில் அமைக்க 1929–30ல் திட்டமொன்று நிபுணர்களின் ஆலோசனையின் பேரில் தயாரிக்கப்பட்டது. ஆனால் பொருளின்மை காரணமாக அத்திட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்படவில்லை. இம்மாகாணத்தில் நான்கு அச்சுக்கூடங்கள் கூட்டுறவு முறையில் நடக்கின்றன. நெல்குத்தவும், கரும்புசார் பிழியவும், சர்க்கரைக் காய்ச்சவும், கடலை உடைக்கவும் நிறுவப்பட்ட ஐந்து சங்கங்களில் ஒன்றுதான் ஒழுங்காக நடக்கிறது.

## பீகார்—ஒரிசா

இங்குள்ள மணிவேலை சங்கங்களில் ஆறில் ஐந்து 1929ல் நஷ்டத்தில் நடைபெற்றன. இதற்குக் காரணம் அங்கத்தினர்களின் மனமாற்றமும் உற்பத்திப் பொருளுக்கு கிராக்கி இல்லாமையும் பெரும் வியாபாரிகளின் போட்டியுமெனத் தெரிகிறது. இங்குள்ள இரு கூட்டுறவு அச்சுக்கூடங்கள் நன்கு நடை பெறுகின்றன. இம்மாகாணத்தில் கைத்தொழில் சங்கங்கள் நன்றாக நடத்த வேண்டுமானால் அகில இந்திய நூல் நூற்போர் சங்கங்கள் நடத்தப்படும் முறையில் சங்கங்கள் அமைக்கப்பட வேண்டுமென பீகார் ஒரிசா பாங்கி விசாரணைக் கமிட்டியார் கூறுகின்றனர்.

நிற்க, கூர்க்கில் ஓர் நெசவுத்தொழிலாளர் சங்கம் உண்டு. இது மூடக்கூடிய நிலையில் இருக்கிறது. காஷ்மீரத்தில் காகித உற்பத்திக்காரருக்கென ஓர் சங்கமிருக்கிறது. காகிதம் விலை போகாத காரணத்தால் இச்சங்கம் விருத்திபெறவில்லை. ஹைதராபாத்தில் அரசாங்கத்தார் நெசவுத் தொழிலாளர் சங்கத்திற்குப் பொருளுதவி புரிவதுடன் கொஞ்ச காலம்வரை வட்டியைத்தள்ளிக் கொடுக்கின்றனர். உற்பத்திப் பொருளை விலைவைத்து வாங்கிக் கொள்ளுகின்றனர். பரோடாவில் கைத்தொழில் சங்கங்களுக்காக ஓர் பிரத்தியேக உத்தியோகஸ்தர் நியமிக்கப்பட்டிருக்கிறார். ஆனால் நெசவாளிகள் அவ்வுத்தியோகஸ்தரைப் பயன் படுத்திக் கொள்ளுகிறார்களில்லை. பர்மாவில் குடிசைத் தொழிலுக்கென ஒரு மேம்பார்வை உத்தியோகஸ்தர் இருந்து வருகிறார். இது போன்ற கைத்தொழிலுக்காகவுள்ள சங்கங்கள் ஒரு புறமிருக்க ஓய்வு காலத்தை உபயோகிக்க சில்லரை வேலைகள் செய்வதற்கான பல சங்கங்கள் நடந்து வருகின்றன. அதாவது சணல், ஆடு, மாடு வளர்த்தல் கோழிகள், கோழி முட்டைகள் விருத்தி செய்தல், பால் உற்பத்தி செய்தல் முதலியனவாகும். இவை விவசாயிகளுக்கு உதவி அளிப்பதாக இருக்கிறது.

## சில குறைகளும் அவற்றைப் போக்கும் மார்க்கமும்

கைத் தொழிலுக்காக நிறுவப்பட்ட சங்கங்கள் சில பெருந்தோல்வி அடைந்திருக்கின்றன. அவற்றால் மகத்தான நஷ்டம் ஏற்பட்டிருக்கின்றது. பீகார் ஒரிசாவில் நெசவுத் தொழிலாளர் சங்கம் ஒன்றின் கதவடைப்பால் ரூ 30,000 தொலைந்தது. பம்பாய் மாகாணத்தில் பரோ கூட்டுறவு நெசவுத் தொழிலாளர் சங்கத்தால் ரூ 20, 000 நஷ்டமேற்பட்டிருக்கிறது. இவற்றால் ஏற்பட்ட நஷ்டத்தை மாகாண மத்திய பாங்குகள் ஏற்றுக் கொண்டிருக்கின்றன. இச்சங்கங்களுக்குப் பொருளுதவி புரிவதென்பது கஷ்டமாக இருக்கிறது. அதற்குக் காரணம் கொடுக்கும் பணத்திற்குத் தகுந்த பக்காவான பாதுகாப்பு இல்லாமையே பீகார் ஒரிசா மத்திய பாங்குகள் பல கைத்தொழில் சங்கங்களுக்குப் பணம் கொடுத்து பெரிதும் நஷ்டமடைந்திருக்கின்றன சில மத்திய பாங்குகள் வேலை செய்யப்பட்ட சாமான்களின் பேரில் பணம் கொடுத்தமையால் ஆபத்திற்காளாகவில்லை. இதையெல்லாம் உத்தேசித்து புரபசர் காஜீ அவர்கள் கூறும் யோசனை கவனிக்கத்தக்கது. அதாவது கைத்தொழில் சங்கங்களின் பரிபாலனத்திற்காகத் தனித்த கூட்டுறவு பாங்கு ஒன்றை நிறுவுவதாகும். மேலும், தேர்ச்சி பெற்ற நிர்வாகஸ்தாகள் கண்காணிப்பு இன்றியமையாததாகும்.

## கண்டிராக்ட் எடுக்கும் சங்கங்கள்

சென்னை, பாஞ்சாலம், திருவாங்கூர், காஷ்மீரம் முதலிய இடங்களில் ரஸ்தா செப்பனிடல், மரம் வெட்டல், போக்குவரத்து வேலை, வயல் வேலை, கட்டிடங்கட்டல் போன்ற வேலைகளைக் கண்டிராக்ட் எடுக்க சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இச் சங்கத்தின் நோக்கம் தனிப்பட்ட நபர் கண்டிராக்ட் எடுத்து குறைந்த கூலியைத் தொழிலாளருக்குக் கொடுத்து அவன் கொழுத்த லாபமடைவதைத் தடுப்பதாகும். நகரசபை, ஜில்லா போர்ட் போன்ற ஸ்தாபனங்கள் மனம் வைத்தால் இச்சங்கங்கள் முன்னேற்றமடைவது சுலபம். திருவாங்கூரில் ரஸ்தா வேலைகள் பெரும்பாலும் கூட்டுறவுச் சங்கங்கள் வசம் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது. ஆனால் சென்னையில் அந்த அளவிற்கு கூட்டுறவு கண்டிராக்ட் சங்கங்கள் ஆதரிக்கப்படவில்லை. சென்னையில் 63 சங்கங்கள் இருக்கின்றன, இவற்றினில் 3540 அங்கத்தினர்கள் இருக்கின்றனர். இச்சங்கங்கள் யாவும் ரூ 2, 09, 960 பெறுமான கண்டிராக்ட் எடுத்திருக்கின்றன. இத்துறையில் கூட்டுறவு இயக்கம் போதிய அளவு பரவாவிட்டாலும் மிக மோசமான நிலையில் இல்லை எனலாம். மத்திய பாங்குகளில் டைரக்டர்களாக இருக்கும் கனவான்கள் ஸ்தல ஸ்தாபனங்களில் ஓர் அளவு செல்வாக்குப் பெற்றிருந்தாலும் அவர்கள் தங்களுடைய செல்வாக்கை இச்சங்கங்கள் விருத்தியை நாடி உபயோகிக்காதது வருந்தத் தக்கது. மத்திய பாங்குகளின் டைரக்டர்கள் மனம் வைத்தால் இச்சங்கங்கள் வெற்றிகரமாக நடக்க முடியுமென்பது நிச்சயம்.

## வீடு கட்ட உதவும் சங்கங்கள்

இந்தியாவில் வீடுகட்டுவதற்கு உதவி புரியும் பொருட்டு ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் திருப்திகரமாக நடக்கின்றன. இத்துறையில் சர்க்கார் உதவி புரிவார்களாகில் இன்னும் அதிக அபிவிருத்தி ஏற்படலாம். லாகூரில் நிறுவப்பட்டுள்ள சங்கத்தில் 921 அங்கத்தினர்கள் இருக்கின்றனர். சர்க்கார் உதவி புரிகின்றனர் வீடு கட்ட உதவும் சங்கங்களுக்கு நீண்ட காலதவணையில் குறைந்த வட்டிக்குப் பணம் கொடுக்க வேண்டுமென்பதை வங்க சர்க்கார் ஒப்புக் கொண்டிருக்கின்றனர். அதன்படி மாகாண கூட்டுறவு பாங்குபணம் கொடுத்து உதவுகிறது. மைசூர் சமஸ்தானத்தில் 29 சங்கங்கள் இருக்கின்றன. 1929—30-ல் 1902 அங்கத்தினர்கள் இருந்தனர். இச்சங்கங்களின் நிதி

ரூ. 4,60,508 ஆகும். சர்க்கார் 100 க்கு 6 வட்டி விகிதம் பணம் கொடுத்து உதவுகின்றனர்.

கட்டிடம் கட்டும் சங்கங்கள் எல்லா மாகாணங்களிலும் பரவவில்லை. ஐக்கிய மாகாணத்தில் 9 சங்கங்கள் நிறுவப்பட்டிருக்கின்றன. இவற்றில் 224 அங்கத்தினர்கள் இருக்கின்றனர். ஆனால் ஐந்து சங்கங்கள் தான் வேலை செய்கின்றன. ஹைதராபாத்தில் இச்சங்கம் ஆதரவு பெற்றிருக்கிறது. மாதாந்திரச் சம்பளம் பெறும் மத்திய வகுப்பினர் தான் இச்சங்கத்தில் பெரும்பாலும் சேருகின்றனர். பர்மாவில் இச்சங்கம் விருத்தியடையவில்லை. இங்குள்ள ஓர் சங்கம் 1930-ல் மூடக் கூடிய நிலையை அடைந்து விட்டது.

ஆனால் சென்னையிலும், பம்பாயிலும் இச்சங்கங்கள் வேரூன்றிவிட்டன. சென்னையில் 100 சங்கங்கள் இருக்கின்றன. பம்பாயில் 94 சங்கங்கள் இருக்கின்றன. இவையாவும் வெகு நன்றாக வேலை செய்கின்றன. இம்மாதிரியாக கூட்டுறவு முறையில் வீடுகட்டிக்கொள்வதில் மத்திய வகுப்பினர் தான் பயனடைந்தனரேயன்றி தொழிலாளர்களுக்கு எத்தகைய பிரயோஜனமுமில்லை. உண்மையில் உற்று நோக்குமிடத்து சுகாதாரமான வீட்டு வசதியின்றி கஷ்டப்படுவோர் அன்றாடம் நெற்றி வியர்வை நிலத்தில் விழும்படி உழைக்கும்தொழிலாளர்களே. தொழிற்சாலைகள் நிறைந்த நகரங்களில் வசிக்கும் தொழிலாளர்களை நரகத்தில் வசிப்பவர்கள் எனக்கூறுவது மிகப் பொருத்தமுடையதாகும். இம்மாதிரியான தொழிலாளரது துயரைப்போக்க முதலாளிகள் முன்வரவேண்டும். தொழிலாளர்கள் சார்பாக அவர்கள் கட்டிடச்சங்கங்களில் பங்கெடுத்து தவணைப்படி பணத்தைக் கட்டும் பொறுப்பை ஏற்று தொழிலாளர்களுக்கு வீடுகட்டி உதவ வேண்டும். அன்றேல் தொழிலாளரின் சம்பளத்தை அதிகப்படுத்தி அவர்கள் சங்கங்களின் மூலம் வீடுகட்டிக்கொள்ள உதவி புரியவேண்டும்.

## மேம்பட்ட வாழ்க்கை நடத்தும் சங்கங்கள்

மேம்பட்ட வாழ்க்கை நடத்தும் சங்கங்கள் என்பன பாஞ்சாலத்தில் விசேஷமாகப் பரவி இருக்கிறது. 1929–30 ல் இங்கு 312 சங்கங்கள் இருந்தன. இச்சங்கத்தின் நோக்கம் அங்கத்தினர்களைப் பொருளாதாரத் துறையில் முன்னேற்ற மடையச் செய்வதாகும். சங்கத்தின் ஆணைப்படி நடப்பதாக அங்கத்தினர்களிடம் வாக்குறுதி எழுத்து மூலம் பெறப்படுகிறது. தாம் கொடுத்த வாக்குறுதியை மீறுவோர் ரூ 100 வரை அபராதம் விதிக்கப்படுவர். இச்சங்கங்கள் அர்த்தமற்ற அனாவசியமான சடங்குகளுக்கு அதிகமானப் பொருளை வீண் விரயம்செய்யாமல் தடுக்கின்றன. இந்த முறையில் பாஞ்சாலத்தில் ஓர் சங்கம் மணமகனின் கல்யாணச் செலவை ரூ 500 லிருந்து ரூ 70 ஆகவும், மணமகளின் செலவை ரூ 800 லிருந்து ரூ 300 ஆகவும் குறைத்திருக்கிறது. கல்யாண காலத்தில் விருந்தில் கலந்துகொள்ளும் நபர்களின் எண்ணிக்கையை சங்கம் நிர்ணயிக்கிறது. ஆடம்பரமான செலவுகளை அறவே தடுக்கிறது. பரோடாவிலுள்ள ஓர் சங்கம் இந்த வகையில் ரூ 94, 560 மிச்சப்படுத்தி இருக்கிறது. பம்பாயில் இச்சங்கங்கள் அதிகமாக நிறுவப்படாவிட்டாலும் அங்குள்ள தாலூக்கா சங்கங்கள் இவ்வேலைகளைச் செய்து வருகின்றன.

இம்மாதிரியான சங்கங்கள் ஐக்கிய மாகாணத்தில் இருக்கின்றன.

## மேம்பட்ட விவசாயச் சங்கங்கள்

வங்காளம், பீகார், ஒரிசா ஆகிய இடங்களில் விவசாயச் சங்கங்கள் இருக்கின்றன. பாஞ்சாலம், சென்னை, ஐக்கிய மாகாணம் முதலிய இடங்களில் விவசாயப் பொருள் காட்சி சங்கங்கள் இருக்கின்றன. ஐக்கிய மாகாணத்தில் 22 சங்கங்கள் இருக்கின்றன.

## கிராமச் சீரமைப்புச் சங்கங்கள்

ஐக்கிய மாகாணத்தில் 14 கிராமச் சீரமைப்புச் சங்கங்கள் இருக்கின்றன. சென்னை மாகாண கூட்டுறவு சங்கத்தார் ஜில்லா மத்திய பாங்குகளின் ஒத்துழைப்பின் பேரில் 8 இடங்களில் கிராமச் சீரமைப்பு வேலையை ஆரம்பித்திருக்கின்றனர். இச்சங்கத்தின் நோக்கம் கல்வி, விவசாயம், சுகாதாரம்முதலியவற்றின் விருத்திக்குப் பாடுபடுவதாகும். இம்மாதிரியான சங்கங்கள் வங்காளம்,காஷ்மீரம்,மத்திய மாகாணம் முதலிய இடங்களில் வியாபித்திருக்கிறது. இச்சங்கங்கள் யாவும் மெச்சத்தகுந்த விதமாக வேலை செய்துவருகின்றன.

N. S. G.



# சென்னை நகர பாங்குகள் மூன்றாவது மகாநாடு

### கூட்டுறவு ரிஜிஸ்திரார் திறந்து வைத்தார்

### பண்டிட் காஜி உபதேசம்

மூன்றாவது நகர பாங்குகள் மகாநாடு டிசம்பர் மீ 27ௗ பெரியகுளத்தில் நடைபெற்றது. மகாநாட்டைத்திறந்து வைக்கும்போது கூட்டுறவு ரிஜிஸ்திரார் ராவ்பகதூர் கெ. தெய்வசிகாமணி முதலியார் நிகழ்த்திய சொற்பொழிவின் சாராம்சமாவது :—

நகரங்களிலுள்ள உத்தியோகஸ்தர்களும், சில்லரை வியாபாரிகளும், கைத்தொழிலாளர்களும், வக்கீல்களும், சில்லரைத் தொழிலாளர்களும் கூட்டுறவு பாங்குகளில் சேரவேண்டியது மிகவும் அவசியம். இவர்களுடைய தொழிலுக்குத் தகுந்த பிரகாரம் தனித்த பாங்குகள் ஏற்படுத்தப்படலாம். ஜூன்மாத இறுதியில் நகரப்பகுதிகளில் பொறுப்பு வரையறுக்கப்பட்ட 906 சங்கங்கள் இருந்தன. இவற்றில் அர்பன் பாங்குகளும் சர்கார் உத்தியோகஸ்தர்கள், நகரசபை உத்தியோகஸ்தர்கள், ரயில்வே உத்தியோகஸ்தர்கள் ஆகியோருக்கென நிறுவப்பட்டுள்ள பாங்குகளும் இக்கணக்கில் சேர்ந்திருக்கிறது. இச்சங்கங்களின் அங்கத்தினர்கள் 2,22,000 ; பங்குத்தொகை 76 லெட்ச ரூபாய்க்கு மேல் இருக்கிறது ; சங்கங்களின் லேவாதேவியில் 100க்கு 56 அங்கத்தினர்களின் டிபாசிட் தொகையாகும். தற்போதைய நகர பாங்குகள் மத்திய பாங்குகள் உள்ள நிலையில் தான் இருக்கின்றன. அவைகள்யாவும் லேவாதேவி செய்யாத காரணத்தினால் ஏராளமான பணம் பாங்குகளில் குவிந்திருக்கிறது. இப்பணத்தை நகைகள் ஈட்டின் பேரில் கடன் கொடுப்பது நலம். இம்முறையைக் கையாள்வதென்றால் சில சங்கங்களின் சட்டங்கள் திருத்தவேண்டி இருக்கலாம். அத்தகையத் திருத்தங்கள் சம்பந்தமாக நான் எனது கவனத்தைச் செலுத்துகிறேன்.

நகர பாங்குகள் மிகப்பெரியதாக இருக்கின்றன. அவ்விதம் இருத்தல் கூடாது. அது காரணமாக அவற்றின் நிர்வாகத்தில் சிரமமேற்படுவதுடன் கூட்டுறவு விருத்திக்குத்தடை ஏற்படுகிறது. இம்மாதிரியான சங்கங்கள் கிளைச் சங்கங்களை ஸ்தாபித்தல் உசிதம் ; இது சமயம் ஒரு முக்யமான சமாசாரத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். ஒருவருக்குக் கடன் கொடுக்கப்படுமானால் கடன் எதன் பொருட்டு கொடுக்கப்படுகிறதென்பதையும், வாங்கப்பட்ட கடன் எதனை முன்னிட்டு வாங்கப்பட்டதோ அதன் பொருட்டே செலவு செய்யப்பட்டதா என்பதையும் கவனிக்கவேண்டியது அவசியம். இது சிறிது சிரமமான காரியமாக இருப்பினும் இது விஷயத்தில் மேம்பார்வை இருத்தல் வேண்டும். ஒருவருக்குக் கடன் கொடுக்குமுன் அவர் வாங்குகிற கடனைத் தவணைப்பிரகாரம் செலுத்த யோக்யதையுள்ளவரா என்பது கவனிக்கத்தக்கதாகும். சாமான்கள் உற்பத்தி செய்வோருக்கு மாத்திரம் சில பாங்குகள் கடன் கொடுக்கின்றன. அவற்றின் நிலை கவலைக்கிடமற்றதாகவே இருக்கிறது. சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் சங்கம், வியாபாரஸ்தல காரியாலய ஊழியர்கள் சங்கம், ரயில்வே சிப்பந்திகள் சங்கம் ஆகியவற்றில் மாதச்சம்பளம், தினச்சம்பளம் பெறும் நபர்கள் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். மாதந்தோறும் குறிப்பிட்ட காலத்தில் அவர்கள் கடன் தொகையைக் கட்டிவந்தாலும், நீண்டகால தவணையைப் பெரும்பாலும் அவர்கள் கைக்கொள்ளுகின்றனர். மேலும், அவர்கள் என்றும் கடன்காரர்களாகவே விளங்குகின்றனர். அவர்களது நிலையைக் கவனிக்குமிடத்து அவர்களுக்கென தனித்த சங்கங்கள் அமைத்துக்கொடுத்ததில் நாம் தவறு செய்தோமோ என்று நினைக்கவேண்டியதாக இருக்கிறது. அவர்களிடம் காணப்படும் குறை நீக்கப்படவேண்டும்.

பாங்கு வேலை விருத்திக்குத் தகுந்தபடி தேர்ச்சி பெற்ற திறமை வாய்ந்த ஊழியர்களை நிர்வாகஸ்தர்களாக நியமிக்கவேண்டும். நகர பாங்குகள் விரிவான வியாபாரத்துறையில் அதிகம் இறங்காவிட்டாலும் அங்கத்தினர்கள் கொடுக்கல் வாங்கலில் உண்டியல் முறையைக் கைக்கொள்ளுமாறு செய்யவேண்டும். பொதுவாகக் கூட்

டுறவாளர்களும், குறிப்பாக நகர பாங்குகளைச் சேர்ந்தவர்களும் கூட்டுறவு இயக்கத்தில் அரசியல் சம்பந்தமான கட்சிப்பிரதிகட்சி சச்சரவுகளைப் புகுத்தல் கூடாது. நகர பாங்குகளின் வேலையில் அனுபவமுள்ளோர் கூட்டுறவு இயக்கத்தில் அரசியல் பிரசினைகள் புகுத்தப்பட்டதன் காரணமாக அமைதியான வேலைக்குப்பங்கம் ஏற்பட்டதை நன்கு அறிவர். கூட்டுறவு பாங்கு முறை ஓர் வியாபாரம். வியாபாரத்திற்கும் அரசியலுக்கும் சம்பந்தமில்லை. எனவே, இவை இரண்டையும் ஒன்றுபடுத்தி கூட்டுறவு இயக்கத்தைக் கெடுக்காமல் உண்மையான தத்துவத்தை மனத்தில் இருத்தி உணர்ச்சியுடன் உழைக்குமாறு யாவரையும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

## தலைவர் சொற்பொழிவு

பண்டிட் காஜி தலைமை வகித்து நிகழ்த்திய சொற்பொழிவின் சாராம்சமாவது :—

கூட்டுறவு முறையானது விவசாயிகளின் துயரைப் போக்கும் பொருட்டு ஆரம்பத்தில் புகுத்தப்பட்டிருக்கலாம். ஆனால் அம்முறையை நகரத்தில் புகுத்தக்கூடாதென எவரும் சொல்வதற்கில்லை. இந்நாட்டில் கிராமங்களில் வசிக்கும் விவசாயிகள் மாத்திரம் தாழ்ந்த நிலையில் இருக்கிறார்களென நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம். உற்று நோக்குமிடத்து அவர்களைப் போன்ற நிலையில்தான் நகரங்களிலுள்ள கையொடிய எழுதும் சில்லரைக் குமாஸ்தாக்களும், வியர்வை சொட்டச் சொட்ட உழைக்கும் மில் தொழிலாளர்களும், நித்தியகண்டத்திலுள்ள டாக்டர்களும், காலைமுதல் மாலைவரை சமர்புரிந்து அல்லாடும் பாரிஸ்டர்களும், உடம்பு நோக வேலை செய்யும் சில்லரை வியாபாரிகளும், கைத்தொழிலாளர்களும் இருக்கின்றனர். கிராமவாசிகளின் நிலை இவர்களைக் காட்டிலும் கேவலமானதென்பது உண்மையே. அவர்களது தேவையும் இவர்களைக் காட்டிலும் அதிகமானதென்பதும் உண்மையே. ஆனால் கூட்டுறவுமுறை வெற்றிபெற கிராமங்களைக் காட்டிலும் நகரங்கள் சிலாக்கியமானதாகும். நகரவாசிகள் கிராமவாசிகளைக் காட்டிலும் பக்குவமடைந்திருக்கின்றனர். நகரவாசிகளிடையே இம்முறை புகுத்தப்படின் வெற்றியேற்படுமென்ற நம்பிக்கைக்கு வழி இருப்பதால் இங்கு ஏற்படக்கூடிய வெற்றியானது கிராமவாசிகளுக்கு ஓர் நற்பாடமாகும்.

நம் நாடு பாங்குத்தொழிலில் மிகவும் விருத்தி அடைய வேண்டியிருக்கிறது. நகரங்களிலுள்ள சிறிய கூட்டுறவு பாங்குகள் ஒழுங்காக நிர்வாகம் செய்யப்பட்டால் கூட்டுமுறையில் நடத்தப்படும் தன்வந்தர்களடங்கிய பாங்குகளைக் காட்டிலும் மேன்மை பெற மார்க்கமிருக்கிறது. சென்னையில் சுமார் ஆறு கூட்டுறவு பயிற்சி சாலைகள் இருக்கின்றன. ஆனால் கூட்டுறவு பாங்கு நிர்வாகத்திற்குத் தேவையான உயர்தரப் படிப்பு அளிக்கக்கூடிய நிலையில் இப்பயிற்சி சாலைகள் இல்லை. சாதாரணமான பட்டாதாரிகளை உற்பத்தி செய்வதற்காக இப்பயிற்சி சாலைகள் ஏற்பட வேண்டுமென நான் விரும்பவில்லை. பாங்குகளில் வேலையில் இருந்துவரும் சில குறிப்பிட்ட நபர்களுக்கு வருஷந்தோறும் பயிற்சி அளிக்க ஓர் உயர்தர கல்லூரி இருத்தல் அவசியம் என்பதே எனது அபிப்பிராயம்.

இதுசமயம் சிக்கனத்தின் அவசியத்தைப்பற்றி நான் குறிப்பிட விரும்புகிறேன். சிக்கனத்துடன் சம்பந்தபட்டுள்ளது இன்ஷியோரன்ஸ் ஆகும். சிக்கனம் நிகழ்கால நலத்தை நாடுகிறது; இன்ஷியோரன்ஸ் எதிர்கால நலத்தைப் பார்க்கிறது. சிக்கனத்தால் தாமதித்த நன்மை ஏற்படும்; இன்ஷியோரன்ஸால் விரைவில் நன்மை உண்டாகும்; சிக்கனம் மெலிந்த காலத்தில் உதவி அளிக்க வல்லது; இன்ஷியோரன்ஸ் எந்த சமயத்திலும் காக்க வல்லது. சிக்கனம் புத்திசாலித்தனத்தைக் காட்டுகிறது; இன்ஷியோரன்ஸ் முன் யோசனையையும், முன் ஜாக்கிரதையையும் காட்டுகிறது. சிக்கனத்தின் வழிவந்த இன்ஷியோரன்ஸ் மனித சமூகத்தின் நலத்திற்கு இன்றியமையாதது. கூட்டுறவு சங்கங்கள் அங்கத்தினர்களை இன்ஷியோரன்ஸ் செய்ய வேண்டும். சிக்கனத்தின் பொருட்டு ஒரு மனிதன் இன்ஷியோர் செய்வது எவ்வளவு அவசியமோ அதுபோல் கடன் வாங்குபவன் இன்ஷியோர் செய்ய வேண்டியதும் அவசியமாகும். முன்னவர் செய்கை அவரது புத்திசாலித்தனத்தைக் காட்டுமானால் பின்னவர் செய்கை அவரது கடமை என்பதைக் காட்டுகிறது. கூட்டுறவு பாங்கில் கடன் வாங்கும்



ஒருவரது அகால மரணத்தால் அவரது குடும்பம் கஷ்டத்திற்காளாவதுடன், அவருக்கு பிணையாக நின்ற நண்பர்கள் தொல்லைக்காளாகின்றனர். எனவே, கூட்டுறவு பாங்கில் கடன் வாங்கும் ஒருவர் தன்னை இன்ஷியோர் செய்யாதிருப்பது ஓர் பெரும் குற்றமாக இருப்பதுடன் மகத்தான பாவமுமாகும்.

பல பாங்குகளின் வேலைமுறை திருப்தியற்றதாக இருக்கக்காரணம் ஸ்தலஸ்தாபனங்களில் வேலைசெய்வோர் தவணைப்படி கடன் தொகையைச் செலுத்தாமையாகும். இதனைத்தடுக்க அங்கத்தினர்களின் சம்மதத்தின்பேரில் அவர்களது சம்பளத்தில் பாங்குக்குச் சேரவேண்டிய தொகையைப் பிடித்துத்தருமாறு ஸ்தலஸ்தாபனத் தலைவர்களுடன் முன்னேற்பாடு செய்துகொள்ளவேண்டும். பெரும்பாலும் அநேக சங்கங்கள் ஓர் ஜாதியை வரம்பாகவோ அல்லது ஒரு குறிப்பிட்ட பிர்க்காவை எல்லையாகவோ வைத்து அமைக்கப்பட்டிருக்கின்றன. இது அவ்வளவு நல்லதல்ல. ஒரு காரியாலயத்தில் உத்தியோகஞ் செய்வோருக்காகவோ அல்லது ஓர் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்காகவோ தனித்த பாங்குகள் நிறுவப்படவேண்டும். ஜாதியின் பேரால் மக்களை ஒன்றாக இணைப்பது சரியல்ல. அதனால் ஏற்படக்கூடிய கட்டுப்பாடு உறுதியானதாகாது. அதனால் குறுகியமனப்பான்மையும் அது காரணமாகப் பொறாமையும் உண்டாகுமாகையால் வியாபார விருத்தி ஏற்படுவது துர்லபம். இம்மாதிரியான பாங்குகள் உண்மையான பொதுஜன பாங்குகளாக மாற்றப்படவேண்டும்.

பாங்குகளின் மேற்பார்வையும், கணக்குப் பரிசோதனையும் கூட்டுறவு இயக்கத்தில் மிகவும் இன்றியமையாத அம்சங்கள். இவை சாதாரணமாக அலட்சியம் செய்யத்தக்கனவல்ல. திறமையான நிர்வாகமும், ஒழுங்கான கணக்குப் பரிசோதனையும் தான் கூட்டுறவு பாங்குகளின் பேரில் பொதுஜனங்கள் நம்பிக்கைகொள்ளவும் அவற்றினுக்கு ஆதரவு அளிக்கவும் கூடியதாக இருக்கிறதென்பது கூட்டுறவாளர்கள் மறக்கக்கூடாது. அதனால் தான் இப்பொறுப்பு சட்டபூர்வமாக ரிஜிஸ்திரார் வசம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. கடன் கொடுப்பதில் சொத்தின் ஈட்டின் பேரில்தான் கொடுப்பதென்பதை பெரும்பாலும் அனுஷ்டானத்திற்குக் கொண்டுவருவது அவ்வளவு விரும்பத்தக்கதல்ல. அவ்விதம் செய்வதானது கூட்டுறவு இயக்கத்தின் அடிப்படையான கொள்கையை விட்டுக் கொடுப்பதாக முடியும். இம்மாதிரியான கொடுக்கல் வாங்கல் வேலைகளைச் செய்வதற்கு கூட்டுறவு முறையில் பதிவு செய்யப்படாத சாதாரண பாங்குகள் நம் நாட்டில் பல இருக்கின்றன. அங்ஙனமிருக்க இவ்வேலையைக் கூட்டுறவு பாங்குகள் செய்ய வேண்டிய அவசியமில்லை. நகர பாங்குகளின் ரொக்கம் கொடுக்கப்படும் கடன் தொகையின் பாதுகாப்பில் கவனத்தைச் செலுத்துவது மாத்திரம் பிரதானமாகாது. பாங்கில் பங்காளராகவுள்ள அங்கத்தினரின் பொருளாதார முன்னேற்றத்தில் கவனஞ் செலுத்தவேண்டும்.. அம்முறையில் அந்த அங்கத்தினருக்குக் கொடுக்கப்படும் பணத்திற்கு அவரது நன்னடத்தையும் நாணயத்தையுமே ஈடாகக்கொள்ளவேண்டும். இத்துடன் அவரது நண்பர்கள் சிலரின் அத்தாட்சி இருக்குமானால் அதற்குமேல் அதிகமான பாதுகாப்பை எதிர்பார்ப்பது வேண்டற்பாலதன்று. இறுதியாகக் கூறுமிடத்து, கூட்டுறவாளர்கள் சி[illegible] அபிப்ராய பேதங்களைப்பெருக்கிக்கொண்டு போகாமல் தகராறுகளை விட்டொழித்து நக[illegible] விருத்தியையே பெரிதாகக்கொண்டு ஒற்றுமையுடன் வேலை செய்யுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

148726

## நிறைவேறிய தீர்மானங்கள்

மகாநாட்டில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தொழிலாளருக்குக்கடன் கொடுத்து அதன் மூலம் கைத்தொழிலை விருத்தி செய்யவேண்டுமென்றும், தங்க நகை ஈட்டின் மேல் கடன் கொடுக்கும்போது பங்குத்தொகைக்குத்தக்க விதமாகத்தான் கொடுப்பதென்ற முறையை மாற்ற சட்டத்தில் திருத்தஞ்செய்ய வேண்டுமென்றும், நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் குறிப்பிடத்தக்கன.

JL

# மாணவர்களே! தாய்நாட்டிற்குப் புத்துயிர் அளிப்பீர்

## கிருஷிகளைத் தட்டி எழுப்புவீர்!

பண்டிதர். பால் விண்ணப்பம்

ஆந்திர சர்வகலாசாலை கட்டிடத்தில் கிறிஸ்துவ கல்லூரி பண்டிதர் டி. எஸ். பால் எம். ஏ. அவர்கள் பிப்ரவரி மீ 8உ 'கிராமச் சீரமைப்பு' என்ற பொருள்படும்படி நிகழ்த்திய சொற்பொழிவின் சாராம்சமாவது:—

கிராமச் சீரமைப்பென்பது இந்நாட்டிற்குப் புத்துயிர் அளிப்பதாகும். கிராமத்தைச் சீர்திருத்தி அமைக்கவேண்டுமென்பதிலிருந்து ஏற்கனவே ஏதோ நாச மேற்பட்டிருக்கிறதென்பது நன்கு விளங்கும். அது என்ன வென்பது கவனிக்கத் தக்கது. சர்வ தேசத்திலும் வசிக்கக் கூடிய மக்களின் சராசரி வயதை எடுத்துக் கொள்ளுவோம். நியூசிலாந்துவாசியின். சராசரி வயது 65; ஐக்கிய அமெரிக்காவில் 58; ஜப்பானில் 47; இங்கிலாந்தில் 55; ஆனால் இந்தியாவிலோ ஒரு மனிதனின் சராசரி வயது 22½. இங்கிலாந்தில் பிறக்கும் குழந்தைகளில் முதல் வருஷத்திலேயே 1000 க்கு 100 குழந்தைகளுக்கு மேற்படாமல் மடிகின்றன. ஆனால் இந்தியாவிலோ 1000 க்கு 300 குழந்தைகள் முதல் ஆண்டிலேயே இறந்து போகின்றன. இது இங்ஙனமிருக்க சர்வ தேசத்திலுமுள்ளவர்களின் சராசரி வருமானத்தைக் கவனிப்போம். ஐக்கிய அமெரிக்காவில் ஒரு மனிதனின் சராசரி வருமானம் ரூ 3-8; இங்கிலாந்தில் ரூ 2-9-4; ஆஸ்திரேலியாவில் ரூ 1-10-3; ஆனால் இந்தியாவிலோ ஒரு அணா, நான்கு பைசாவாகும். இம் மாதிரியான இந்நாட்டின் நிலை திடுக்கிடச் செய்யக் கூடியதாக இருக்கிறது. பொதுவாக இளைஞர்களும், குறிப்பாக கல்வியறிவு வாய்ந்த வாலிபர்களும் இவ்வுண்மையை அறிந்தால் மனம் பதறாதிருக்க முடியாது.

இந்தியரின் தாழ்ந்த நிலைக்குக் காரணமென்ன? அறியாமையும், அலட்சிய புத்தியும், அசட்டுத் தனமும் தான் இந்நாட்டினரை இந்நிலைக்குக் கொண்டு வந்திருக்கிறது இந்நாட்டின் பெரும் பகுதியினர் பாமர மக்களாக இருக்கின்றனர். அவர்கள் யாவரும் அஞ்ஞான இருளில் ஆழ்ந்திருக்கின்றனர். செய்யத்தக்கன எது? செய்யத்தகாததெது? என்பதை இன்னும் அவர்கள் உணர்ந்துள்ளார்களில்லை. அவ்விதம் அறிந்த ஒரு சிலரும் "அது தொலையட்டும்" என்ற மனப்பான்மையுடன் கண்மூடித் தனமாகக் காலங்கழிக்கின்றனர். இந்நிலையில் மாணவர்கள் கடமை என்ன? தாய்நாட்டிற்குப் புத்துயிர் அளிக்குமாறு உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். கிராமவாசிகளைத் தட்டி எழுப்புவது உங்கள் முன் நிற்கும் வேலை. கிராம வாசிகளின் அஞ்ஞான இருளைப்போக்குங்கள்; கல்வி அளியுங்கள்; சுகாதாரப் பிரசாரம் செய்யுங்கள்; மேம்பட்ட வாழ்க்கையை நடத்துமாறு தூண்டுங்கள்; தீண்டாமையை அகற்றுங்கள்; விதவா விவாகத்தைப் பரவச்செய்யுங்கள்; பால்யவிவாகத்தைத் தடை செய்யுங்கள்.

இத்துடன் உங்கள்வேலை முற்றுப்பெற்று விடவில்லை. கிராமங்களில் கிருஷிகள் ஆறு மாதம் தான் வேலை செய்கின்றனர். மறு ஆறுமாதம் ஒரு வேலையுமின்றி இருக்கின்றனர்; ஓய்வு காலத்தில் என்ன செய்வதென்று அவர்கள் வகைதெரியாதிருக்கின்றனர். ஒரு வேலையுமின்றி தூங்குவதால் அவர்கள் சோம்பேறிகளாவதுடன் வீண் வம்புகளிலும், விவகாரங்களிலும், அக்கப் போர்களிலும் தலையிடுகின்றனர். அவர்களுக்கு ஓய்வு காலத்தில் வேலை கொடுத்து பொருளாதாரத் துறையில் முன்னேற்றமடையும்படிச் செய்ய வழி, கயிறு திரித்தல், நாடா பின்னல், கூடை முடைதல், பாய் போடல், துணி நெய்தல் போன்ற குடிசைத் தொழிலை விருத்தி செய்வதாகும். படித்த வாலிபர்கள் வருடத்தில் 12 மாதங்களும் ஓய்வு பெற்றிருக்கின்றனர். இவர்கள் கூட்டுறவு சங்கங்கள் அமைத்து அவற்றின்

(27-ம் பக்கம் பார்க்க)



# கூட்டுறவு இயக்கம்

## பண்டிட். அய்யர் விளக்கவுரை

கராச்சியிலுள்ள தென் இந்திய கூட்டுறவு சங்கத்தின் ஆதரவில் ராவ்சாகிப். ஓய் ராமச்சந்திர ராவ் தலைமையில் டிசம்பர்-மீ 30-உ. "சென்னை கூட்டுறவு சஞ்சிகை" பத்திராதிபர் பண்டிட். யக்ஞியநாராயண அய்யர் அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவின் சாராம்சமாவது:—

கூட்டுறவு இயக்கத்தில் சாமானை வாங்குவோர் சங்கம் முதன்மையானது. இச்சங்கம்

(26-ம் பக்கத் தொடர்ச்சி)

மூலம் உற்பத்திப்பொருளை விற்பனை செய்து கிராம வாசிகளுக்குத் தொண்டாற்றுவதுடன் தாங்களும் நன்மை அடையலாம். இதுவரையில் இந்நாட்டிலுள்ளோர் கூட்டுறவு சங்கமென்றால் கடன் தாராளமாக வாங்கவும், வாங்கிய கடனை திருப்பிக்கொடுக்காமல் கவலை இல்லாதிருக்கவும் உதவிபுரியும் ஸ்தாபனமென பெரும்பாலும் எண்ணிக்கொண்டிருக்கின்றனர். நமது வாழ்க்கையே கூட்டுறவு முறையில் நடக்குமாறு திருத்தப்படவேண்டும். இப்புதிய முறையைப் புகுத்துவதால் வேலை இல்லாமல் திண்டாடும் சில வாலிபர்கள் வேலை பெறலாம். படித்த இளைஞர்கள் வேலை என்று கிடைக்குமென கன்னத்தில் கையை வைத்துக்கொண்டிருப்பதைக் காட்டிலும் கூட்டுறவு முறையைப் பின்பற்றுவதில் முன் நிற்கவேண்டும். வீணாகக் காலங்கழிப்பதை விட்டொழித்து நவீன முறையில் நிலத்தைப் பண்படுத்தி விவசாயத்தை விருத்தி செய்வதிலும், காய்கனிகளைப் பெருக்குவதிலும், ஆடு, மாடுகள் வளர்ப்பதிலும், கோழிகளை சம்ரக்ஷணை செய்வதிலும் புத்தியைச் செலுத்தவேண்டும். சடங்குகளிலும், பண்டிகைகளிலும், திருவிழாக்களிலும் மிகுதியான பணத்தை கிராம வாசிகள் செலவு செய்யாதிருக்கவும், சிக்கனத்தைக் கையாளவும் படித்த இளைஞர்கள் கிராம வாசிகளுக்கு ஓர் உதாரணமாக விளங்கவேண்டும்.

இந்நாட்டில் தரிக்காதென சிலர் கூறுகின்றனர். அவர்கள் கூற்று ஏற்கத்தக்கதல்ல. இங்கிலாந்திலும், பிரிட்டிஷ்சாம்ராஜ்யத்தின் ஏனைய பாகங்களிலும் இத்துறையில் கூட்டுறவு இயக்கம் பெரிதும் வெற்றியடைந்திருக்கின்றது. இங்கிலாந்தில் சிறிய முதலுடன் துவக்கப்பட்ட கூட்டுறவு சங்கம் இன்று மகத்தானதோர் ஸ்தாபனமாக விளங்குவதுடன் இதில் வருஷமொன்றுக்கு 120 கோடிபவுன் பிரளுகிறது. நம் நாட்டில் சாமான் வாங்வோருக்கென ஸ்தாபிக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் பெரும்பாலும் தோல்வி அடைந்துள்ளன என்பதை நான் மறுக்கவில்லை. இத்துறையில் எனக்கு 20 வருடத்திய அனுபவமுண்டு. கூட்டுறவு இயக்கத்தின் வெற்றி சரியான மனிதர்கள், சரியான முறையில், நாணயமாக சங்கத்தை நடத்துவதைப் பொறுத்திருக்கிறது.

சில்லரைச் சாமான் வாங்குவோர் இடை நடுவிலுள்ள தரகர்களின் கொள்ளையிலிருந்து தப்ப வேண்டுமானல் கூட்டுறவு ஸ்டோர்களைத் தவிர வேறுவழி இல்லை. குறைந்த விலையில் உயர்ந்த சாமானைப் பெறவேண்டுமானல் அதற்கேற்ற இடம் கூட்டுறவு ஸ்டோர்களே. திருவெல்லிக்கேணி கூட்டுறவு ஸ்டோரின் ஸ்தாபகர்கள் 14 பேர்கள். அவர்களில் கனம் வி. எஸ். சீனுவாசசாஸ்திரி ஒருவர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அக்காலத்தில் போடப்பட்ட பங்குத்தொகை ரூ 2000. இன்றையதினம் 6000 அங்கத்தினர்கள் இருக்கின்றனர். மாதமொன்றுக்கு லெட்ச ரூபாய்க்கு வியாபாரம் நடக்கிறது; 130 பேர்கள் வேலையார்த்து வருகிறனர்; இதற்கு 26 கிளை ஸ்தாபனங்கள் நிறுவப்பட்டிருக்கின்றன; இவை யாவற்றிலும் மொத்த க்ஷேமநிதி ரூ 91,000. இதன் வெற்றியைப் பற்றி பொதுவாக இந்தியரும் சிறப்பாகத் தென்இந்தியரும், பெருமையடையாதி

(28-ம் பக்கம் பார்க்க)

# யௌவன கூட்டுறவாளர் சங்க ஆரம்பவிழா

## "ஐக்கிய அரசு"க்கு ஆதரவு

### கனம் மந்திரி வாழ்த்து ; தலைவர்கள் நற்செய்தி

ஜனவரி 22வ

இன்று பிற்பகல் 5 மணிக்கு டவுன்ஹாலில் யௌவன கூட்டுறவாளர் சங்க ஆரம்பவிழாவையும் "ஐக்கிய அரசு" பத்திரிகையின் வெளியீட்டு விழாவையும் முன்னிட்டு பொதுக் கூட்டமொன்று நடைபெற்றது. அவ்வமயம் மீனம்பள்ளி ஜமீன்தார் திரு. கெ. வி. எம். வெங்கிடராஜலம் ரெட்டியார், எம். எல். ஸி, சென்னை அரசாங்க இரண்டாவது மந்திரி கனம். பி. டி. ராஜன் பி. ஏ (ஆக்ஸ்போர்ட்) பார்அட்லா, திரு என். சிவராஜ் பி ஏ, பி.எல்., எம். எல். ஸி, டாக்டர். ஏ. மதுரம், திருச்சிஜில்லா போர்ட் தலைவர் ராவ் பகதூர். டி. எம், நாராயணசாமிபிள்ளை, எம் ஏ., பி.எல்., எம். எல். ஸி, திருச்சிஜில்லா கூட்டுறவு அர்பன் பாங்கு தலைவர் திவான் பகதூர் சர். டி. தேசிகாசாரியார் பி.ஏ., பி.எல்., திருச்சிஜில்லா கூட்டுறவு பெடரேஷன் தலைவர் எம். எம். கிருஷ்ணசாமிபிள்ளை பி ஏ., பி எல்., பெடரேஷன் எக்ஸிகியூடிவ் ஆபீசர் திரு. பி. பி. கெ. ராஜா சிதம்பரம், டாக்டர் கிருஷ்ணசாமி நாயுடு, "இந்தியா" ஆசிரியர் ஜனகசங்கர கண்ணப்பர், திரு. கி. ஆ. பெ. விசுவநாதம், உடையார்பாளையம் இளைய ஜமீன்தார் திரு. கெ. கந்தசாமி உடையார், திரு. ஈ. வி. கிருஷ்ணமாசாரி பி. ஏ. பி. எல், கூட்டுறவு இலாக்கா சப்டிப்டி ரிஜிஸ்திரார் திரு நித்தியானந்தம், "நகரதூதன்" ஆசிரியர் திரு திருமலைசாமி, "வர்த்தக ஊழியன்" ஆசிரியர் திரு. டி. வி. கெ. நாயுடு, திரு எஸ். ஜெ. ரெத்தனசாமி எம். ஏ. பி. எல்., திரு. கெ. என். ராமசாமி அய்யர் பி. ஏ. பி. எல், திரு. எஸ் எம். சொக்கலிங்கம், திரு. ரெத்தினம்பிள்ளை, திரு. கெ. எம். பாலசுப்பிரமணியம் பி.ஏ., பி.எல், முதலியோரும் மற்றும் பல கனவான்களும், மாணவர்களும், போக்குவரத்துத் தொழிலாளர்களும், தையல் தொழிலாளர்களும், சலவைத் தொழிலாளர்களும் விஜயஞ்செய்திருந்தனர்.

#### நற்செய்தி

தமிழ்நாடு கூட்டுறவு பெடரேஷன் தலைவர் ராவ்பகதூர் டி. ஏ. ராமலிங்கம் செட்டியார் பி. ஏ. பி. எல். எம். எல். ஸி, சென்னை மாஜி கூட்டுறவு டிப்டி ரிஜிஸ்திரார் திரு. ஸி. டி. நாயகம், மதுரை- ராமனுதபுரம் ஜில்லா கூட்டுறவு பாங்கு பெடரேஷன் தலைவர் திரு. ஈ. எஸ். சுந்தா பி. ஏ. பி எல் ஆகியோர் நற்செய்தி அனுப்பி இருந்தனர். அதாவது :—

#### ராவ்பகதூர் டி. ஏ. ராமலிங்கம் செட்டியார்

கூட்டுறவு இயக்க வளர்ச்சிக்கு பிரசாரம் மிக அவசியம். சென்ற சில வருடங்களாக இவ்வியக்கம் பல இன்னல்களுக்கு ஆளாகி இருப்பதற்குக் காரணம் ஜனங்களிடையே போதிய பிரசாரமின்மையும், ஜனங்களுக்குப் போதிய கல்வியின்மையுமாகும். திருச்சி கூட்டுறவாளர்கள் பிரசாரத்தை முன்னிட்டு மாத சஞ்சிகையொன்று ஆரம்பிப்பதை அறிய நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

(27-ம் பக்கத் தொடர்ச்சி)

ருக்கமுடியாது. இதில் சில குறைகளும் கஷ்டநிஷ்டூரங்களுமில்லாமலில்லை. வருமானத்திற்கு மேல் நிர்வாகச் செலவேற்படுவதும், வருமானக் குறைவான சில கிளைச்சங்கங்களை நிர்வகிப்பதும், சாமான் வாங்குகிற விஷயத்தில் ஓர் திட்டமான முறை கையாளப்படாமையும் பெருங்குறைகளாகும். வியாபாரத்தில் தனித்த வியாபாரிகளுடனும், கூட்டு கம்பெனிகளுடனும் ஏற்படும் போட்டி சர்வசாதாரணமான இடைஞ்சல்களில் ஒன்ருக இருந்துவருகிறது. எனினும், தகுதியான மனிதனை நம்பி நிர்வாகம் விடப்படுமானல் அவன் திறமையாகத் தன்னலமின்றி நிர்வாகஞ் செய்வானகில் இத்துறையில் கூட்டுறவு இயக்கம் வெற்றி பெறுமென்பதில் ஐயமில்லை.



இப்பத்திரிகைக்கு அபிவிருத்தி இலாக்கா மந்திரி கனம் பி. டி. ராஜன் அவர்கள் ஆதரவு நல்குவதானது மிகத்திருப்தியை அளிப்பதாக இருக்கிறது. திருச்சி ஜில்லாவிலுள்ள கூட்டுறவு இயக்கப் பிரமுகர்கள் வகுத்த வழியைப் பின்பற்றும் இப்பத்திரிக்கை இந்த ஜில்லாவில் இயக்க முன்னேற்றத்திற்கு நேர்மையான முறையில் பணியாற்றுமென நம்புகிறேன். பத்திரிகை வெற்றிகரமாக நடைபெற வேண்டுமென விரும்புகிறேன்.

#### திரு. ஸி டி. நாயகம்

கூட்டுறவு இயக்கத்திற்குப்பாடுபடும் பொருட்டு தமிழ்மாத சஞ்சிகையொன்று வெளியிடப்படுமென்பதை அறிய பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன். தற்சமயம் கூட்டுறவு இயக்கத்தில் பல பெருங்குறைகளைக் காண்கிறோம். எனினும் நம் நாட்டின் பொருளாதாரத் துறையிலுள்ள குறைபாடுகளைப் போக்க கூட்டுறவு சிறந்த மார்க்கமே. உலகிலே மிகவும் முற்போக்கானநாடுகள் உள்ள நிலையில் நம்நாட்டையும் கொண்டுவர வேண்டுமென விரும்புவோர், தங்கள் எண்ணம் ஈடேற கூட்டுறவு முறையைக் கைக்கொள்வதென்றல் அவர்கள் பூர்த்தி செய்யவேண்டிய வேலை சுலபத்தில் ஆவதாக இல்லை. இதுபுறமிருக்க, தற்சமயம் மிகமிக கஷ்டமானதும், மகிழ்ச்சிக்கு இடமற்றதுமான ஒருவேலை இருக்கிறது. அதாவது, இயக்கம் மாசற்றதாக இருக்கிறதா என்பதில் கவனத்தைச் செலுத்துவதாகும். சுயநலக்காரர்கள் புற்றீசல் போல் புறப்பட்டு பொதுஜன நலத்திற்கென ஏற்பட்டுள்ள ஸ்தாபனங்களில் தலையிட்டு அவற்றினைப் பாழாக்குவதுடன் தாங்களும் இருக்குமிடம் தெரியாது மறைகிருர்கள். இது நம்நாட்டில் சர்வசாதாரணமாக இருந்து வருகிறது. இக்கூட்டத்தினர் கூட்டுறவு இயக்கத்திலும் இல்லாமலில்லை. இத்தகைய தன்நலம் நிறைந்த அயோக்கியர்களை விரட்டி அடித்தும், உலகை ஏமாற்றித்திரியும் மோசக்காரர்களை நாடவிடாது தடுத்தும், போலிகளின் சூழ்ச்சியைவெளியிட்டும் கூட்டுறவாளரை ஜாக்கிரதையாக இருக்குமாறு எச்சரிக்கை செய்தும் வருமானல் இதுவே "ஐக்கிய அரசு" இவ்வியக்கத்திற்குச் செய்யக்கூடிய மகத்தான அரியசேவையாகும். பொது ஸ்தாபனங்களைத் தமதாக நினைத்து வயிற்றை நிரப்பிவரும் கூட்டத்தினர் ஒழிந்தால் இவ்வியக்கம் நன்ருக விருத்தியடைவதுடன் அனுதைக் குடும்பங்கள் பலவற்றினுக்கு ஆதரவு கிடைக்கும்; நாட்டினுக்கும் ஓர் விசேஷ பெருமை ஏற்படும். தமிழ் நாட்டிற்கு திருச்சி மத்திபமான இடமாகையால் பத்திரிக்கையின் வளர்ச்சிக்கு இயற்கையில் அது ஓர் அனுகூலமாக இருக்கிறது. திருச்சியின் பிரபல கூட்டுறவாளர்களின் ஆதரவில் பத்திரிகை ஆரம்பிக்கப்படுவதானது எக்காலத்திலும் அது குறைவின்றி நடக்குமென்பதற்கு நல்ல அறிகுறியாக இருக்கிறது. பத்திரிகை வெற்றிகரமாக நடக்கவேண்டுமென விரும்புகிறேன்.

#### திரு. ஈ. எஸ். சுந்தா

கூட்டுறவு பத்திரிகைஉலகில் புதியதோர் சஞ்சிகை வெளிவருவதை அறிய நான் சந்தோஷமடைகிறேன். அதிலும், எங்கள் ஜில்லாவாசியும், கூட்டுறவு இலாக்கா மந்திரியுமான கனம். பி. டி. ராஜன் பத்திரிகை வெளியீட்டு விழா வைபவத்திற்குத் தலைமை வகிப்பதை அறிய நான் அகமகிழ்ச்சி அடையாதிருக்க முடியாது.

கூட்டுறவு இயக்கத்திற்கென தனிப்பட்ட நபர்களின் சொந்தப் பொறுப்பில் பத்திரிகைகள் நடத்தவேண்டிய காலம் சமீபித்து விட்டது. அரசியல் சம்பந்தப்பட்ட செய்திகளை வெளியிடும் பத்திரிகைகள் கூட்டுறவு இயக்கத்தைப் பொறுத்தமட்டில் போதிய அளவு அக்கரை காட்டுவதில்லை என்பது சகலரும் அறிந்ததே. மேல்நாடுகளில் கூட்டுறவு சஞ்சிகைகள் உச்ச நிலையை அடைந்திருப்பதாக நாம் எண்ணிக்கொண்டிருந்தாலும் அங்குள்ளோர் கூட்டுறவு சஞ்சிகைகள் போதிய அளவு விருத்தியடைவதில்லை என குறைகூருமலில்லை. எனவே நாம் பிற்போக்கான நிலையில் இருக்கிறோமென்பதாகக் கவலைப்படதேவை இல்லை.

நம்நாட்டில் பொதுவாக தமிழ் மக்களும்' குறிப்பாக சங்கங்களும் கூட்டுறவு சஞ்சிகைகளுக்குப் போதிய அளவு ஆதரவு நல்கவில்லை. எனினும், தமிழ் நாட்டிலுள்ள குடிசைகள் தோறும் சென்று கூட்டுறவு இயக்கத்தின் தத்துவத்தைப்போதிப்பதே நமது கடமையாக இருக்க வேண்டும்.

கூட்டுறவு இயக்கத்தில் சேவை புரியும் தொண்டர் என்ற முறையிலும், "கூட்டுறவு" என்ற சஞ்சிகையின் ஆசிரியர் என்ற முறையிலும், "ஐக்கிய அரசு" சஞ்சிகையை வரவேற்கிறேன். நீண்ட நாள் வாழுமாறு அருள் புரியுமாறு ஆண்டவனைப் பிரார்த்திக்கிறேன். குழந்தைப் பருவத்திலிருந்து போதிய வயதை அடைந்ததும் தமிழ் நாட்டில் கூட்டுறவு இயக்க முன்னேற்றத்திற்காக நம்முடன் துணை நின்று போர்புரிய ஓர் சகோதரியாக "ஐக்கிய அரசு" விளங்க வேண்டுமென நான் விரும்புகிறேன்.

## தலைவர் தேர்தல்

சங்க ஆரம்ப விழா வைபவத்திற்கும், பத்திரிகை வெளியீட்டு விழாவிற்கும் தலைமை வகிக்குமாறு கனம். பி. டி. ராஜன் அவர்களைக் கேட்டுக்கொள்ளும்போது திரு. என். எஸ். கோவிந்தசாமி கூறியதாவது :—

கனவான்களே! தோழர்களே!

யௌவன கூட்டுறவாளர் சங்க ஆரம்ப விழாவையும், ஐக்கிய அரசு சஞ்சிகையின் வெளியீட்டு விழாவையும் முன்னிட்டு இன்று நாம் இங்கு கூடியுள்ளோம். இன்று நம்நாட்டில் பல்வேறுசங்கங்களும், பற்பலபத்திரிகைகளும் புற்றீசல்போல் தோன்றுவதும், மறைவதும் சகஜமாக இருக்கின்றன. இவைகள் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாகவும், சீக்கிரமாகவும் தோன்றுகின்றனவோ அதுபோல் மறைகின்றனவென்பதை நாம் பிரத்தியட்சமாக பார்த்து வருகிறோம். நம் நாட்டில் ஆரம்பிக்கப்படும் சங்கங்கள் பல நிலைபெறுததற்குக் காரணம் பொதுஜன ஆதரவில்லாமை என்றோ அல்லது சங்கங்களின் ஆரம்பத்திற்கு மூல புருஷர்களாகவுள்ளோர் ஆதியில் எவ்வளவு ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் வேலை செய்கிறார்களோ அவை எக்காலமும் நிலைத்திருமை என்றோ கூறலாம். ஆனால் பத்திரிகைகளைப் பொருத்தமட்டில் அவைகளின் அழிவிற்குக் காரணம் வேறு. பெரும்பாலும் நம் நாட்டில் ஆரம்பிக்கப்படும் பத்திரிகைகள் நாட்டின் நிலை என்ன? பொதுஜனங்களின் தேவை என்ன? என்பதை உணர்ந்து நிரந்தரமான நன்மையை நாடி நடத்தப்படவில்லை. உதாரணமாக நம் நாட்டில் புதிய புதியதான காலணாப்பத்திரிகைகளும், தம்படிப் பத்திரிகைகளும் வெளிவந்தன. அவைகள் இன்று இருக்குமிடம் தெரியவில்லை. அதற்குக் காரணம் அவை வெறும் பகட்டான முறையில் நடத்தப் பட்டதேயாகும். மாதப் பத்திரிகைகளை எடுத்துக் கொள்வோம். இவையாவும் ஹாஸ்யக் கட்டுரைகளை வெளியிட்டு மக்களிடம் அற்பசந்தோஷத்தை உண்டு பண்ணி தொழில் நடத்துகின்றன. "செட்டிக்கு சுக்கிரதிசை" என்று பெயர் கொடுத்து ஓர் செக்கைப் போட்டு, ஓர் பெரியாரை செக்கை ஓட்டுவதுபோல் ஓர் பத்திரிகை போடுகிறது. அதனை ஜனங்கள் ஓர் தமாஷாவாகக்கருதி வாங்கிப் படிக்கின்றனர். பத்திரிகையைப் பாராட்டுகின்றனர். ஆனால் அவர்கள் அடையும் பயனென்ன? இந்த அற்ப சந்தோஷம் என்றும் நிலைத்து நிற்க முடியுமா? இவைகள் தான் இப்படி என்றால் நம்நாட்டில் நடத்தப்படும் தினசரிப்பத்திரிகைகளை எடுத்துக் கொண்டால் அவைகள் செய்யும் வேலை மிகவும் மோசமாக இருக்கிறது. "சென்னை மந்திரி மரணம்" என ஓர் தினசரி சுவரொட்டி விளம்பரத்தில் போட்டிருக்கிறது. சென்னையில் மூன்று மந்திரிகள் இருக்கும் போது, ஒருமந்திரிக்கு குறைந்த பக்ஷம் ஆயிரம் பேராவது வேண்டியவர்களாக இருக்கக்கூடும். இவர்கள் யாவரும் சுவரொட்டி விளம்பரத்தில் "சென்னை மந்திரி மரணம்" என்பதைக் கண்டதும் பத்திரிகையை வாங்கி பரபரப்புடன் பார்க்காமல் இருப்பார்களா? அவ்விதம் வாங்கிப் பார்த்தால் பத்திரிகையில் காணக்கூடிய செய்தி என்ன? "அந்தோணியார் கோவில் பங்குசாமியார் செல்வநாதர் சென்ற சில காலமாக நோய்வாய்ப்பட்டிருந்தவர் காலமானார்" என்ற செய்தி பத்திரிகையில் காணப்படுகிறது. இம்மாதிரியான செய்தியை சந்தேகத்திற்கிடமான முறையில் வெளியிட்டதால் குறைந்தது 3000 பத்திரிகைகளாவது செலவழிந்திருக்க முடியும். ஆனால் இது எவ்வளவு பெரிய ஏமாற்றம் என்பது கவனிக்கத்தக்கது. இதுபோல் காந்திஜீ எரவாடா சிறையில் உண்ணாவிரதமிருக்கையில் "அம்பத்காரின் விபரீதப் போக்கு" என்று ஓர் பத்திரிகை விளம்பரம் செய்திருந்தது. காந்திஜீ உண்ணாவிரதமிருக்கும் காலத்தில், திரு. அம்பத்காரின்பேரில் ஜனங்கள் ஆத்திரமடைந்திருக்கும் நேரத்தில் இதனைக்கண்ணுற்ற ஜனங்கள் ஆவேசத்துடன் பத்திரிகையைவாங்கிப் பார்த்தால் அதில் கண்டிருப்பதென்ன? "அம்பத்கார் தாழ்த்தப்பட்டவர்களுக்கு 10 ஸ்தானம் வேண்டுமென்கிறார்; காந்திஜீ ஆறு ஸ்தானங்கள் தான் கொடுக்க முடியுமென்கிறார்; ஆனால் அம்பத்கார் பீடிவாதங்காட்டுகிறார்" என்ற செய்தியேயாகும். இதனால் என்ன விபரீதம் நேரிட்டு விட்டது. நிற்க, மற்றும் ஓர் பத்திரிகை காந்திஜீ வைஸ்ராயைக் காண விரும்பியபோது, அனுமதியளிக்க அவர் மறுத்த சமயத்தில் "காந்தி—வில்லிங்டன் சந்திப்பு" என்று விளம்பரஞ் செய்திருந்தது. வில்லிங்டன் பிரபுவை சாபமிட்டுக்கொண்டிருந்த ஜனங்கள் மிகவும் ஆவலுடன் பத்திரிகையை வாங்கிப் பார்த்தால் அதில் காணப்படும் செய்தி என்ன? "காந்திஜீயின் இரண்டாவது கடிதத்தை வைஸ்ராய் கிடைக்கப்பெற்றார்; அது சம்பந்தமாகத் தமது மந்திராலோசனை சபையைக்கூட்டி கலந்துபேசியுள்ளார்; இன்னும் ஓர் முடிவுக்கும் வந்தபாடில்லை; ஆனால் நம்பத்தகுந்த பகுதியிலிருந்து கிடைத்துள்ள செய்தியிலிருந்து வைஸ்ராய் காந்திஜீக்குத்தம்மைப்பார்க்க அநேகமாக அனுமதி அளிக்கக்கூடுமெனதெரிகிறது," என்ற செய்தியாகும்.

இம் மாதிரியாகப் பெரும்பாலும் தினசரிப்பத்திரிகைகளெல்லாம் உண்மையை மறைத்தும்; திருத்தியும், கூட்டியும், பெருக்கியும் செய்திகளை வெளியிட்டு ஜனங்களிடையே பரபரப்பையும், கலவரத்தையும், பீதியையும், திகிலையும், ஆவேசத்தையும் உண்டுபண்ணி பத்திரிகைகளின் விற்பனையைப் பெருக்க விரும்புகின்றனவேயன்றி உண்மையாக ஜன சமூகத்திற்கு சேவை செய்வதென்பது அரிதாக இருக்கிறது. வெறும் ஆவேசம் ஜனங்களிடம் என்றும் நிலைத்து நிற்கக்கூடியதுமல்ல, நிரந்தரமான பலனை அளிக்கக்கூடியதுமல்ல. சட்டமறுப்பு இயக்ககாலத்தை எடுத்துக்கொள்வோம். அன்று உள்ள மனிதர்கள் தான் இன்றும் இருக்கிறார்கள். ஆனால் அக்காலத்தில் 5000 பத்திரிகைகள் செலவழிந்திருக்குமானால் தற்சமயம் 3000 பத்திரிக்கைகள் செலவாவது துர்லபமாக இருக்கிறது. இதற்கு காரணமென்ன? அக்காலத்தில் ஜனங்களுக்கிருந்த ஆவேசம் இன்று ஓர் அளவு குறைந்துவிட்டது. இதனால் இன்றைய தினம் பத்திரிகைக்காரர்களெல்லாம் பத்திரிகைகளின் பத்தியை நிரப்பும் பொருட்டும், விற்பனை செய்யும் பொருட்டும் தினந்தோறும் செய்யக்கூடிய பிரார்த்தனை யாதெனில் "இந்தியாவிற்கு சுயராஜ்யம் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் இன்னும் இரண்டு வருடம் சட்டமறுப்பு இயக்கம் நடக்கக்கூடாதா", "தீண்டாமை ஒழிந்தாலும் ஒழியாவிட்டாலும் மீண்டும் ஓர் முறை காந்திஜீ உண்ணாவிரதம் இருக்கமாட்டாரா?" "ஏதாவது ஓர் பெரிய மனிதன் இறந்தால் அனுதாபச்செய்திகள் அதிகம் கிடைக்குமே" என்பதாகும். இதுவே இன்றைய பத்திரிகை உலகின் நிலையாகும். இவ்விதம் கூறுவதிலிருந்து இப்பத்திரிகைகளைவிட நாம் மேதாவிகளென்றோ, எந்த வகையிலும் மேலானவர்களென்றோ தற்பெருமை கொண்டாட விரும்பவில்லை. ஆனால் நாம் கூறவிரும்புவது யாதெனில் இன்றுள்ள பத்திரிகைகள் என்னென்ன குற்றங் குறைகளுக்கு ஆளாகி இருக்கின்றனவோ அவற்றினுக்கு நாம் ஆளாக மாட்டோம் என்பதாகும். இந்நாட்டின் க்ஷேமம் பொருளாதாரத்துறையில் ஏற்படும் முன்னேற்றத்தைப் பொறுத்ததாக இருக்கிறது. பொருளாதார முன்னேற்றத்திற்கு அனுகூலமாகவுள்ளது கூட்டுறவு இயக்கமாகும். அவ்வியக்க விருத்தியின் பொருட்டு பாடுபடுவதே வெளியிடப்படும் பத்திரிகையின் நோக்கமாகும். இப்பத்திரிகை நீடித்து நடக்குமா? என்ற ஐயம் சிலருக்கு எழலாம். அத்தகைய சந்தேகம் உண்டாவதற்கு நியாயமுண்டு. ஏனெனில் இப் பத்திரிகையை இன்றுள்ள மக்கள் விரும்புவார்களா? என்பதே இதற்குக்காரணம். ஆனால் நாம் ஒன்று மாத்திரம் உறுதியாகக்கூறுவோம். டாக்டர் ஏ. மதுரம் அவர்களின் உதவியைக்கொண்டும், திரு. எஸ் ஜெ. ரெத்தினசாமி அவர்களின் ஒத்துழைப்பைக்கொண்டும், கூட்டுறவாளர்களின் ஆதரவைக்கொண்டும் ஆரம்பிக்கப்படும் இப்பத்திரிகை எத்தகைய குறையுமின்றி நடைபெறுமென்பதை குன்றின் மேல் நின்றும் கூறத்தயங்கோம். இத்தகைய பத்திரிகையின் வெளியீட்டு விழாவுக்குத் தலைமை வகிக்கத் தகுதியான ஓர் தலைவர் தேவை. அப்பதவியை வகிக்க கனம் பி. டி. ராஜன் அவர்களைத் தவிர பொருத்தமான எவரும்கிடைப்பது அரிது.

ஏனெனில், அவர் அன்பே நிறைந்த நெஞ்சர் செல்வ மிருந்தும் அதனை பயன் படுத்திக்கொள்ளாத உத்தமர்கள் நிறைந்த இந்த நாட்டிலே, சர்வகலாசாலைப்பட்டமும், சட்டகலாசாலைப்பட்டமும் பெற்றும், அவற்றால் பயனடையாத புண்ணியவான்கள் நிறைந்த இந்த நாட்டிலே, தாம் பெற்ற அதிகாரத்தை துஷ்பிரயோகஞ்செய்யும் பிண்டாரிகள் நிறைந்த இந்த நாட்டிலே, கனம் பி. டி. ராஜன் அவர்கள், செல்வத்திலே ஒரு ஜமீன்தாராகவும், பட்டத்தில் ஒரு பாரிஸ்டராகவும், பதவியில் ஓர் மந்திரியாகவும் இருந்த போதிலும், ஏழை பங்காளராக விளங்குவது பொதுவாக தமிழ் நாட்டிற்கும், குறிப்பாக தொழிலாளர் உலகத்திற்கும், சிறப்பாக இளைஞர் உலகத்திற்கும் ஓர் பெருமை என்றே சொல்லலாம். இத்தகைய நல்லார் இன்றைய வைபவத்திற்குத் தலைமை வகிப்பது சாலச்சிறந்ததாகும். எனவே, அன்பே உருவாய்த் தோன்றும் பெரியார் கனம் பி. டி. ராஜன் அவர்களை இன்றைய விழாவுக்குத் தலைமை வகித்து பத்திரிகையை ஆசீர்வதிக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. எஸ். ஜெ. ரெத்தினசாமி எம்.ஏ., பி. எல்., அவர்கள் பிரேரணையை ஆமோதித்ததின் பேரில் கனம். பி. டி. ராஜன் தலைமை வகித்தார்.

## உபசாரப் பத்திரங்கள்

யௌவன கூட்டுறவாளரின் சார்பாகவும், தென் இந்திய போக்கு வரத்துத் தொழிலாளர் சங்கத்தாரின் சார்பாகவும் தலைவருக்கு உபசாரப் பத்திரங்கள் வாசித்துக் கொடுக்கப்பட்டன. யௌவன கூட்டுறவாளர் சங்கத்தாரால் வாசித்துக் கொடுக்கப்பட்ட உபசாரப்பத்திரத்தின் சாராம்சமாவது :—

அன்புள்ள ஐயன்மீர்,

நாங்கள் மனமுவந்து தங்களை வரவேற்கிறோம். தங்களின் ஆதரவின் கீழ் யௌவன கூட்டுறவாளர் சங்கம் திறக்கப்படுவதற்கு நாங்கள் பெருமையடையாதிருக்க முடியாது. இச்சங்கத்தின் நோக்கம் பல வழியிலும் கிராமச் சீரமைப்பு வேலையை விருத்தி செய்வதாகும். பண்டிட் ஜவஹர்லால்நேரு கிராமச் சீரமைப்பு வேலையை கிழவிகளுக்கேற்றதென கூறியது எங்களுக்குத் தெரியும். ஆனால் நாங்கள் விவசாயக் கமிஷனர்கள் அபிப்ராயத்தை ஏற்கிறோம். கூட்டுறவு முறையால் லெட்சக் கணக்கான விவசாயிகள் முன்னேற்றமடையக் கூடுமென நம்புகிறோம். கூட்டுறவு இயக்கம் தோல்வி அடைந்தால் இந்நாட்டினுக்கு வேறு விமோசனமில்லை என நினைக்கிறோம். இச்சங்கத்தின் முயற்சியால் நகரில் புத்தகாலயமொன்றும், சுமார் ஆறு கிராமங்களில் வாசகசாலைகளும், ஆரம்பிக்கப்பட்டதால் ஓர் அளவு பயன் ஏற்பட்டதாகக் கருதப்படும்.

கூட்டுறவு இயக்க வளர்ச்சிக்கு படித்த வகுப்பாரின் ஆதரவைப் பெறவும், பாமரமக்களிடையே இவ்வியக்கத்தைப் பரப்பவும் இச்சங்கம் பாடுபடும். அறிவாளிகளையும், பிற்போக்கான நிலையிலுள்ளவர்களையும் ஒன்றுபடுத்தி நாட்டை நன்நிலைக்குக் கொண்டுவர கூட்டுறவு இயக்கமே உதவிபுரியவல்லது என்பதை உணருகிறோம்.

தர்ம கைங்கரியங்கள் பலவற்றிலும் ஈடுபட்டுள்ள சகலரும் அறிந்த டாக்டர் ஏ. மதுரம் அவர்கள் "ஐக்கிய அரசு" பத்திரிகையை அளித்து உதவியதற்கும், திரு. எஸ். ஜெ. ரெத்தினசாமி எம். ஏ. பி. எல். அவர்கள் கௌரவ ஆசிரியர் பதவியை வகிக்க முன்வந்ததற்கும் நன்றி பாராட்டுகிறோம். பல்வேறு சமயத்தினரும் ஜாதியினருமாகவுள்ள இந்நாட்டு இளைஞர்கள் தோழமைகொண்டு தன்னலமின்றி பொது நலத்திற்கென உழைக்க சங்கமும், பத்திரிகையும் பயன்படுமென்பதில் சந்தேகமில்லை.

## போக்குவரத்துத் தொழிலாளர் சங்கம்

தென் இந்திய போக்கு வரத்துத் தொழிலாளர் சங்கத்தார் வாசித்துக் கொடுத்த உபசாரப் பத்திரத்தின் சாராம்சமாவது :—

கனம் பி. டி. ராஜன் அவர்களே ?

இந்நாட்டின் பெரும் பகுதியினர் தொழிலாளராயிருக்கின்றனர். இலங்கை போன்ற சிறிய நாடுகளிலும் தொழிலாளருக்கென ஓர் தனிமந்திரி இருக்க இங்குமாத்திரம் இல்லாதிருப்பது எங்கள் துரதிருஷ்டமே. கூட்டுறவு இயக்கம் எங்கள் இனத்தவரான தொழிலாளர்களால் தோற்றுவிக்கப்பட்டதாகும். எனவே; அவனைத் தொழிலாளர் இயக்கத்தின் ஓர் பகுதி என்று கூற எங்களுக்கு உரிமையுண்டு. கூட்டுறவு இயக்க வளர்ச்சிக்கென இருந்துவரும் கூட்டுறவு இலாக்கா மந்திரியாக தாங்கள் இருப்பதால் தங்களை தொழிலாளர் மந்திரியாகவே கருதுகிறோம். தொழிலாளர் மந்திரியே, தங்களை மனமுவந்து வரவேற்கிறோம்.

எங்கள் குறைகள் அனந்தம். அவற்றினைப் இப்பத்திரத்தில் காண்பதற்கு இடமில்லை. அச்சடிப்பதென்றாலும் வேலை பூர்த்தியாக ஒருமாதமாகும். எனவே, எங்கள் குறைகளை ஓர் தூது கோஷ்டிமூலம் நேரில் தெரிவித்துக் கொள்ளுகிறோம். எனினும், இரண்டொரு முக்கிய விஷயங்களை மாத்திரம் ஈண்டு குறிப்பிட விரும்புகிறோம். வண்டிக்காரர்களாகிய நாங்கள் இந்நகரில் 1500 பேர்கள் இருக்கிறோம். சென்னை மாகாணத்திலேயே இந்நகரில்தான் வண்டிக்காரர்களின் எண்ணிக்கை அதிகம். நாங்கள் இதுகாலம்வரையில் ஒற்றுமையின்றி இருந்துவந்தோம். அதன் பயனாக பலகஷ்டங்களுக்கும் நஷ்டங்களுக்கும் ஆளாகி இருக்கிறோம். உதாரணமாக இந்நகரிலுள்ள வண்டிகள் 1500க்கு 13 ஸ்டாண்டுகள்தான் இருந்தன. இந்த ஸ்டாண்டுகளில் குறிப்பிட்டுள்ள எண்ணிக்கைப்படி 200 வண்டிகள்தான் நிற்கமுடியும். நாங்கள் வண்டிகளை ஸ்டாண்டுகளில் நிறுத்தினால் அதிககூட்டம் போடுகிறோம் என்பதாகவும். அதற்கு அஞ்சி ரஸ்தா ஓரத்தில் நிறுத்தினால் போக்குவரத்துக்கு தடை செய்கிறோமென்றும், அதற்குப் பயந்து அங்கும் இங்கும் ஓட்டிக்கொண்டிருந்தால் அலைகிறோமென்றும் காரணஞ்சொல்லி நாங்கள் போலீசாரால் எங்களுக்கு விபரம் தெரிந்த நாள் முதல்சார்ஜ் செய்யப்பட்டு பெஞ்சுமாஜிஸ்டிரேட் கோர்ட்டில் கோவில் உண்டியலுக்குப்பணம் போடுவதுபோல் அபராதம் செலுத்தி வந்திருக்கிறோம். 1933ஆம் ஜுன்மீ 25உ எங்களுக்சாக ஓர் சங்கம் நிறுவப்பெற்றது முதல் இந்த அநீதி ஓர் அளவு ஒழிந்தது. ஜில்லா போலீஸ் சூப்பிரண்டு அவர்களுக்கும், உதவி போலீஸ் சூப்பிரண்டு அவர்களுக்கும், எங்கள்குறைகளை எடுத்துரைத்ததின் மூலம் சிறிது பரிகாரமேற்பட்டது. பழைய ஸ்டாண்டுகளில் வண்டிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது. ஸ்டாண்டுகள் இல்லாத இடங்களில் புதிய ஸ்டாண்டுகள் அமைக்கப்பட்டன. புதியதாக ஏற்படுத்தப்பட்ட ஸ்டாண்டுகளில் கொட்டகைகள் அமைக்க முயலுகிறோம். ஸ்ரீரங்கம் உத்திர வீதியில் அமைக்கப்பட்டுள்ள புதிய ஸ்டாண்டுக்கு ஓர் கொட்டகை போட்டுத் தருவதாக ஓர் கனவான் வாக்களித்துள்ளார்.

மார்க்கட்டுக்கும் ஜங்ஷனுக்கும் இடையே உள்ள ரயில்வே லெவல்கிராசிங், கோட்டைக்கும் தென்னூருக்கும் உள்ள லெவல் கிராசிங் முதலிய இடங்களுக்கு வாராவதி அமைக்குமாறு ரயில்வே கம்பெனியாரைக் கேட்டுவருகிறோம். நகரசபையின் ரஸ்தா நிர்வாகத்தைப்பற்றி அபிப்ராயங்கூற எங்களுக்கு உரிமை உண்டாகையால் அவ்வுரிமையை உபயோகிப்பதென்றிருக்கிறோம். மாடு குதிரைக்கென ஏற்பட்டுள்ள ஆஸ்பத்திரிகளின் உபயோகத்தை மனிதர்களுக்கென ஏற்பட்டுள்ள ஆஸ்பத்திரிகள் போன்ற நிலைமைக்கு கொண்டுவருவதென இருக்கிறோம். மாடு, குதிரை முதலியன வாங்கவும், எங்கள் வருமானத்தில் மிச்சம் பிடிக்கவும், ஓர் கூட்டுறவு பாங்கு நிறுவுவதென இருக்கிறோம். இக்காரியங்கள் யாவும் சித்திபெறவும், எங்கள் தொழிலுக்கு ஆபத்து வராமல் காக்கவும் உதவி புரியுமாறு தங்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

## திரு. சிவராஜ் சொற்பொழிவு

சங்கத்திறப்பு விழாவன்று சொற்பொழிவு நிகழ்த்த திரு. வீ. பாசுதேவ் பி. ஏ. பி. எல். எம். எல். ஸீ. அவர்கள் வாராமையால் திரு. என். சிவராஜ் பி. ஏ. பி. எல். எம். எல். ஸீ அவர்களைப் பேசுமாறும், உபசாரப் பத்திரங்களுக்க முடிவுரையில் பதிலளிப்பதாவும் தலைவர் கூறியதின் பேரில் திரு. என். சிவராஜ் அவர்கள் பேசியதாவது :—

இந்தியாவின் பெரும்பகுதியினர் கிராமவாசிகளாக இருக்கின்றனர். அவர்களுக்கு உதவி புரியக் கூடியது கூட்டுறவு இயக்கம் ஒன்றே. அவர்கள் முன்னேறவேண்டுமானால் கூட்டுறவு முறையைக் கைக்கொள்ளவேண்டும். இதுவரையில் கூட்டுறவு இயக்கத்தினால் பயனடைந்

தோர் 100-க்கு 90 பங்காகவுள்ள விவசாயிகளென்பது தெரியவரும். அவர்களை லேவாதேவி செய்யும் செட்டிமார்களிடமிருந்தும், மார்வாடிகளிடமிருந்தும் விடுவித்தது கிராமக் கூட்டுறவுச் சங்கங்களே யாகும். இன்றுள்ள சங்கங்களை மூடுவதில் சர்க்கார் முனைந்து நிற்பதை விட புதிய சங்கங்கள் அமைப்பதில் அக்கரை காட்டவேண்டும். கூட்டுறவு முறையால் பல துறையிலும் முன்னேற்றமடைய மார்க்கமிருக்கிறது. இவ்வியக்கத்தைப் பரவச்செய்யும் பொருட்டு யௌவன கூட்டுறவாளர் சங்கம் ஆரம்பிக்கப்படுவதற்கு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். இதன் பொருட்டு ஓர் பத்திரிகை வெளியிடப்படுவது மிகவும் பாராட்டத்தக்கது. "ஐக்கிய அரசு" பல அழகான கட்டுரைகளும், அரிய விஷயங்களும் நிறைந்திருக்கிறது. உயர்ந்த நடையில் எழுதப்பட்டிருக்கிறது. இப்பத்திரிகை பாமரர்களுக்குப் பயன்படுமான முறையில் எளிய நடையில் எழுதப்படவேண்டுமென விரும்புகிறேன். இப்பத்திரிகை கூட்டுறவாளர்களின் ஆதரவைப்பெற்று வெற்றிகரமாக நடக்குமென நம்புகிறேன்.

### கனம் பி. டி. ராஜன்

மந்திரி கனம். பி. டி. ராஜன் அவர்கள் முடிவுரையில் கூறியதாவது:—

தென் இந்தியப் போக்குவரத்துத் தொழிலாளர் சங்கத்தார் தொழிலாளருக்குத் தனி மந்திரி இருக்கவேண்டியதின், அவசியத்தைப்பற்றி குறிப்பிட்டிருந்தனர். இந்தியாவில் தொழிலாளர் பிரசினை யெல்லாம் விவசாயம் புரிவோர் சம்பந்தப்பட்டதாக இருக்கிறது. விவசாய மந்திரியாக இருக்கக்கூடியவர்கள் இத்தொழிலாளர் சம்பந்தமான குறைகள் சிலவற்றினில் கவனஞ் செலுத்தி வருகின்றனர். இந்நாட்டில் தொழிலாளர் பிரசினை விரிவடையுமானல், தொழிலாளருக்கென தனி மந்திரி இலாகையில் உள்ளதுபோல் அவசியமானதாக ஏற்படுமானல் அக்காலத்தில் மந்திரி சபை அமைப்போர் உங்கள் யோசனையை கவனிப்பார்கள். போக்கு வரத்துத் தொழிலாளர்களாகிய நீங்கள் மேல் அதிகாரிகளைக்கண்டு பேசி உங்கள் குறைகளை நிவர்த்தி செய்து கொண்டிருப்பதை அறிய நான் மகிழ்ச்சி அடைகிறேன். தற்சமயம் நீங்கள் நடந்து கொண்டதுபோல் ஒற்றுமையாக ஓர் சங்கத்தாரின் மூலம் உங்கள் குறைகளைப் போக்கிக் கொள்ள முயல்வீர்களாகில் ஒவ்வொன்றிலும் வெற்றி பெருவீர்கள். உங்கள் காரியம் எளிதில் கைகூடும். இன்று நீங்கள் சங்கத்தால் அடைந்துள்ள நன்மையைக் காட்டிலும் இன்னும் பல நன்மையை அடையவேண்டுமென்றும், சங்கம் நீடித்து நடக்கவேண்டுமென்றும் விரும்புகிறேன். கூட்டுறவு முறையில் மாடுகளையும், குதிரைகளையும் வாங்கி நன்மை அடையுங்கள். இம்முறையை விவசாயிகள் பின்பற்றுவதும் நலமாகும்.

யௌவன கூட்டுறவாளர் சங்கத்தார் சங்கத்தின்லட்சியம் இன்னதென்பதைப்பற்றி பத்திரத்தில் கண்டுள்ளதின் மூலம் அறிந்தேன். சங்கத்தின் உயர்ந்த நோக்கம் போற்றத்தக்கது. சங்கத்தின காரியதரிசி பத்திரிகைகளின் தற்போதைய நிலையைப்பற்றி எடுத்துக்கூறினர். அவர் கூறியதின்மூலம் இன்று ஆரம்பிக்கப்படும் பத்திரிகை குற்றங் குறைகளுக்காளாகாமல் நேர்மையான முறையில் நடத்தப்படுமென நம்புகிறேன். கூட்டுறவு சங்கங்களை மூடிவிடுகிற விஷயத்தில் சர்க்கார் கடுமையான முறைகளைக் கைக்கொள்வதாக திரு. சிவராஜ் கூறினர். கூட்டுறவு இயக்கம் புகுத்தப்பட்டதின் நோக்கம் கிராமவாசிகளின் கடன் சுமையைக் குறைக்கும் பொருட்டாகும். இதுவே இவ்வியக்கம் புகுத்தப்பட்டதின் பிரதான நோக்கமுமாகும். எதிர்பார்த்த அளவு இவ்வியக்கம் புகுத்தப்பட்டதால் பிரமாதமான நன்மை விளைந்துவிடவில்லை. தெளிவாகக் கூறுமிடத்து கிராமவாசிகளின் கடன் சுமை குறைந்து விடவில்லை. ஆனல் ஓர் பெரிய நன்மை கூட்டுறவு இயக்கத்தால் உண்டாகி இருப்பது எவரும் மறுக்கமுடியாத உண்மையாகும். லேவாதேவி புரிவோரிடமிருந்து கிருஷிகள் விடுவிக்கப்பட்டிருப்பதுடன் அவர்களது வட்டி விகிதமும் குறைக்கப்பட்டது. இந்த முறையில் கூட்டுறவு இயக்கத்தால் இந்நாட்டினர் பயனடைந்திருக்கின்றனர். இவ்வியக்கத்தால் கிட்டக்கூடிய பயன்கள்யாவும் கைகூடவேண்டுமானல் பொது ஜனங்களின் மனப்பான்மையில் மாறுதல் ஏற்படவேண்டும்.

(35-ம் பக்கம் பார்க்க)



# திருச்சி ஜில்லா மத்தியபாங்கு மகாஜன சபைக்கூட்டம்

## கூட்டுறவு ரிஜிஸ்திரார் விஜயம்; பிரதிநிதிகள் குதூகலம்

### நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள

திருச்சி, பிப்ரவரி 17உ.

இன்று பிற்பகல் 2 மணிக்கு பிஷப் ஹீபர் கல்லூரி மண்டபத்தில் திருச்சி ஜில்லா மத்தியபாங்கு மகாஜன சபைக்கூட்டம் கூடியது. தேநீர் விருந்திற்குப்பின் சரியாக 3 மணிக்கு கூட்ட நடவடிக்கை ஆரம்பமாயிற்று. கூட்டத்திற்கு கூட்டுறவு இலாக்கா ரிஜிஸ்திரார் ராவ் பகதூர் கெ. தெய்வசிகாமணி முதலியார், டிப்டி ரிஜிஸ்திரார் திரு. சாமுவேல் பிள்ளை, சப்டிப்டி ரிஜிஸ்திரார் திரு. நித்தியானந்தம் ஆகியோரும், பாங்கின் பங்காளர்களும், ஜில்லாவின் பல பாகங்களிலுமுள்ள யூனியன்கள், சங்கங்கள், ஆகியவற்றின் பிரதிநிதிகளும் விஜயஞ் செய்திருந்தனர். சங்கத்தலைவர் சர் டி. தேசிகாசாரியார் அவர்கள் உடம்பு சுகமின்மை காரணமாக கூட்டத்தில் கலந்து கொள்ளமுடியாமையால் உபதலைவர் திரு. எல், என். பரமசிவம் பிள்ளை அவர்கள் தலைமை வகித்தார். தலைவர் தமது முன்னுரையில் கூட்டத்தில் நடக்கவேண்டிய காரியங்கள் பல இருப்பதாகவும், காலமோ வெகு குறைவாக இருப்பதாகவும், ஆகவே பேச விரும்புவோர் சுருக்கமாகக் குறித்த காலத்தில் பேசி நிகழ்ச்சிக் குறிப்பில் கண்ட காரியங்களை நடவடிக்கையில் எடுத்துக்கொள்ள உதவவேண்டுமென்றும் கூறினர். பிரதிநிதிகள் சிலர் ஐயப்பாடுடைய சில வினாக்கள் விடுத்தனர். அவற்றினுக்குத் தக்க பதில் அளிக்கப்பட்டது. இங்ஙனமிருக்க, சில பிரதிநிதிகள் நிகழ்ச்சிக் குறிப்பில் கண்டுள்ள காரியங்களை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றனர்.

### வட்டி விகிதத்தில் குறைவு

மற்றும் சிலர் கிராமங்களிலிருந்து வந்துள்ளோர் மத்திய பாங்கார் சங்கங்களுக்கு கொடுத்து

(34-ம் பக்கம் தொடர்ச்சி)

திடீரென ஜனங்களின் மனதை மாற்ற சர்க்காரால் இயலுமென நான் நினைக்கவில்லை. இப்பணியைச் செய்யவேண்டியது கூட்டுறவாளர்களைப் பொறுத்ததாகும். கூட்டுறவாளர்கள்தான் தக்கதோர் வழி காணவேண்டும். இவ்வேலையைப் பூர்த்திசெய்ய வேண்டும். சர்க்காரால் கூடுமான உதவியைச்செய்ய என்றும் தயாராக இருக்கிறோம். துரதிருஷ்டவசமாக இந்நாட்டில் கூட்டுறவு இயக்கம் பணம் கொடுக்கல் வாங்கல் போன்ற துறையில் தான் வேலை செய்துவருகின்றதே யன்றி இவையல்லாத ஏனைய வகைகளில் வேலைசெய்ய முற்படாதது பெருங் குறையாகும். சர்க்கார் கூட்டுறவு சங்கங்கள் பலவற்றினை மூடுமாறு உத்திரவு பிறப்பித்து வருவதும், கடுமையான முறைகளைக் கையாள்வதும் விசனிக்கத்தக்கதே. எனினும், தற்போதைய நிலையில் வியாபார மந்தத்தை யுத்தேசித்து பயனற்றதும், காணயக் குறைவானதும், ஒழுங்காக நடைபெறாததுமான சங்கங்களை மூடாமலிருக்க முடியவில்லை. பல சங்கங்கள் கட்சிப் பிரதி கட்சிகள் காரணமாக ஒன்றுக்கும் உதவாததும் பயனற்றதுமாகி விட்டன. இப்படிப்பட்ட சங்கங்களை எல்லாம் சீர்திருத்துவதில் கூட்டுறவாளர்கள் அக்கரை காட்டும் பக்ஷத்தில் கூட்டுறவு இலாக்கா அதிகாரிகள் தேவையான உதவி புரியத்தயாராக இருப்பார்களென்றே கூறுவேன்.

டாக்டர் ஏ. மதுரம் அவர்களைப் போஷகராகக் கொண்ட சங்கமும், அவர்களின் பொருளுதவியால் ஆரம்பிக்கப்பட்டுள்ள "ஐக்கிய அரசு" பத்திரிகையும் நன்றாக நடைபெற வேண்டுமென விரும்புகிறேன்.

திருச்சி ஜில்லா கூட்டுறவு பெடரேஷன் தலைவர் திரு. எம். எம். கிருஷ்ணசாமி பிள்ளை பி.ஏ., பி.எல். அவர்கள் தலைவருக்கும், சொற்பொழிவாளருக்கும், மற்றும் விஜயஞ் செய்திருந்த கனவான்கள் பலருக்கும் நன்றிகூற கூட்டம் இனிது கலைந்தது.

வரும் பணத்தின் வட்டியைக் குறைப்பது சம்பந்தமாகத் தங்கள் அபிப்ராயத்தைத் தெரிவிக்கும் பொருட்டு வந்திருப்பதாகவும், அதனால் அது சம்பந்தமான தீர்மானத்தை முதலில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் கூறினர். அதனைப்பலர் அங்கீகரிக்கவே, "சங்கங்கள் அங்கத்தினர்களுக்குக் கொடுக்கும் கடன்களின் வட்டி விகிதத்தை நீண்டகாலக் கடன்களுக்கு ரூ. 8-9%க்கும், குறுகிய காலக்கடன்களுக்கு ரூ. 8%க்கும் குறைத்துக்கொள்ள வேண்டுமென்ற நிபந்தனையின்பேரில் ஜில்லா பாங்கார் சங்கங்களுக்குக் கொடுக்கும் கடன்களின் வட்டி விகிதத்தை நீண்டகாலம் குறுகியகாலம் கடன்களுக்கு ஒரே விதமாக ரூ. 6¼%க்கு தற்காலிகமாக ஒரு வருஷம்வரை குறைக்க வேண்டுமென இம்மகா சபை கேட்டுக்கொள்ளுகிறது" என்ற தீர்மானம் ரிஜிஸ்திராரின் ஆசீர்வாதத்தைப் பெற்று, தலைவரால் பிரேரணை செய்யப்படவே எதிர்ப்பின்றி ஏகமனதாக நிறைவேறியது.

## வாங்கலாமா? வாங்க வேண்டாமா?

அடுத்தபடியாக, மத்திய பாங்கிற்குப் புதியதோர் கட்டிடம் வாங்குவதுபற்றிய தீர்மானம் திரு. ஆர். சீனுவாச அய்யர் அவர்களால் கொண்டுவரப்பட்டு திரு. எல். என். கோபால்சாமி அய்யர் திரு. தாத்தாசாரியார் அவர்களாலும், மற்றும் சிலராலும் ஆதரித்துப் பேசப்பட்டது. பெருத்த எதிர்ப்பின்பேரில் நீண்ட விவாதம் நடந்தது. தீர்மானத்தின் விபரமாவது :—

"கட்டிடக் கமிட்டியாரால் தீர்மானிக்கப்பட்டபடி பாங்கின் கட்டிட நிதியிலிருந்து திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரிக்குறிய கட்டிடத்தை, ரூ. 70,000க்கு வாங்கவும், பாங்காரே ஸ்டாம்பு ரிஜிஸ்திரேஷன் செலவுகளை ஏற்றுக்கொள்ளவும், இவற்றினை நடத்திப்பூர்த்தி செய்ய தலைவருக்கு அனுமதி அளிக்கவும் வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகிறது."

### ஆதரவு

தீர்மானத்தை ஆதரித்துப் பேசியோர் கூறியதாவது:-பிஷப் ஹீபர் கல்லூரிக்கட்டிடம் மிகச் சிறந்ததாகும். இது லெட்சரூபாய்க்குமேல் பொறுமானமுள்ளது. இதுபோன்ற கட்டிடம் கட்டுவதென்றால் எவ்வளவோ சிரமமேற்படும். இதைப் போன்ற நகரின் நடுவில் சுகாதாரமுள்ளதும், போக்குவரத்துக்கு சௌகரியமானதும், ரயில்வே ஸ்டேஷன்களுக்கு சமீபமானதும், பெரும் கூட்டஙகள் நடத்த விசாலமானதுமான கட்டிடம் கிடைப்பதரிது. இக்கட்டிடம் நமக்குக் கிடைப்பதை நமது நல்லதிருஷ்டமென்றே கூறலாம். இந்த சந்தர்ப்பத்தை நாம் இழத்தல் கூடாது. இக்கட்டிடத்தை வாங்குகிற விஷயத்தில் பாங்கின் தலைவர் மிகுந்த பிரயாசை எடுத்துள்ளார். இரண்டு மூன்று தடவை சென்னைக்கு விஜயஞ்செய்து பிஷப் அவர்களை நேரில் கண்டு பேசி தான் திருப்திகரமான ஏற்பாட்டிற்கு வந்துள்ளார். இன்று இக்கட்டிடம் ரூ. 70,000க்குக் கிடைப்பதற்குக் காரணம் அவர் எடுத்துக்கொண்ட பிரயாசையே யாகும். எனவே, இது விஷயத்தில் ஆராய்ச்சி செய்யவோ, ஆலோசனை செய்யவோ, புனராலோசனை புரியவோ இது நேரமல்ல; அதற்குரிய காலமும் இதுவல்ல. ஏனெனில் இது சம்பந்தமாக ஓர் முடிவு ஏற்பட்டிருக்கிறது. அத்தகைய முடிவுக்கு வருமாறு நமது தலைவரும், மற்றும் சிலரும் அடங்கிய கமிட்டிக்கு ஏற்கனவே அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. அங்ஙனமிருக்க அவர்கள் செய்துள்ள வேலைகளை ஏற்காது புரக்கணிப்பது அழகல்ல. அவ்விதம் செய்வதானது நம்மையே நாம் அவதித்துக் கொள்வதாகும். ஆகையால், இத்தீர்மானத்தை ஆதரிக்கவேண்டியது மகாஜன சபை அங்கத்தினர்களின் கடமையாகும்.

### எதிர்ப்பு

இத்தீர்மானத்தை திருவாளர்கள் எம். வி. துரைசாமி உடையார், திரு. பி. எஸ். வைத்திஞத அய்யர் திரு. சிவராம கிருஷ்ண அய்யர், டாக்டர். பி. எம். கிருஷ்ணசாமி நாயுடு ஆகியோரும், மற்றும் பலரும் எதிர்த்துப் பேசினர். அவர்கள் பேசியதின் சாராம்சமாவது :—பணக்கஷ்டமிகுந்திருக்கும் இக்காலத்தில், கட்டிடங்களுக்கெல்லாம் மதிப்புக் குறைந்து கொண்டிருக்கும் இக்காலத்தில் ரூ. 70,000க்கு மத்திய பாங்குக்குக் கட்டிடம் வாங்குவது அவசியமில்லை. மேலும், தற்போது கூறப்படும் கட்டிடம் சுமார் நூறு வருஷங்களுக்குமுன் கட்டப்பட்டதாகும். இக்காலத்தில் அதற்கு ரூ. 70,000மும் ரிஜிஸ்திரேஷன் செலவும் கொடுப்பது தகுதியல்ல. இதைவிட குறைந்த தொகைக்கு மேன்மையானதும், தகுதியானதுமான வேறு கட்டிடத்தை நவீன முறையில் நாம் சட்டக்கூடுமாகையால் இவ்வளவு அதிகமான தொகையைக்கொண்டு அதை வாங்குவதால் பாங்குக்கு நன்மை இல்லை. இந்நாளில் வேலை இல்லாத திண்டாட்டத்தால் பலர் கஷ்டப்படுவதை நாம் அறிவோம். புதிய கட்டிடம் கட்டுவதின் மூலம் சிலருக்குக் கொஞ்சகாலம் வேலை கொடுக்கலாம். அதனால் சில குடும்பங்கள் பிழைக்க முடியும். இக்கட்டிடம் கல்லூரிக்காகவே கட்டப்பட்டதாகையால் தற்போது இருக்கிறபடி அது பாங்கின் காரியாதிகளுக்குத் தகுதியாயிராது. அதை சரியானபடி பிரயோஜனப் படுத்திக்கொள்ள வேண்டுமானால் சில பாகங்களை இடிக்கவேண்டும். சில பாகங்களை மறுபடியும் புதுப்பித்துக்கட்ட வேண்டும். இதனால் கட்டிடம் பலஹீனமடையலாம். இத்தகைய திருத்தத்தால் புதிய கட்டிடத்திற்குள்ள வலுவையும், அழகையும் இக்கட்டிடத்தில் காணமுடியாது. பழைய கட்டிடத்தைத் திருத்தஞ் செய்து புதிய தோற்றத்தை உண்டுபண்ணுவதென்பது கிழவனுக்கு இன்ஜக்ஷன் கொடுத்து இளைஞனுக்குரிய வசீகரத்தையும், பலத்தையும் அளிக்க முயல்வதை ஒக்கும். சாதாரண தினங்களில் பாங்கில் லேவாதேவி செய்யவருபவர்களின் கோச்சுக்கள், மோட்டார்கள், வண்டி முதலியவைகளை நிறுத்த அங்கு அவசியமான இடம் இல்லை. நிர்வாகசபைக் கூட்டம், மகாஜன சபைக் கூட்டம் நடக்கும் தினங்களில் இதனால் அசௌகரியம் ஏற்படும். இவைகளுக்காக வேண்டிய இடத்தை வாங்குவதற்கு பாங்கார் அதிகமான தொகை செலவு செய்யத் தயாராக இருந்தாலும் காலி இடம் இருப்பதாகத் தெரியவில்லை. இக்கட்டிடமானது அநேக ரஸ்தாக்கள் சந்திக்கும் இடத்திலும், ஜனங்களும், வண்டிகளும் போக்குவரத்து அதிகமாயுள்ள இடத்திலும் இருக்கிறது. அதனால் அதிகமான சப்தமும், கலவரமும் இருக்குமாகையால் பாங்கில் அமைதியாய் வேலை செய்யவோ, கூட்டங்கள் நடத்தவோ முடியாது. தவிர, சமீபத்தில் பள்ளிக்கூடம் இருப்பதால் காலை மாலை நேரங்களிலும், இடை வேளை போஜன காலத்திலும் மாணவர்கள் அதிக சப்தம் போடுவார்கள். இதை எல்லாம் அனுசரித்து புதியதோர் மனையை வாங்கி தகுதியான கட்டிடமொன்று கட்டிக் கொள்வதே உஜிதம். இது சமயம் ரூ. 70,000ஐ விரயம் செய்வது சரியல்ல. தற்போதுள்ள கட்டிடத்திற்கு மாதமொன்றுக்கு ரூ. 75 வாடகை கொடுக்கப்படுகிறது. வருடமொன்றுக்கு ரூ. 900ம் தான் கட்டிட வாடகையாகிறது. இன்று வாங்க வேண்டுமென சொல்லப்படும் கட்டிடத்திற்குக் கொடுக்கக்கூடிய ரூ. 70,000ஐ 100க்கு 3 விகிதம் வட்டிக்கு டிபாசிட்டாகப் போட்டாலும் ஒரு வருடத்திற்கு ரூ. 2100 கிடைக்கிறது. இதன் மூலம் நமக்குத் தெரிவதென்ன? வருடமொன்றுக்கு ரூ. 1200 நஷ்டமேற்படுகிறது. இம்மாதிரியான நஷ்டத்தை பாங்கு அடையும்படி செய்வது முறையல்ல. எனவே, குறிப்பிடப்படும் கட்டிடத்தை வாங்கக் கூடாது.

### பதில்

இவ்வெதிர்ப்புக்கு அளிக்கப்பட்ட பதிலாவது :—கட்டிடம் பாங்கிற்கு தகுதியானதல்லவென சொல்லப்படுகிறது. கட்டிடம் கட்டுவோர் எவரும் பாங்கிற்கெனக் கட்டித்தரமாட்டார்கள். ஒரு பாங்கு மூடப்பட்டால் தான் அத்தகைய கட்டிடம் நமக்குக் கிடைக்கலாம். எனவே, நாம் கவனிக்கவேண்டியதெல்லாம் வாங்கப்படும் கட்டிடம் நமது வேலைக்கு கூடியவரையில் பொறுத்தமானதா என்பதைப் பார்க்க வேண்டியதேயாகும். இந்த இடம் அவ்வளவு சிலாக்கியமானதல்லவென கூறப்படுகிறது. அவ்விதம் கூறுவோர் சிலாக்கியமான இடத்தைக் காண்பித்தால் அவற்றை நாம் ஏற்கத் தயாராக இருக்கிறோம். இக்கட்டிடத்தில் மோட்டார் முதலியன நிற்க இடமில்லை என்பதும், போக்குவரத்தால் சப்தம் உண்டாகிறதென்பதும் விந்தையாகவே இருக்கிறது. இவ்விதம் கூறுவோர் கூற்று முன்னுக்குப் பின் முரண்பட்டதாகும். மோட்டாருக்கு இடம் வேண்டும்; மோட்டார் வந்தால் சப்தம் இல்லாதிருக்கவும் வேண்டும். இது எங்காவது சாத்தியமான காரியமா? மேலும், நமது பாங்கின் கட்டிடம்

நிர்சப்தமான இடத்தில், பூஞ்சோலையின் மத்தியில் அமைக்கப்பட வேண்டுமானால் பூனாம்பாளையம், ராஜாம்பாளையம் போன்ற இடங்களில் தான் அதற்கேற்ற இடம் கிடைக்குமேயொழிய திருச்சியில் கிடைக்காது. பாங்கானது ஓர் வியாபார ஸ்தலம். பாங்குக்கு வருபவர்கள் வியாபாரிகள். வியாபார முறையில் வருகின்றனரேயன்றி காற்று வாங்குவதற்கோ, ஓய்யாரமாகக் காலங்கழிப்பதற்கோ வருவதில்லை. எனவே, பாங்கின் கட்டிடம் வியாபார ஸ்தலங்களின் சமீபத்தில் இருக்கவேண்டும். அத்தகைய இடம் தற்போது குறிப்பிட்டுள்ள இடம் ஒன்றைத் தவிற வேறு எதுவுமன்று. புதிய கட்டிடம் கட்டுவதால் வேலை இல்லாத்திண்டாட்டத்தைப் போக்கலாமென சொல்லப்படுகிறது. பாங்கின் கட்டிட சம்பந்தமான காரியத்தில் வேலையில்லாத்திண்டாட்டம்பற்றிப் பேசுவது சம்பந்த மற்றதாகும். கட்டிடம் வாங்குவதைவிட வாடகைக் கட்டிடத்தில் இருப்பது மேலென்றும் அதனால் வருட மொன்றுக்கு ரூ 1200 மிச்சமென்றும் சொல்லப்படுகிறது. தமது குடியிருப்புக்காக மாளிகைகள் கட்ட முற்படும் எவரும் இக்கணக்கை சீர்தூக்கிப்பார்த்து மாளிகை கட்டாமலிருப்பது கிடையாது, வாடகை வீட்டில் என்றும் வசிக்க எவரும் விரும்புவதும் கிடையாது. அங்ஙனமிருக்க ஒரு ஜில்லாவுக்கே தலைமை பாங்காக இருக்கும் ஒரு ஸ்தாபனம் தனக்கென ஓர் சொந்தக் கட்டிடமில்லாதிருப்பது கேவலமல்லவா? மேலும், இந்த பாங்கிற்கு கட்டிட பண்டு என்று ஓர் பண்டு இருக்கிறது. இதில் லெட்ச ரூபாய்க்கு மேல் இருக்கிறது. இதனைக் கட்டிட சம்பந்தமான செலவைத்தவிர வேறு எதுவும் செய்ய முடியாது. இவையாவும் ஒருபுரமிருக்க, இன்று நமது மாகாணத்தின் கூட்டுறவு இயக்கத்திற்குத் தலைவரான ரிஜிஸ்திரார் வந்திருக்கிறார். அவர் முன்னிலையில் நாம் சச்சரவு செய்து கொள்வதும், விதண்டா விவாதம் புரிவதும் சரியல்ல. எனவே, இக்கட்டிடத்தை வாங்குவதே நல்லது.

### திரு. வடமலைக்கோனார்

திரு. வடமலைக்கோனார் கூறியதாவது:— இங்கு விஜயஞ்செய்துள்ளோர் இரு சாராரது அபிப்பிராயத்தையுங் கேட்டீர்கள். உங்களுக்கு எது சரியென்று படுகிறதோ அதன்படி நடக்க வேண்டும். எவருடைய தயவிற்கும், தாட்சண்யத்திற்கும் கட்டுப்படாமலும், பகைமைக்கு அஞ்சாமலும், ரிஜிஸ்திரார் வந்திருப்பதற்காக விசேஷ சலுகை எதுவும் காட்டாமலும், மனச்சாக்ஷிக்கு விரோதமில்லாமல், நேர்மையான முறையில், ஓட்டுக்கொடுக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

### சாதகமா? பாதகமா?

தீர்மானம் ஓட்டுக்கு விடப்பட்டது. தீர்மானத்திற்கு சாதகமாக 84 பேர்களும், பாதகமாக 122 பேர்களும் ஓட்டுக்கொடுத்தனர். இரண்டு பக்கமும் சேராமல் 22 பேர்கள் இருந்தனர்.

### அவநம்பிக்கை

தீர்மானத்தை ஆதரித்த சிலர் ஓட்டுக்கு விட்டதில் தங்களுக்குத் திருப்தி இல்லை என்றும் எழுத்து மூலமாக அங்கத்தினர்களின் அபிப்பிராயத்தைத் தெரிந்து சாதகமா? பாதகமா? என்ற முடிவுக்கு வருவது உசிதமென்றும் யோசனை கூறினர். அவர்களது அபிப்பிராயத்திற்குப் பலமான எதிர்ப்பும், ஆக்ஷேபனையுமிருந்தது. தீர்மானத்தை ஆதரித்த கோஷ்டியினர் தங்கள் வேண்டுகோள் ஏற்கப்படாவிடில் வெளியேறி விடுவதாக மிரட்டியதின் பேரில், அவர்கள் விருப்பப்படியே மீண்டும் ஓர்முறை எழுத்து மூலம் அபிப்ராயம் அறியப்பட்டது. இதனால் சுமார் ஒரு மணி நேரம் வரையில் காலதாமதமேற்பட்டது. நிகழ்ச்சிக்குறிப்பில் கண்ட காரியங்களை நடத்தத் தடை ஏற்பட்டது. நடைபெற்ற இரண்டாவது தேர்தலில் 84 பேர்கள் சாதகமாகவும், 144 பேர்கள் பாதகமாகவும் வாக்களித்தனர். இம்முறையில் இரண்டு பக்கத்திலும் சேராதிருந்த 22 பேர்கள் பாதகமாக வாக்களித்திருப்பதாகத் தெரிகிறது.

### நில விற்பனை

அடுத்தபடியாக, தென்னூரிலுள்ள திருச்சி—ஸ்ரீரங்கம் எலெக்டிரிக் சப்ளை கார்ப்பரேஷனுக்கு சமீபமான மத்திய பாங்கிற்குச் சொந்தமான ரூ 11,000க்கு வாங்கப்பட்ட நிலத்தை விற்று



விடுவது பற்றிய தீர்மானம் திரு. ஆர். ஸ்ரீனிவாச அய்யர் அவர்களால் கொண்டு வரப்பட்டது. தீர்மானம் பின் வருமாறு:—

கட்டிடக் கமிட்டியாராலும், போர்டாராலும் சிபாரசு செய்யப்பட்டபடி, பாங்கிற்கு தற்போது சொந்தமாயிருக்கும் மனையை திருச்சிறாப்பள்ளி—ஸ்ரீரங்கம் எலக்டிரிக் சப்ளை கார்ப்பரேஷனுக்கு ரூ. 8385–3–0 க்கு விற்றுவிடுவதென இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

### ஆதரவு

தீர்மானத்தை ஆதரித்துப் பேசியோர் கூறியதாவது:—நிலம் வாங்கும் காலத்தில் நிலத்தின் விலை அதிகமாகயிருந்தது. தற்போது சவுத்துவிட்டது. இக்காலத்தில் நாம் வாங்கிய விலையில் பாதி கொடுப்போர் கூட கிடைப்பது அரிது. எலெக்டிரிக் சப்ளை கார்ப்பரேஷனுடன் கலந்து பேசியதிலிருந்து நமக்கு லாபகரமான முறையில் இவ்விலையில் நிலத்தை விற்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. எனவே, இத்தீர்மான விஷயத்தில் எவருக்கும் ஆக்ஷேபனையிருக்க இடமில்லை.

### எதிர்ப்பு

தீர்மானத்தை எதிர்த்துப் பேசியோர் கூறியதாவது:— தற்போது நில விலை குறைந்திருப்பது உண்மையே. ஆனால் குறிப்பிட்டுள்ள நிலம் இருக்கும் இடம் எக்காலத்திலும் தகுந்த விலைக்குப் போகக்கூடிய ஸ்தலமாகும். எலெக்டிரிக் சப்ளை கார்ப்பரேஷனைத் தவிர வேறு எவருக்கும் இந்நிலம் விற்பது சம்பந்தமாகத் தெரியாதென நினைக்கிறோம். அவ்விதம் தெரியுமானால் போட்டி ஏற்படவும், நிலத்தின் விலை உயரவும் வழியுண்டு. மேலும், எலெக்டிரிக் சப்ளை கார்ப்பரேஷன் நாளுக்கு நாள் விரிவடைந்து வருகிறது. அவர்களுக்கு தற்போதுள்ள இடம் போதாது. நமது நிலத்தைத் தவிர அவர்களுக்கு வேறு இடம் கிடையாது. நாம் அவசரப்படாமல் சிறிது பொறுமையாக இருந்தால் வாங்கின விலைக்குக் குறையாமலும், நஷ்டம் ஏற்படாமலும் நல்ல விலைக்கு நிலத்தை விற்க முடியும்.

### பதில்

இந்நிலம் சம்பந்தமாக வேறு எவருடனும் கலக்கவில்லை என்பதும், இது சம்பந்தமான விளம்பரம் செய்யப்படவில்லை என்பதும் உண்மையே. அவ்விதம் செய்வதால், நமக்குப் பாதகமேற்படுமென்று நம்புகிறோம். எவரும் நம்மிடம் நெருங்காவிடில் கார்ப்பரேஷன் தற்போது கூறியுள்ள விலைக்கு வாங்குவதில் பின் வாங்கலாம். இதனை முன்னிட்டே ரகசியமான முறையில் பேச்சு நடத்தப்பட்டது. நாளைக் கடத்துவதால் வட்டி நஷ்டம் ஏற்படுமென்பது கவனிக்கத்தக்கது.

### புதிய யோசனை

கூட்டத்தில் பெரும்பாலோர் பத்திரிகைகளில் விளம்பரம் செய்து, போதிய கால தவணை கொடுத்து டெண்டர்கள் ஏற்று, ரூ. 8385—3—0 க்கு மேல் யார் எடுத்துக் கொள்ளுகிறார்களோ அவர்களுக்குத்தான் நிலத்தை கொடுக்க வேண்டுமென அபிப்ராயங் கொடுத்தனர். அதன்பேரில் திரு. எல். என். பரமசிவம் பிள்ளை, திரு. எம். எம். கிருஷ்ணசாமி பிள்ளை, திரு. கோ. வடமலைக் கோனார் ஆகியோர் அடங்கிய கமிட்டி நியமிக்கப்பட்டது. டெண்டர்களை ஜூன் மாதம் வரை ஏற்று ரூ 8395-3-0 க்கு மேல் கேட்போருக்கு நிலத்தைக் கொடுப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்டது.

இத்துடன் கூட்டத்தின் நடவடிக்கை போதிய அவகாசமின்மையால் பிரதிநிதிகளின் வேண்டுகோளின் பேரில் ஒத்தி வைக்கப்படவே கூட்டம் இனிது கலைந்தது.

# நமது தபால் பெட்டி

[கூட்டுறவு இயக்க சம்பந்தமான கடிதங்கள் நமது தபால் பெட்டியில் வெளிவரும். பலதிறப்பட்ட அபிப்பிராயமுடைய கூட்டுறவாளர்கள் சகலருக்கும் நமது தபால் பெட்டி இடமளிக்கும். தபால் பெட்டியில் வெளிவரும்படியான நிருபங்களில் கண்டுள்ள அபிப்பிராயங்களுக்கு ஆசிரியர் பொறுப்பாளியல்ல.]

## திருச்சி ஐக்கிய நாணயச் சங்கம்

திருச்சி நகரில் கூட்டுறவு முறையில் நடத்தப்படாத பாங்குகள் பல உள்ளன. தனவந்தர்களால் நடத்தப்படும் பல வெளியூர் பாங்குகளுக்கு கிளைக்காரியாலயங்களும் இருக்கின்றன. இவை தவிர லேவாதேவி நடத்தும் பல செட்டிமார் கடைகளும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. இவை யாவும் செழித்தோங்கி வர நம் நகரிலுள்ள திருச்சி ஐக்கிய நாணயச் சங்கம் மாத்திரம் இருக்குமிடம் தெரியாமலிருப்பதின் காரணமென்ன?

### ஐக்கிய நாணயச் சங்கத்தின் நிலைமை

சில நாட்களுக்கு முன் திருச்சி கூட்டுறவு நாணயச் சங்கத்தின் காரியாலயத்திற்குச் செல்ல நேரிட்டது. காரியதரிசியைக் கண்டு பேசும் சந்தர்ப்பம் கிடைத்தது. சங்கத்தில் டிபாசிட்டு தொகை அதிகமாக இருப்பதாகவும், அதனை மீண்டும் டிபாசிட் செய்யாதிருக்கும் பொருட்டு வட்டி விகிதம் குறைக்கப்பட்டிருப்பதாகவும், அவர் மூலம் அறிந்தேன். சங்கத்தின் நிர்வாக சபையார் இந்நிலைக்குக்காரணம் என்னவென்பதை யோசனை செய்ததாகக் காணப்படவில்லை. சங்கத்தின் நிர்வாகிகளைக் கேட்டால் இது போன்ற நிலைக்குக்காரணம் உலகமெங்கும் வியாபித்திருக்கும் வியாபாரமந்தமென்றும், எக்காலத்திலுமில்லாத பொருளாதார நெருக்கடி என்றும் கூறுகின்றனர். இன்னும் இது போன்ற சில காரணங்களைச் சொல்லுகின்றனரேயன்றி சங்கத்தின் மூலம் பொது ஜனங்களுக்கும், வியாபார முன்னேற்றத்திற்கும் எவ்வளவு தூரம் உதவி புரியலாம் என்ற முடிவுக்கு வந்தார்கள் இல்லை. அப்படி ஏதாவது செய்யக்கூடுமா? அவ்விதம் செய்ய வழிகள் ஏதாவது இருக்கின்றதா? என்பது கவனிக்கத்தக்கது.

### சில குறைபாடுகள்

திருச்சி ஐக்கிய நாணயச் சங்கம் போதிய அளவு விருத்தி அடையாதிருப்பதற்கு பல காரணங்களுண்டு. அவற்றில் முதன்மையானது அச்சங்கம் நம்மூரில் இருப்பதாக இன்றும் பலருக்குத் தெரியாத நிலையில் இருந்து வருவதாகும். யாரையாவது அது எங்கிருக்கிறதென்று கேட்டால் திருச்சி ஜில்லா அர்பன் பாங்கைக் காட்டுகிறார்கள். இதற்குக் காரணம் இந்த சங்கம் நகர மத்தியில் இல்லாமல் புத்தூரில் ஓர் மூலையில் இருப்பதாகும். புத்தூரில் இருப்பதின் காரணமாக திருச்சி வாசிகளாகிய பலருக்கும் கடன் வாங்கவாவது, டிபாசிட்டு செய்யவாவது வசதி இல்லை. அவ்விதம் சௌகரியமில்லாத காரணத்தால்தான் திருச்சியிலும், தென்னூரிலும் தனவந்தர்களால் நடத்தப்படும் கூட்டு பாங்குகளும், செட்டிமார் கடைகளும், மார்வாடிகள் கடைகளும் லேவாதேவியின் பொருட்டு திறக்கப்படுவதுடன் அவற்றின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே வருகிறது. இவற்றின் பெருக்கானது ஐக்கிய நாணயச் சங்கம் பொது ஜனங்களுக்குப் போதிய அளவு உதவியாக இல்லை என்பதையும், கூட்டுறவுப் பிரசாரம் ஜனங்களிடையே சரியாக நடைபெறவில்லை என்பதையும் காட்டுகிறது. நகரின் மத்தியிலிருக்கும் திருச்சி ஜில்லா அர்பன் பாங்கு டிபாசிட்டுவோர்களுக்கு சௌகரியமாக இருக்கிறதேயன்றி கடன் வாங்குவோருக்கும் வியாபாரிகளுக்கும் அவ்வளவு பிரயோஜனகரமானதாக இல்லை. உண்மையில் பார்க்குமிடத்து ஜில்லா பாங்கு இருக்குமிடத்தில் ஐக்கிய நாணயச் சங்கமும், ஐக்கிய நாணயச் சங்கம் இருக்குமிடத்தில் ஜில்லா பாங்கும் இருப்பது பொருத்தமுடையதாகும். திருச்சி ஐக்கிய நாணயச் சங்கம் வெகு தூரத்தில் இருப்பதால் கடன் வாங்குபவர்கள் எண்ணிக்கை குறைந்திருப்பதில் ஆச்சரியமொன்றுமில்லை. இன்னும் கொஞ்ச காலம் சங்கம் அவ்விடத்திலேயே இருக்குமானால் கூடிய விரைவில் கதவடைக்கவேண்டிய நிலை ஏற்படலாம். நான் சில காலமாக இச்சங்கத்தை திருச்சிக்கு மாற்றவேண்டுமென பிரயத்தனஞ் செய்ததுண்டு. இவ்விஷயமாக சில டைரக்டர்களிடம் நேரில் சொல்லியதுமுண்டு. எனது பிரயத்தனங்கள் யாவும் விழலுக்கிறைத்த நீர் போலாயின அதற்குக் காரணம் என்னவென்றால்:—

1. ஐக்கிய நாணயச் சங்கத்தின் டைரக்டர்கள் முக்கால் வாசிக்குமேல் கண்டோன்மெண்டு உறையூர், புத்தூர் வாசிகளாக இருக்கின்றனர். திருச்சிக்கு வருவதென்றால் அவர்களுக்கு சிரமமாக இருக்கக்கூடும்.

2. பொதுக்கூட்டத்தில் இப்பிரச்னையைப் பற்றி பேசுவதென்றால் கொண்டுவரப்படும் தீர்மானம் நிறைவேறுமென்பதில் சந்தேகமில்லை. ஏனெனில், சங்கத்தின் அங்கத்தினர்களின் பெரும்பாலானோர் உறையூர், புத்தூர் வாசிகளே. அவர்கள் தங்களுக்கு அசௌகரியம் ஏற்படுமென்று கொண்டு வரப்படும் தீர்மானத்தை ஆதரிக்கமாட்டார்கள். சங்கத்தில் அங்கத்தினர்களாக இருப்பவர்களில் திருச்சி வாசிகள் குறைவென்றே நம்புகிறேன். இதனால் அச்சங்கத்தை திருச்சிக்குக் கொண்டு வருவது இலகுவில் நடப்பதாக இல்லை.

இனியாவது சங்கத்தின் நிர்வாக சபையார் தங்களின் சிரமத்தைப் பாராமலும், சுயநலக்கருதாமலும் சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தைத் திருச்சிக்கு மாற்றினார்களேயானால் சங்கத்திற்குப் புத்துயிர் கொடுத்ததன்றி பல ஜனங்களுக்குப் பரோபகாரஞ் செய்தவர்களாவார்கள்.

### காரியாலயம் மாற்றப்படுவதால் விளையும் நன்மைகள்

திருச்சி வாசிகளில் பலர் பங்கெடுப்பதால் மூலதனம் அதிகரிக்கும். புதிய அங்கத்தினர்கள் வெளியிடங்களில் பணம் வாங்குவதை விட்டொழித்து இந்த பாங்கில் கடன் வாங்குவார்கள். திருச்சியில் நகை ஈட்டின் பேரில் பணம் கொடுக்கும் பாங்குகள் அதிகமாக இருக்கின்றதேயல்லாமல் ஸ்தாவர சொத்துக்களின் பேரில் பணங் கொடுக்கும் பாங்குகள் மிகக் குறைவு. இச்சங்கத்திற்கு வில்லங்க சர்டிபிகேட்டு, ரிஜிஸ்திரேஷன் செலவு, ஸ்டாம்பு கட்டணம் எல்லாம் குறைவாகையால் பலர் இந்த சௌகரியங்களைப் பயன்படுத்திக் கொள்ளுவார்கள். பொது ஜனங்கள் வியாபாரத்தின் பொருட்டு கடன் வாங்கவும் கொடுக்கவும் சங்க விதி இடங்கொடுக்காவிட்டாலும் சில திருத்தஞ்செய்து கொள்ளலாம்.

### புதிய சங்கம் ஸ்தாபிப்பதால் விளையும் தீமை

புதிய சங்கமொன்றை திருச்சிக்கென ஏற்படுத்திக்கொள்ளலாமென சில டைரக்டர்கள் யோசனை கூறினார்கள். புதியதொரு பாங்கு ஆரம்பிப்பதென்பது சுலபமான காரியமல்ல அப்படி ஒருக்கால் ஆரம்பித்தாலும் இன்றுள்ள பாங்கியின் லேவாதேவி குறையும். அதனால் நஷ்டமேற்படும். விசேஷ நன்மை எதுவும் உண்டாகாது. ஆகையால் இதைக் கண்ணுறும் சங்கத்தின் நிர்வாகிகளும், திருச்சி டிப்டி ரிஜிஸ்திரார் அவர்களும் தகுந்த ஏற்பாடு செய்வார்களென நினைக்கிறேன்.

திருச்சி, 13-2-34. } வி. நடராஜ அய்யர், பி. ஏ., வழக்கறிஞர்.

# இடி ! இடி !!

திருச்சி ஐக்கிய நாணயச்சங்கத்தின் காரியாலயத்தை நகரத்திற்கு மாற்றவேண்டுமென வழக்கறிஞர் திரு. வி. நடராஜ அய்யர் அவர்கள் எழுதியுள்ள கடிதத்தைப் பிரிதோரிடத்தில் பிரசுரித்துள்ளோம். "நகரபாங்குகள் மிகப் பெரியதாக இருக்கின்றன. அவ்விதம் இருத்தல் கூடாது. அது காரணமாக அவற்றின் நிர்வாகத்தில் சிரமமேற்படுவதுடன் கூட்டுறவு விருத்திக்குத்தடை ஏற்படுகிறது" என கூட்டுறவு இலாக்கா ரிஜிஸ்திரார் பெரிய குளத்தில் நடைபெற்ற மூன்றுவது நகரபாங்குகள் மகா நாட்டில் கூறியிருப்பதற்கு இக்கடிதம் ஒரு உதாரணமாக விளங்குகிறது. நகரத்திற்கு பாங்கு மாற்றப்படுவதால் உண்டாகும் நன்மைகளையும், பாங்கு மாற்றுவதற்குள்ள தடைகள் சிலவற்றையும் திரு. அய்யர் குறிப்பிட்டுள்ளார். பாங்கு நகருக்கு மாற்றப்படுவதால் விருத்தி அடையும் என்பதை நாம் ஓர் அளவு ஒப்புக்கொண்டாலும், மாற்றுவது சம்பந்தமாக அவர் கூறும் காரணங்களை நாம் ஏற்பதற்கில்லை. திருச்சி ஜில்லா போர்ட்டின் கூட்டத்திற்கு ஜில்லாவின் பல பாகங்களிலிருந்தும் அங்கத்தினர்கள் வரும்போது தென்னூர், புத்தூர், உறையூர் ஆகிய இடங்களில் வசிக்கும் பாங்கின் டைரக்டர்கள் திருச்சிக்கு வருவது அவ்வளவு கஷ்டமான காரியமென நாம் நினைக்கவில்லை இதில் சுயநலம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

சங்கத்தின் மகாஜனசபைக்கூட்டத்தில் இப்பிரசினையைக் கொண்டுவந்தால் ஆதரவு கிடைக்காதென்றும், அதற்குக் காரணம் சங்கத்தின் அங்கத்தினர்கள் பெரும்பாலும் உறையூர், தென்னூர், புத்தூர் வாசிகளென்றும் அவர்கள் யாவரும் தங்களது சௌகரியத்தை அனுசரித்து காரியாலயத்தை மாற்ற இணங்கமாட்டார்களென்றும் திரு. அய்யர் கூறுகிறார். சங்கத்தின் பெரும்பாலான அங்கத்தினர்கள் தாங்கள் இருக்கும் இடத்தில் காரியாலயம் இருக்க வேண்டுமென விரும்புவார்களாகில் அதில் குற்றமென்ன இருக்கிறது? கூட்டுறவு பாங்கானது அங்கத்தினர்களுக்காக, அங்கத்தினர்களின் சௌகரியத்தை உத்தேசித்து ஏற்பட்டதேயன்றி பிறருக்கல்ல. எனவே, உறையூர், தென்னூர், புத்தூர் வாசிகளின் கோரிக்கை நியாயமானதன்றெனக்கூற எவருக்கும் உரிமை இல்லை. மேலும், இன்று பாங்கு இருக்கக்கூடிய இடம் சொந்தக்கட்டிடமாக இருக்கக் கூடுமாகையால் இடமாற்றம் செய்வதற்கு பாங்கின் நிர்வாகஸ்தர்களுக்கு மனம் வராதிருக்குமானால் அதற்காக அவர்களைக் குறைகூறுவது முறையன்று. புதிய சங்கமொன்றை திருச்சிக்கென ஏற்படுத்திக் கொள்ளலாமென சிலர் யோசனை கூறுவதாக திரு. அய்யர் தமது கடிதத்தில் கண்டுள்ளார். இது விஷயத்தில் திரு. அய்யரது அபிப்ராயத்தை நாம் முழுமனதுடன் ஆதரிக்கிறோம். இது சமயம் பாங்கின் நிர்வாகிகளுக்கு நமது அபிப்ராயத்தைத் தெளிவாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம். பாங்கின் அபிவிருத்தியை நாடும் எவரும் இதனை ஒப்புக்கொள்ளுவார்களென நம்புகிறோம். விசாலமான பாகத்தை எல்லையாகக்கொண்டு நிறுவப்பட்டுள்ள பெரிய பாங்குகளுக்குக் கிளைக்காரியாலயங்களைத் திறப்பதே உஜிதமென பெரியகுளம் நகரபாங்குகள் மகா நாட்டைத் திறந்து வைத்தபோது ரிஜிஸ்திரார் அவர்கள் கூறியுள்ளார். அவரது யோசனையின்படி நடப்பதே மேலென்போம். திருச்சி ஐக்கிய நாணயச்சங்கத்தின் நிர்வாகஸ்தர்கள் இந்த யோசனையை ஏற்று கிரியாம்சத்தில் நடத்த முற்படுவார்களென எதிர்பார்க்கிறோம்.

## மும்மணிகள் பிரிவு

சென்ற சில தினங்களில் நாம் மும்மணிகளை இழந்துள்ளோம். திரு. வி. சிவப்பிரகாச முதலியார் அவர்களின் பிரிவால் கூட்டுறவு இயக்கமும் திரு. ரெங்கசாமி அய்யங்கார் அவர்களின் பிரிவால் பத்திரிகை உலகமும், திரு. சேஷசாயி அவர்களின் பிரிவால் மின்சார உலகமும் பெருத்ததோர் நஷ்டமடைந்துள்ளது. இம்மூவரும் இம்மூன்று துறையிலும் செய்துள்ள தொண்டினை நாம் என்றும் மறக்க முடியாது. இந்நாட்டு இளைஞர் இப்பெரியார்களைப் பின்பற்றித்தாமும் இன்புற்று நாட்டையும் பெருமை அடையச்செய்வார்களாக?



பதிவு எண் :



# குரு மருந்துகள்

எப்போதும் தங்க மெடல்களே பரிசு பெற்று வருகிறது.

## குழந்தை மருந்துகள் மிக விசேஷமானது.

குரு மருந்துகள் உபயோகமாகாத வீடுகள் கிடையாது

(1) குரு கோரோஜனை மாத்திரை—மலத்தைக் கழித்து வியாதியை போக்கும்

(2) குரு கஸ்தூரி காரமாத்திரை

(3) குரு தைலம்—மகா சஞ்சீவியாக விளங்குகிறது.

(4) குரு பால் பவுடர்—மாட்டுபாலை தாய்ப்பாலுக்கு சமானமாக்குகிறது

(5) குரு பாலர் டாணிக்—ரத்தவிர்த்திக்கு சஞ்சீவி

(6) கக்குவானுக்கு குரு K. சொட்டு மருந்து—கைகண்டது.

(7) குரு ஜீமா கழிம்பு—சகல கரப்பான்களுக்கும்

(8) சகலரண கழிம்பு—சகலவித புண்பொடிகளுக்கு

(9) வயிற்றுக் கடுப்பு மருந்து

(10) தேரை நோய்—எலும்புருக்கி நோய்க்கு.

(11) குழந்தைகள் வயிற்றுக் கட்டிக்கு

(12) கெற்ப ஊரல் என்கிற கிரந்தி ரோகத்துக்கு

☞ குழந்தைகளுக்கு இன்னும் மிக அருமையான மருந்துகள் இருக்கிறது

தங்க மெடல் பரிசுகள்—உயர்ந்த நற்சாட்சியங்கள்
சதா பெற்று வருகிறது.

டாக்டர் ஏ. மதுரம்,

Printed and Published by Dr. A. Mathuram at the Guru Medical Hall Press, Trichinopoly.



| (1) | (2) | (1) | (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |